# THE BOOK WAS DRENCHED


UNIVERSAL LIBRARY
OU_208077
UNIVERSAL LIBRARY

# கவிமணி

வித்வான் செ. சதாசிவம்

முதற் பதிப்பு : ஜனவரி 1948

Printed at KABEER PRINTING WORKS, Madras. Ms. 524
for R. 68-A



திருமதி T. A. மதுரம்மாளுக்கு மதுரமான
"மலரும் மாலையும்" கவிமணி வழங்குகிறார்

# முகவுரை

பெரியார்களைக் காண்பதே ஒரு பேறு. அதனால் ஒருவன் மனவிருள் அகன்று அறிவொளி பெறுவான் என்பது திண்ணம். அவர்கள் காட்சி, காணும் கண்ணுக்குக் காட்டும் கதிரொளி போன்றது என்னலாம். கதிரவனொளி பிறபொருள்களைத் துலங்க வைப்பதோடு தன்னைக் காணும் தன்மையையும் கண்ணுக்கு அளிக்கிறது. ஆனால், கதிரவனைப் பார்க்கும்போது அவன் முழு ஆற்றலையும், முழு வடிவினையும் இந்தக் கண்ணினால் பார்த்துவிட முடியாது. ஓரளவைத்தான், அதுவும் ஓரளவாகத்தான் காணமுடியும்.

கவிமணியவர்களைக் காணும்பேறு ஒரு தடவையல்ல, பன்னூறு தடவை எனக்கு வாய்த்திருக்கிறது. அணுகும் பாக்கியமும் கிடைத்திருக்கிறது. ஆயினும் அவர்களைப் பற்றி நான் தெரிந்து கொண்டவை யெல்லாம் மிகக் கொஞ்சம்தான். ஏன்? பாலாழி பெரிதேனும் அதில் ஆழாக்கால் முகந்தவன் ஆழாக்குப் பால்தானே பெறுவான்? அச்சிறு அளவே இச்சிறு ஏடு. இதில் அவர்களின் இனிமையை ஒருவாறு காணலாமே ஒழிய இயல்பனைத்தும் காண முடியாது. அவர்களின் வண்ணத்தைக் காணலாமே ஒழிய வடிவைக் காண இயலாது.

நீங்கள் இதனை நுகரும்போது சுவையில் சற்றேனும் குறைவு காணப்பட்டால் மாசுபடிந்த என் தலையீடுதான் அதற்குக் காரணமென்று கருதிவிடுங்கள்; பழித்துக் கொள்ளுங்கள். ஆனால் தெய்வத் தன்மை பொருந்திய திருப்பாற்கடல் என் காரணமாகப் பழிப்பெய்தி விடலாகாது. இஃது எனது பணிவான வேண்டுகோள். இவ்வளவுங்கூடக் காணுமல் முகந்தேன். தே-வி அறிய அவர்கள் வரலாறு வெளிவருவதென்பது நடவாத காரியம்.

எப்படியோ எழுதி முடித்துவிட்டேன். எழுதினதை அச்சுவாகனமேற்றி வெளியுலவுமாறு செய்யவேண்டுமே!

இக்கால நிலையில் இஃது ஒரு எளிய செயலென்று எனக்குத் தோன்றவில்லை. சற்றுத் திகைப்புத்தான். அவ்வேளையில் ஒருவர் முன்வந்தார். வேறொருவருமல்லர். கலைவாணர் நகைச்சுவையரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள்தாம். தே-வி, அவருக்குத் தெய்வம். கவிமணி யவர்கள் பேரால் என்னென்ன அறங்கள் செய்வது? என்னென்ன நினைவுக் குறிகளை நிலைநாட்டுவது என்பன போன்றவை அவரது நீங்காச் சிந்தனை. அத்தகைய கலை வாணர், கவிமணியவர்களின் வாழ்க்கை வரலாறு எழுதப் பட்டிருப்பதை அறிந்ததும் அதனைத்தாமே பதிப்பிப்ப தாகக் கூறி முன்வந்தது ஒரு வியப்பல்ல. திருவாளர் என். எஸ். கிருஷ்ணனவர்களுக்குக் கவிமணிபாலுள்ள அன்பும் மதிப்பும் எவ்வளவென்பது எனக்குத் தெரியும். ஆயினும் இதற்காக ஒரு பெருந்தொகை செலவிடக் கூடுமோ என்னும் ஐயமும் என்னுள் இருக்கத்தான் செய்தது.

இவ்வுலகில் கொடையாளிகள் பலதரத்தினர். புகழ் வேண்டிக் கொடுப்பார் பலர். வேறு யாதேனும் பயன் கருதிக் கொடுப்பார் இன்னும் பலர். ஆனால் எப்பயனையும் எதிர்பாராமல் இயல்பான மனக்கனிவால் கொடுப்போரும், அதிலும் வலக்கையால் கொடுப்பது இடக்கைக்குத் தெரியாமல் கொடுப்போரும் மிகமிகச் சிலர்தாம். இந்த வகையினரைச் சேர்ந்தவர் திரு. கிருஷ்ணனவர்கள் என்று கூறினால் அஃது உயர்வு நவிற்சியாகாது.

ஒரு கொடையாளிக்கு யாதேனும் ஒரு பொழுது உள்ளக் கனிவு தோன்றக் கூடும். அப்பொழுது ஆயிரமோ, பதினாயிரமோ, நூறாயிரமோ ஒரே கையெழுத்தில் கொடுத்துத் தீர்த்துவிடுகிறார். இரப்போர் ஒருவர்பின் ஒருவராகப் பலர் வந்து கொண்டே யிருப்பாரானால் அப்பொழுதும் இன்முகமும் இன்

சொல்லும் கொடையும் அவர் பால் காணமுடியுமோ என்பது சற்று ஐயுறத்தக்கது தான். ஆனால் எத்தனை பேர் வந்தாலும் சலிக்காமல் கோடாமல் கொடுக்கின்ற அரும் பண்பு திரு. என். எஸ். கே அவர்களிடம் இருப்பதை நாங்கள் நேரில் பார்த்தோம்.

ஒரு தீபாவளிக்கு நானும் என் நண்பர்கள் சிலரும் அவரோடு தங்க நேரிட்டது. எல்லோருக்கும் தீபாவளி ஒரு நாள்தான் என்றிருந்தோம். ஆனால் நாங்களிருந்த நான்கு நாளும் தீபாவளியாகத்தானிருந்தது திரு. என். எஸ். கே வீட்டில். தாமே குளித்து உடுத்துக் கொண் டாடும் கொண்டாட்டமா அங்கு நடந்தது? இல்லை. வருவோரை அழைத்துக் கொடுத்து மகிழும் கொண்டாட் டத்தையே இந்த நான்கு நாளும் கண்டோம். காலை ஏழு மணி முதல் இரவு ஒன்பது மணி வரையும் இதுதான். ஒருவர் இருவர் முதல் முப்பது நாற்பது பேர் வரை கூட்டம் கூட்டமாக வருகின்ற ஏழைகளுக்கும் தொழி லாளிகளுக்கும் அவரவர் வரிசைக்குத் தக இன்முகத் துடன் வாரி வாரிக் கொடுக்கின்ற காட்சியைக் கண்ணாரக் கண்டு களித்தோம்; வியந்தோம். 'இதில் என்ன ஐயா வியப்பு? இது அடிக்கடி நிகழும் நிகழ்ச்சி தானே' என்றார்கள் பக்கத்தில் நின்றவர்கள். ஒரு ஆச்சரியக் குறியும் அவர்கள் முகத்தில் காணவில்லை.


ஏதோ சில சமயங்களில் உண்டாகும் உள்ளக் கனிவால் கொடுத்துத் தீர்த்து விடுகின்ற சந்தர்ப்பக் கொடைக் குணமல்ல திரு. கிருஷ்ணனவர்கள் பால் அமைந்துள்ள தென்பதும், அஃது இயல்பானது நிலை யானது என்பதுமே இதினின்றும் வெளியாகின்றவை. சினிமாப் பட உலகில் அவர் நடிப்புக்குப் பெரும் பெருந் தொகை கொடுக்கின்றார்களே. அதன் உண்மை யென்ன? கோடிக்கணக்கான மக்கள்—அதுவும் ஏழைமக்கள் அவர்

நடிப்பை விரும்புகின்றார்கள்; அதற்காக மகிழ்வோடு பணங் கொடுக்கின்றார்கள் என்பதுதானே அதிலடங்கி யிருப்பது? இப்படி ஏழைகள் மகிழத் தாம் வாங்கிய பணத்தை அவ்வேழைகள் மகிழக் கொடுத்துவிட வேண்டு மென்பது அவர் தத்துவம் போலும். மேற்கூறிய காட்சி யைக் கண்ட எனக்கு முன்னிருந்த ஐயப்பாடெல்லாம் பறந்து போய்விட்டன. அதுமட்டுமல்ல. இந்த ஒரு புத்தகத்தைப் பதிப்பிப்பது, அதிலும் அவரது அன்புத் தெய்வமான கவிமணியவர்களின் வரலாற்றைப் பதிப் பிப்பது ஒரு வியக்கத் தகுந்த செயலா என்று கூடத் தோன்றி விட்டது. ஆயினும் என்னைப் பொறுத்த மட்டில் நான் அவருக்கு மிகவும் கடப்பாடுடையேன். அவர் அன்புள்ளத்துக்கும் கொடைக் குணத்துக்கும் தலை வணங்குகின்றேன். அவை சந்ததம் நின்று வாழ்க.

கவிமணியவர்களின் வாழ்க்கை வரலாற்றுக்கு ஒரு முன்னுரை எழுதவேண்டுமானால் அவர்களோடு நெருங் கிப் பழகியவரும் பேரறிஞருமான ஒருவர் எழுதுவது தானே முறை. ஆதலால் கவிமணியவர்களின் உழுவலன் பரும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறையில் தலைவராயிருந்தவருமான ராவ் சாகிப் S. வையாபுரிப்பிள்ளை அவர்களை இவ்வுரை நடைக்கு முன்னுரை எழுதித் தருமாறு வேண்டிக் கொண்டேன். அவர்களும் மிக்க மகிழ்ச்சியோடு இவ்வரிய முன் னுரையை எழுதித் தந்தார்கள். அவர்களுக்கும் என் மனங் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் செலுத்திக் கொள்கின்றேன்.

திருவஞ்சி நல்லூர்<br>15 - 1 - 48

செ. சதாசிவம்



பேராசிரியர் S. வையாபுரிப்பிள்ளையும்,
கவிமணி S. தேசிக விநாயகம் பிள்ளையும்

# முன்னுரை

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தற்காலத்துள்ள கவிஞர்களில் தலை சிறந்தவர்.

கவிமணியின் பாடல்களிற் சில, சிறுகுழந்தைகளின் சிவப்பூறிய மலர் வாயினின்றும் தேனினும் இனியவாய் மதுரித்துச் சுரக்கின்றன; சில, நமது பெண்களின் இனிய குரலுக்கு இனிமை அளித்து அவர்களை மாசற்ற இன்ப வுலகில் செலுத்துகின்றன; சில, இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்து இடங்கொண்டு அதனை அன்புத் தேனூற மலர்விக்கின்றன; சில, அறிவில் முதிர்ந்து, தமிழில் முதிர்ந்து, கவித்வவுணர்ச்சியிலும் முதிர்ந்து விளங்கும் அறிஞர்களது ஆன்மாவைக் குழைவித்து, இனிமை கனிந்து ரஸம் ஊறி நிற்கச் செய்கின்றன. பல பாடல்கள் பல தலைமுறைகளாகத் தமிழ் மக்களை இன்பூட்டி நிலவுமென்று உறுதிகூறலாம். 'கருணைக் கடல்' முதலிய சில பாடல்கள் என்றும் வாடா மலர்களாய் நித்திய மணங்கமழ்ந்து ஓளிரும் என்று கருதல் தகும்.

இக் கவிஞரது திண்ணிய அறிவும், பரந்த கல்வியும், ஆழ்ந்த ஆராய்ச்சியும், இவர் பாடல்களிலே தனிப்பட்ட நம்பிக்கையை யுண்டுபண்ணி விடுகின்றன. இவர் எழுதுவனவற்றிற்கெல்லாம் ஒரு தனிச் சிறப்பையும் இவை அளிக்கின்றன. இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனத்தில் விதைத்து, உண்மைப் பயிரைச் செழித்தோங்கச் செய்கின்றது. இவர் பாடல்களிலே காணும் தெளிவும் இனிமையும் இவரது உள்ளத்திலே யுள்ள

தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற் படமே யாகும்.

கவிமணியின் தமிழ் என்றும் மனத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியமாக உள்ளது. நல்ல தமிழ், நமது மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ், உண்மை நிரம்பிய தமிழ், கற்றூர்க்கும் கல்லார்க்கும், நகரத் தினர்க்கும் நாட்டுப் புறத்தினர்க்கும் ஒன்று போலவே இனிக்கும் தமிழ்: இவ்வியல்புடைய தமிழ் நமது நாட்டில் இப்பொழுது அரிதாய்ப் போய்விட்டது. இழக்கமுடியாத இவ்வரிய செல்வத்தைப் பல ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் நமக்கு அளித்தவர் நமது கவிஞர் பெருந்தகை தேசிக விநாயகம் பிள்ளையே.

கவிமணியின் வாழ்க்கையின் அழகுதான் என்ன? வாழும் இடம் புத்தேரி; ஒரு சிற்றூர்; நாகர் கோவில் நகரத்திற்குச் சுமார் 2 மைல் வடக்காக உள்ளது; வயல் நிலங்கள் முற்றும் சூழ்ந்தது; நாகர் கோவிலிலிருந்து சென்று திரும்பும் 'பஸ்' அரவத்தைத் தவிர வேற்றரவம் இல்லாதது; அமைதி நிரம்பிய ஊர்; எளிமை எழில் கொண்டிருக்கும் ஊர். ஆசிரமம் என்று சொல்லத்தக்க சௌகரியமான ஒரு சிறு வீடு. இங்கே எத்தகைய உத்தம புருஷர் வசித்து வருகின்றூர்! தமது அருமை மனைவியும், அன்புடை மருகர் குமாரசுவாமிப் பிள்ளையும் அவர் மனைவியும் செய்து வரும் அன்புப் பணிவிடைகளை ஏற்று, அமைதி நிரம்பிய உள்ளத்துடன், எளிதாய் இவர் வாழ்கின்றனர். இவர் வாழ்விலே அவா, வெகுளி, முதலியன அறவே கிடையா. தம்மை விரும்பிவரும் மனமொத்த அன்பர்களோடு உறவு, அவர்களுடன் சல் லாபம், அவர்கள் இல்லாத சமயங்களில் ஆங்கிலப் பெருங்

கவிஞர்களின் கவிதையுறவு, கல் வெட்டு, சரித்திரம் முதலியவை பற்றிய ஆராய்ச்சி, தமிழ்க் கவிதையின் கூட்டுறவு, அன்பிழைந்த மனத்தோடு ஆற்றும் உபகாரச் செயல்கள் : இவைகளால் கவிமணியின் தினசரி வாழ்வு நிரம்பி இனிது செல்கின்றது.

நல்லா றெனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

என்ற தமிழ்வேதக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். எவரும் எவ்வகையிலும் துன்புறச் சகியாத உள்ளம் படைத்தவர்.

இக் கவிஞரைப் பற்றி நமது தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா ?

இச் சிறுநூல் இப்பெருங்கவிஞரது வரலாற்றையும் சிறப்பியல்புகளையும் பற்றி விரித்துக் கூற முயல்கிறது. இம் முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளதென்றே சொல்லுவேன். சிறந்த முறையில், தெளிந்த நடையில், சுவையோடு இந்நூலை எழுதியிருப்பது நம் இதயத்தை மகிழ்விக்கிறது.

இதனை இயற்றியவர் நமது நாட்டு இளந் தமிழாசிரியர்களுள் ஒருவர் ; கவிமணியின் அன்பை விசேஷமாகப் பெற்றவர். இப்படிச் சொல்லிவிட்டால், இதை விடப் பெரிய தகுதி ஏதேனும் வேண்டுமா ? இவரிடமுள்ள தமிழுணர்ச்சியும், தமிழ்ப் பெரியார்கள் மீதுள்ள பற்றும், பிற நல்லியல்புகளும் மிகப் பாராட்டத்தக்கன. இவ் ஆசிரியர் மேன்மேலும் பல சிறந்த நூல்கள் இயற்றித் தமிழ் நாட்டில் புகழ்பெற்று விளங்குமாறு இறைவன் அருள்புரிக.

**

காகிதப் பஞ்சமும் அச்சுக்கூடப் பஞ்சமும் இக் காலத்தில் தாண்டவமாடுகின்றன. இவற்றைப் பொருட் படுத்தாது, அன்பும் ஊக்கமும்கொண்டு சிறந்த பதிப்பாக இந்நூல் வெளிவருதற்கு நகைச்சுவையரசு திரு. என். எஸ். கிருஷ்ணன் உதவியுள்ளார்கள். தமிழ் மக்களின் மனப்பூர்வமான நன்றி இவர்களுக்கு உரியது.

மைலாப்பூர், சென்னை
10 – 12 – 47

எஸ். வையாபுரிப்பிள்ளை

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | ... iii |
| | முன்னுரை | ... vii |
| 1 | கவிஞர் நிலை | ... 1 |
| 2 | முன்னோர் வரலாறு | ... 4 |
| 3 | பிறப்பும் இளமைக் கல்வியும் | ... 5 |
| 4 | இளமைக்கால நிகழ்ச்சிகள் | ... 9 |
| 5 | உயர்தரப் படிப்பும் ஆசிரியத் தொழிலும் | ... 21 |
| 6 | பொதுநலத் தொண்டு | ... 31 |
| 7 | மருமக்கள் வழி மான்மியம் | ... 36 |
| 8 | ஓய்வும் உபசரிப்பும் | ... 45 |
| 9 | கவிதைப் பண்பு | ... 56 |
| 10 | இசைப்புலமை | ... 70 |
| 11 | அன்புள்ளம் | ... 78 |
| 12 | பண்பட்ட மனம் | ... 91 |
| 13 | கவிமணியும் கலைவாணரும் | ... 105 |

# 1. கவிஞர் நிலை

நாமறிந்த வரையில் தமிழ்ப்புலவர்கள் எவரும் தம் காலத்தில் மதித்துப் போற்றப்பட்டதாக இல்லை. அதிக மானுக்கு அமைச்சர் போன்றிருந்த ஔவையாரும், சோழனது அவைக்களப் புலவராயிருந்து அவன் வேண்டு கோளின்படி இராமாயணம் பாடிய கம்பரும், குலோத் துங்க சோழனுடைய குருவாயிருந்த ஒட்டக்கூத்தரும் சிறப்பிக்கப்பட்டதை ஒரு பெருமையாகச் சொல்ல முடியுமா? இவர்களன்றி, பிறர் புகழ்ச்சிக்கு அடிமை யாகாது பொதுமக்களுக்குப் பயன்படுதலையே நோக்க மாகக்கொண்டு அறிவையும் உணர்ச்சியையும் எழுப்ப வல்ல கவிதைகள் புனைந்த கவிஞர் எவர்தாம் தம் காலத்தில் போற்றப்பட்டார்? அறிவும் நாகரிகமும் வளர்ந்த பிற்கால நிலைதான் யாதாயிருக்கின்றது? இன்று கவி சுப்பிரமணிய பாரதியாரை 'வர கவி' என்றும், 'மகாகவி' என்றும் போற்றுகிறார்கள், புகழ்கிறார்கள். 'கவிச் சக்கரவர்த்தி' என்றுகூடப் புகழ்கிறார்கள். அவருக்குத் திருவிழாக்கள் கொண்டாடுகின்றார்கள்; நினைவு நிலயங்கள் நிறுவுகின் றார்கள். இவையெல்லாம் எப்பொழுது? அவர் கால மாயின பல்லாண்டுகளுக்குப் பின்னர்தானே! இருந்த காலத்திலோ அவரை யாரும் அண்டவில்லை, ஆதரிக்க வில்லை; அவர் பாடல்களைப் போற்றவுமில்லை. அர சாங்கம் பாரதி பாடலைக் கண்டு அஞ்சி எதிர்க்கத் தொடங்கிய போதுதான் அதில் ஏதோ இருக்கிறது போலும் என்று கருதி மக்கள் விழித்துப் பார்க்கத் தொடங்கினர்.

அரசாங்கத்தின் எதிர்ப்புச் சக்தியானது பாரதியார் பாடல்களின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழித்துணை

புரிந்தது. இன்று பாரதியார் இருந்தால் அவரைப் பொன்னூசனத்திருத்திப் பொன்னாடை போர்த்தவும், உச்சி மேல் தாங்கி ஊர்வலம் வரவும் தமிழ்மக்கள் தயாரா யுள்ளனர். ஆனால் அவர் இல்லையே! ஒரு கவிஞரை அவர் வாழ்நாளில் ஆதரித்துப் போற்றும் பேற்றைத் தமிழர் இந்நூற்றாண்டின் முற்பகுதிவரை பெற்றாரில்லை.

இப்பொழுதோ பிறமொழியாளரெல்லாம் வியக்குமாறு கவிஞர்களைப் போற்றத் தலைப்பட்டு விட்டார்கள் தமிழர்கள். புகழ்மொழிகளும் பாராட்டுரைகளும் அளிப்ப தோடல்லாமல் பட்டங்கள் சூட்டி மகிழ்கின்றார்கள்; பொன்னாடை போர்த்துப் புனைகின்றார்கள்; நினைவு மலர்கள் வெளியிடுகின்றார்கள். அவையும் பிறவும் காணிக்கை வைத்துக் களிக்கின்றார்கள்; கவிஞரின் பாடல்களைத் திரட்டி அழகிய முறையில் பதிப்பித்துச் சிறுவர் சிறுமியர், பெண்கள் ஆண்கள், கற்றார் கற்பார் முதலிய யாவர்க்கும் பயன்படச் செய்கின்றார்கள்; இன்னும் என்னென்னவோ சிறப்புக்களை யெல்லாம் செய்கின்றார்கள், அன்னோர் சிறந்த இன்றமிழ்க் கவிஞர்கள் என்ற காரணத்திற்காக.

'இன்று தமிழ் நாட்டிலுள்ள யாவராலும் எவ்விதக் கட்சிச் சார்புமின்றிப் போற்றப்படும் உயிர்வாழ் கவிஞர் ஒருவரின் பெயர் கூறு' என்று ஒரு பள்ளிச் சிறுவனிடம் கேட்பதாயினும் கிடைக்கும் விடை யாதாயிருக்கும்? கவிமணி – தேசிக விநாயகம் பிள்ளை – தே-வி – பாட்டா என்னும் பெயர்களைத் தாம் கேட்க முடியும். ஏன்? சிறுவர் முதல் முதியோர் வரையுள்ள யாவர் உள்ளத்திலும் எளிதாக நுழையும் ஆற்றல் இவருக்குத்தான் இருக்கின்றது.

ஒரு நாள் ஓர் இளஞ்சிறுவன் படம் பார்ப்பதற்கென்று ஒரு புத்தகத்தை எடுத்தான். 'மலரும் மாலை

யும்' தான் அது. சிறுவனுக்கு ஐந்தரை யாண்டுகள் ஆகின்றன. இன்னும் நன்றாக எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியாது. பையன் படங்களை யெல்லாம் பார்த்து முடித்தான். புத்தகத்தை மூடிவிட்டு மேலட்டையைப் பார்த்தான். எழுத்துக் கூட்டி வாசிக்கத் தொடங்கினான். முதலிரண்டு எழுத்துக்களையும் சேர்த்துத் 'தேசி' என்றான். நாங்கள் ஒன்றும் பேசாமல் பார்த்துக் கொண்டே யிருந்தோம். எஞ்சியுள்ள எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்லிக் கூட்டினான். முடிவில் வாசித்தான் 'கவிநாயகம்' என்று.

'பிள்ளை' என்பதை வாசிக்க என் நண்பர் விட வில்லை. அதற்குள் வாரி யெடுத்து மகனை முத்தமிட்டார். அதனைக் கேட்டதும் எங்களுக்குண்டான வியப்புக்கு அளவில்லை. கபடற்ற உள்ளம் படைத்த குழந்தைகள் தெய்வத்தன்மை பொருந்தியவை என்பார்கள். ஆகவே, இந்தப் பொருள் நிரம்பிய உண்மை மொழி தெய்வச் சொல் போல எங்களுக்குத் தோன்றிற்று. 'கவிநாயகம்' என்ற இந்தப் பெயர் எவ்வளவு பொருத்தமானது. இதனை யுணர்வதற்கு நம் 'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க' த்துக்குத்தான் எத்தனை யாண்டுகள் வேண்டி வந்தன, நமது பையன் ஒரு முறை புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டுப் பெயர் கொடுத்து விட்டானே என்று நாங்கள் பேசிக் கொண்டோம்.

உண்மை. இப்பெயருக்கேற்ற பொருளாய்த் திகழும் நம் பெரியாரின் வரலாறு தமிழ் மக்களால் நன்கு அறியப் படவேண்டுவது இன்றியமையாததல்லவா? இவ்வுலகில் புகழை விரும்புவோரே மிகப்பலரும். அதனை விரும்பா தோர் மிகமிகச் சிலர். அவர்களுள் பெரிதும் ஒதுக்கமுற்று வாழக் கருதுபவர் நம் பெரியார். ஆதலின் இவர் வரலாறு முழுமையும் விரிவுபட எழுதுவது சற்று அருமையான

றாகவே இருக்கின்றது. எவரேனும் தம்மை மேம் படுத்தும் நோக்கத்துடன் வரலாறுகள் கேட்கின்றார் என்றறிந்தால் அவற்றைச் சொல்ல மறுத்து விடுவதோடு மிக்க நயமான மொழிகளால் அவர் முயற்சியையும் தடுத்து விடுவார்கள். சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன் வெளி வரவேண்டிய இவ்வுரைநடை முட்டுற்று நின்றதற்குக் காரணம் கவிமணியவர்கள் இட்ட தடையுத்தரவும், தெளிவான வரலாறு கிடையாமையும்தாம்.

ஆயினும் சிறுகச் சிறுக அவர்களுடைய வரலாறுகள் வெளிவரலாயின. அண்மையில் உயர்திரு. சுத்தானந்த பாரதியவர்களால் எழுதப்பட்ட தனிப் புத்தகம் ஒன்றும் வந்துவிட்டது. ஆகவே என் முயற்சியும் புதுப்பிக்கப் பட்டது. இப்போது இஃது அவ்வாறு வெளிவந்த வெளி யீடுகள் பலவற்றின் துணைக் கொண்டும், பலபோழ்தும் நேரில் பேசிக் கொண்டிருக்குங்கால் கிடைத்த கசிவுகளின் துணைக் கொண்டும் எழுதப்படுகின்றது.

## 2. முன்னோர் வரலாறு

பிள்ளையவர்களின் முன்னோர் நாஞ்சில் நாட்டிலுள்ள தேரூர் என்னும் ஊரைச் சார்ந்தவர்கள். வேளாண் மரபினர். சில தலைமுறைகளுக்கு முன் அம் மரபி லுதித்த ஒருவர் தேரூரை விட்டு நாகப்பட்டினம் சென்று வணிகத்துறையில் ஈடுபட்டார். பெரும் பொருளும் திரட்டினார். அவ்விடத்தையே தம் இருப்பிடமாகக் கொண்டார். அவர் வழிவந்தவர்களும் அங்கேயே வாழ லானார்கள். இவர்கள் யாவரும் தம் ஒழுக்கச் சிறப்பால் சைவ முதலியார்களாகவே மதிக்கப்பட்டனர். அக் கிளையில் வந்த ஒருவர் சுவாமிநாத முதலியார் எனப் படுபவர். சிறந்த செல்வவான். கப்பல் வைத்து வாணிபம்

நடத்தினவர். தம்பால் வந்தார்க்கெல்லாம் உணவளித்து உதவும் பெருமனம் படைத்தவர்.

இவருக்குக் கணபதி முதலியார், நடராஜ முதலியார் என இரு ஆண்மக்களும், பர்வதபத்தினியம்மாள் என ஒரு பெண் மகளும் உண்டு. இப்பெண்மகளார் நாஞ்சி னட்டைச் சார்ந்த 'தாமரைக் குளம்' ஊரிலுள்ள மாணிக்கவாசகம்பிள்ளை என்னும் தமிழ்ப் பேரறிஞருக்கு மணம் செய்து கொடுக்கப் பெற்றார். இவர் 'காரியந்தாதி' என்னும் பிரபந்தம் பாடிய கல்விமான். இவர்களின் மகளார் ஆதிலட்சுமி அம்மையார். இவருடன் பிறந்த கண்ணுபிள்ளை என்பவர் சிறந்த பௌராணிகர். கம்ப ராமாயணத்தில் நல்ல பயிற்சி யுள்ளவர்.

இவர்கள் சிறுவர்களாயிருக்கும் போதே வாணி பத்தில் பொருட்கேடு ஏற்பட்டு விட்டமையால் கணபதி முதலியாரைத் தவிரவுள்ள ஏனையோரெல்லாம் தம் முன் னோர் ஊராய தேரூருக்கு வந்து விட்டனர். இவ்வூரிலேயே சிறந்த குலத்திற் பிறந்தவரும், ஆங்கிலக் கல்வி கற்ற வரும், தமிழபிமானம் மிக்கவரும், உப்புப் பண்டக சாலையில் அரசாங்க அலுவல் பார்த்து வந்தவருமான ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிவதாணுபிள்ளை. ஆதி லட்சுமி அம்மாள் இவருக்கு வாழ்க்கைத் துணைவியரானார். இவ்விருவரிடத்தும் கனிந்த அன்புக் கனிதான் திரு. தேசிகவிநாயகம்.

## 3. பிறப்பும் இளமைக் கல்வியும்

பிள்ளையவர்கள் கொல்லமாண்டு 1050 ஆடித் திங்கள் 14 ஆம் நாள் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந் தார்கள். பெற்றோருக்கு ஆண்மகன் இவர் ஒருவரே யாதலால் மிக்க அருமையுடன் வளர்ந்து வந்தார். இள

மையில் தேரூரிலுள்ள துவக்கப் பாடசாலையில் சேர்ந்து படித்தார். நாஞ்சினுட்டு மக்கள் தம் தாய்மொழியைக் கற்பதற்குக் கூட வகையற்றிருந்த காலம் அது. பிள்ளையவர்களும் மலையாளமே கற்க வேண்டியவரானுர். ஆயினும் தமிழறிஞரின் வழிவந்த பிள்ளைக்கு, இயற்கையாகவே தமிழ் மொழியில் ஓர் ஆர்வம் ஏற்படலானது. அது நிறைவேறுதற் கேற்ற வாய்ப்பும் கிடைத்தது.

தேரூரை யடுத்துள்ள ஏரியின் நடுவே, போக்கு வரவுக்கென அமைந்த பாதை தவிர ஏனைய பகுதிகள் நீரால் சூழப்பட்டுள்ள ஓர் அழகிய திட்டு இருக்கின்றது. இதற்கு வாணந்திட்டு என்பது பெயர். அதில் சிவன் கோவிலும் அந்தணர் வீதியும் உண்டு. அன்றியும் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த மடமும் உமாமகேசுவர சிவாசாரியார் மடமும் இருக்கின்றன. அக்காலத்தில் சைவ சமய வளர்ச்சியையும் தமிழ் வளர்ச்சியையுங் கருதி, நாஞ்சினுட்டுச் செல்வர்கள் பலர் அங்கங்கே மடங்கள் கட்டி, வருவாய்க்கான நிலபுலன்களும் ஏராளமாக விட்டிருந்தனர். இவற்றை யேற்றுத் திருவாவடுதுறை, தருமபுரம் முதலான ஆதீனத்தார் தமிழ்ப் பேரறிவும் சமய நுணுக்கமும் வாய்ந்த சைவத் துறவிகளை அமர்த்தி இவ்வறங்களைச் செவ்வனே நடத்தி வந்தனர். இத்தகைய மடங்கள் பலவற்றை நாஞ்சில் நாட்டில் அங்கங்கே காணலாம். இன்றோ மடங்களெல்லாம் குட்டிச் சுவர்களாகவும், சப்பாத்திக் கள்ளிகளின் அரண்களாகவும் இருக்கின்றன. இவற்றைச் சார்ந்த நிலங்களினின்று வரும் வருவாயைப் பிரிக்கக் குத்தகைக்காரர்கள் மட்டும் மிக விழிப்பாக இருக்கின்றனர். இந்நிலை அடியோடு மாறுபட வேண்டும். நஞ்சை மக்கள் விழித்தால் ஆதீனத்தார் ஆவன செய்வார்கள்.

பிள்ளையவர்களின் இளமைப் பருவத்தே வாணந்திட்டு மடத்தில் தலைவராயிருந்தவர் சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் பெரியார். இவர், இலக்கிய இலக்கணங்களிலும், சமயத்துறைகளிலும் பேரறிவு வாய்க்கப் பெற்றவர். அம்மடம் குளக்கரையில் மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து குளத்திலிறங்குவதற்கு நேர்த்தியான படித்துறை ஒன்று உண்டு. பிள்ளையவர்கள் இளமையில் நாள் தோறும் குளிக்கச் செல்வது இந்தத் துறைக்குத்தான். அதற்குக் காரணம் இவை:— பெண்களும் பிறரும் வராத ஒதுக்குப் புறமாயிருப்பது ஒன்று; இன்னொன்று— உமிக்கரியும் திருநீறும் இங்கேயே கிடைக்கும் என்பது. ஆகவே நாள்தோறும் சென்று குளித்து, மடத்தில் நடக்கும் பூசை பாராயணம் முதலியவற்றைக் கவனித்துவரும் இவருக்கு நாளடைவில் அங்கே ஓர் ஈடுபாடு உண்டாயிற்று.

பிள்ளையவர்களும் வேறு சிலரும் தம்பிரானிடம் தமிழ் கற்கத் தொடங்கினார்கள். பள்ளிப் படிப்பும் முறையே நடைபெற்று வந்தது. துவக்கப் பாடசாலைக் கல்வி முற்றியதும், கோட்டாறு ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்தார். இக்காலத்தில் அஃதாவது பிள்ளையவர்களின் பத்தாவது வயதில் தந்தையார் காலகதியானார். வேறு சிறப்பான ஆதரவுக ளில்லாமையால் தாயாரே மகனது படிப்பைக் கண்காணித்து வரவேண்டியவரானார். பிள்ளையவர்கள் நாள்தோறும் கோட்டாற்றிலே சென்று படித்து வந்தாலும் தம்பிரானிடம் பாடங் கேட்பதில் தவறுவதில்லை. இலக்கிய இலக்கணங்கள், தேவார திருவாசகங்களெல்லாம் சிறுகச் சிறுகப் பாடமாயின. அப்பருவத்திலேயே கவிகள், சரித்திரக் குறிப்புக்கள் என்றால் பிள்ளைக்கு அவற்றில் ஓர் தனி ஆர்வம். அவற்றையெல்லாம் அப்படியே மனத்தில் பதியவைத்துக்

கொள்ளும் ஆற்றலும் இருந்தது. ஐந்தாறுண்டுகளில் தமிழறிவு நன்கு தலைக் கூடிற்று. நாளடைவில் பாடல்க ளியற்றும் வன்மையும் சிறப்பாக அமையலாயிற்று.

அக்காலையில் திருநெல்வேலி மடத்தைச் சார்ந்த உமை யொருபாகக் குருக்கள் கோட்டாற்றுக்கு வந்தார்கள். அவர்களிடம் பிள்ளையவர்கள் சிவதீட்சை பெற்றுக் கொண்டார்கள். தமக்கு ஞான ஒளி அளித்த அத்தேசி கரைப் புகழ்ந்து அப்போது பாடிய பாடல் வருமாறு :—

'வேறு மொருதுணையான் வேண்டுவனோ †வேணுவனம்
தேறுமுமை யோர்பாகத் தேசிகனே! — கூறுமெனக்
கெய்யாப் பிறவி யிருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது.'

சில ஆண்டுகளில் சாந்தலிங்கத் தம்பிரான் இருந்த இடத்துக்குச் சங்கரலிங்கத் தம்பிரான் என்பவர் வந்து சேர்ந்தார். இவர் முன்னையவரைப் போலக் கல்வியிற் பெரியரல்லராயினும் கற்றலிலும் கேட்டலிலும் பேரவாக் கொண்டவர். சைவ ஒழுக்கத்தில் தலைநின்றவர். இவ ருக்குத் ‡தே-வி அவர்களிடம் சிறப்பாக ஒருவகை விருப் பும் மதிப்பும் உண்டு. தே-வி சில வேளைகளில் விளை யாட்டாகப் பாடுகின்ற பாடல்கள் இவரை வியப்புடன் கலந்த மகிழ்ச்சியில் ஆழ்த்திவிடும். அவற்றை வாயாரப் புகழ்வார். 'அப்பனே! நீ பிற்காலத்தில் பெரியவனவாய்' என்று ஆசீர்வதிப்பார். இவற்றையெல்லாம் வெறும் உபசார மொழி என்றே தே-வி கருதுவது வழக்கம்.

---

†திருநெல்வேலி. ‡தேசிக விநாயகம் என்னும் பெயருக்குப் பதிலாகத் தே-வி என்றே அழைப்போம்.

# 4. இளமைக் கால நிகழ்ச்சிகள்

ஒரு சமயம் தம்பிரான் மதுரைக்குச் சென்றிருந்த போது சா. போற்றிக்கண்ணு என்பவனைக் கண்டு கொஞ்சம் பணம் கொடுத்து உருத்திராட்சம் வாங்கி அனுப்பும்படி ஏற்பாடு செய்திருந்தார். இவன் மடங்களை அண்டிப் பிழைப்பவன். எவரையும் ஏமாற்றுவதில் கைதேர்ந்தவன். இத்தகைய ஆசாமியிடம் பணம் வந்து அகப்பட்டால் விடுவானா? சுவாமியாரை ஏமாற்றத் தலைப்பட்டான். சுவாமியாரோ உருத்திராட்சம் அனுப்பும்படி பலவாறு தொந்தரவு கொடுத்துக் கொண்டே யிருந்தார்.

வெகுநாட்களுக்குப் பிறகு மதுரையிலிருந்து தபால் வழியில் சுவாமியார் பேருக்கு ஒரு பொட்டலம் வந்தது. அதை வாங்கிப் பார்த்தார். அதில் உருத்திராட்சம் இல்லை யென்பது அதன் வெளியமைப்பிலிருந்தே விளங்கி விட்டது. உடைக்காமலே திருப்பிக் கொடுத்துவிட்டார். அவருக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. நம் தே-வியை அழைத்தார். 'அப்பா! அந்தப் போற்றிக் கண்ணு நம்மை ஏமாற்றி விட்டான். அவன்மீது ஒரு கவிபாடு; அவனுக்கு அனுப்பவேண்டும்' என்றார். தே-வியும் அப்படியே பாடிக் கொடுத்தார். அதன் ஒரு பகுதி இது:—

'நெஞ்செரிய வயிறேங்க நினைக்கும் போது
நித்திரைகண் விட்டொழிய......
... ... ... ... ... ... ...
... ... ... .... சா போற்றிக் கண்ணு† நீயே.'

---

†விடுபட்ட பகுதி தே-விக்கு நினைவில்லை.

இதைக் கொடுக்கும் பொழுதே 'சுவாமி! ஏனோ பாடல் அமங்கலமாக அமைந்துவிட்டது. என்ன நேருமோ தெரியவில்லை' என்று கூறிக் கொடுத்தார். அதுபோலவே ஆகிவிட்டது. போன கடிதத்தை வாங்குதற்குப் போற்றிக்கண்ணு அங்கில்லை. வரும் நாகபாசத்துக்கு அஞ்சி எமபுரம் போய்விட்டான் அவன். கடிதம் திரும்பி வந்தது. சுவாமியார் திகைத்தே போனார். அவர் தே-வியைப் புகழ்ந்ததற்குக் கணக்கு வழக்கேயில்லை. குருவியிருக்கப் பனம்பழம் விழுந்த கதையாய் முடிந்ததற்குத் தே-வியைப் புகழ்ந்தோ தூற்றியோ என்ன பயன்?

இளமையில் தே-வியிடம் நினைவாற்றல் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது எந்தப் பாடலையும்—ஏன்? வசனப் பகுதியையுங்கூட ஒன்றிரண்டு முறை பார்த்து விட்டால் அவை கண்முன்னால் நிற்பதுபோலத் தோன்றுமாம். தே-வியின் இளமைக்கால நிகழ்ச்சி ஒன்று இதனை மெய்ப்பித்து நிற்கின்றது.

ஒரு சிவராத்திரி கழிந்த மறுநாட் காலை தே-வியும் தோழர்களும் மடத்துக்கு வந்தனர். அப்போது சுசீந்திரம் பேரம்பலவாணர் கோவிலினின்று கட்டளைப் பிரசாதமாக பொங்கல், அப்பம், வடை முதலியவை ஏராளமாகக் கொண்டிறக்கப்பட்டிருந்தன. தம்பிரான், வந்த சிறுவர் யாவரையும் வரிசையாக உட்கார வைத்துக் கட்டளைப் பிரசாதத்தைக் கொடுக்கத் தொடங்கியவர், அதைப் பெறுவதற்கு ஒரு கட்டளை விதித்தார். 'தம் கையிலிருக்கும் தேவாரத் திரட்டினின்று முதலில் தாம் ஒரு பாடலைப் படிப்பது, பின், சிறுவருள் ஒருவனிடம் புத்தகத்தைக் கொடுத்து அதனையே பார்த்துப் படிக்கச் செய்வது, புத்தகத்தை வாங்கிக்கொண்டு பின்னுமொரு முறை தாம் சொல்ல, உடனே அவர்கள் மனப்பாடமாக

அப்பாடலைச் சொல்லி விடவேண்டும்; இங்ஙனம் சொன்னால் பாட்டொன்றுக்கு ஒருவடை அல்லது அப்பம் வீதம் கொடுக்கப்படும்' என்பதுதான் அக்கட்டளை.

சரி என்றனர் யாவரும். சோதனை தொடங்கிற்று. அப்பமும் வடையும் ஒவ்வொன்றாகத் தே-வியின் முன்னர் வரலாயின; பத்தாயிற்று, இருபதாயிற்று, சற்று நேரத்தில் முக்கால் பங்குக்கு மேல் வந்து குவிந்து விட்டன. ஏனைய தோழர் யாவரும் தே-வியையும் அப்பம் வடைகளையும் பார்த்துப் பார்த்து நாவூறி நின்றார்கள். நினைவாற்றல் தான் அவர்களுக்கு உரிமையே ஒழிய அதனால் பெறும் பயன் அவர்களுக்கு மட்டுமா? ஆகவே தின்பண்டங்களைத் தோழர்கள் யாவரும் பகிர்ந்து மகிழ்ச்சியோடு உண்டனர்.

இளமையிலேயே தே-விக்குப் பாடும் வன்மை இயற்கையாக அமைந்திருந்தது. இலக்கணங் கற்பதற்கு முன்னருங்கூட எந்த ஒரு பாடலைப் பார்த்தாலும் அதன் சந்தப் போக்கைப் பார்த்துக்கொண்டு அதுபோலப் பாடி விடமுடியும். இவ்வாற்றலினால் அக்காலத்தில் இவர்கள் பாடிக்குவித்த வேடிக்கைப் பாடல்கள் எண்ணிறந்தவை. தம் நண்பர்களை நையாண்டி செய்து பாடிய பாடல்களும் பல. அவை பலவும் அரைகுறையாகவே தே-வியின் நினைவிலிருக்கின்றன. அவற்றுட் சிலவும் அவர்களுடைய நண்பர்களைக் காட்டிக் கொடுப்பனவாதலால் இங்கே தரப்படவில்லை. ஆயினும் ஒன்றைமட்டும் தருகின்றோம்.

தேரூரில் வாழ்ந்த ஒருவர் பூப்பெய்தா இளம் பெண்ணொருத்தியை மணம் முடித்து வைக்கப்பட்டார். அவர் மடத்துக்கு வரும் தே-வியின் நண்பர்களுள் ஒருவர். இளமை மணம் பலவிதத்திலும் இவருக்கு இன்னலைக் கொடுத்தது. வீட்டுக் கவலை ஒருபுறம்; மனைவி பூப்பெய்தாக் கவலை இன்னொருபுறம். ஆக வாழ்க்கையில்

வெறுப்புத் தட்டிற்று. அதனால் ஒருவரிடமும் சொல்லாமல் எங்கோ போய்விட்டார். சுவாமியாருக்கு மட்டும் அவர் யாதோ ஒரு மடத்திலிருக்கும் செய்தி பின்னால் தெரியவந்தது.

சில காலத்திற்குப் பின் அப்பெண் பூப்பெய்தினாள். இச்செய்தியினையும், சுற்றத்தாரின் வருத்தத்தையும் தம்பிரான் உணர்ந்தார். தே-வியை அழைத்து 'தம்பீ! ஒரு பாட்டெழுதிக் கொடு; சுவாமிக்கனுப்பி அவனை இங்கே வரவழைக்க வேண்டும்' என்றார். அப்போது தே-வி கொடுத்த பாடல் இது :—

மந்தாரை மலர்ந்திருக்க மதுவுண்ணும் வண்டெங்கே?
மாமுல்லைக் கொடிபடர வளருங்கொள் கொம்பெங்கே
சிந்தாத மணியிருக்க ஒளியெங்கே சென்றதெனத்
தேளூரில் பலர்கூடித் தெரிந்துகொளக் கேட்டதற்கு
நந்தாத பரஞான அமுதுண்டு தெவிட்டெறியும்
நற்பரமா னந்தனருள் பெறச்சென்ற நண்பாநீ
வந்தாலே மறுமொழியும் வகுப்பமெனச் சோதிடநூல்
வல்லாருங் கூறுகின்றார் வகையேது மறியேனே.

இப்பாடலைக் கண்டதும் நண்பர் ஓடோடியும் வந்தார். மனைவியுடன் கூடி இன்புற்று வாழ்ந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை கவிமணியவர்கள் தம் பாடல்களை உரிய பெயரோடு வெளிப்படுத்தினதில்லை. பத்திரிகைகளில் வந்தனவெல்லாம் புனை பெயர்களே. இன்றும் டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள், வையாபுரிப் பிள்ளையவர்கள் போன்றோர் இழுத்து விடாமலிருந்தால் தேசிக விநாயகம் பிள்ளை என்ற பெயரைப் பத்திரிகை யுலகமே பார்த்திருக்க முடியாது. இதற்குக் காரணம் புகழ்பெற விருப்

பின்மையோ, அன்றித் தம் கவிதைகளை வைத்துக் கொண்டு பிறர் அனுபவிக்கின்ற இன்பத்தைத் தாம் மறைந்து நின்று கண்டு களிக்க வேண்டுமென்னும் அவாவோ, யாதோ அறியோம். ஆனல் இவர்கள் போக்கு ஒன்றினை மட்டும் நிதரிசனமாகக் காட்டுகின்றது. பொருளும் புகழும், விரும்பாதவர்களையே சென்றடைகின்றன என்பது தான் அது.

தே-வி ஆங்கிலப் பள்ளியில் பயிலுங்காலத்தில் ஓர் அரிய பொருள் பற்றிய பாட்டொன்று தோன்றிற்று. அது சொல்லழகும் பொருட் பொலிவும் சிறந்ததா யிருந்தமையால் தாமே அதனைப் பன்முறை பாடிப் பாடி யின்புற்ருர். அத்துடன் மன அமைதி ஏற்பட்டு விடவில்லை. தகுதியுடையோரின் ஆமோதிப்புரை அதற்கு ஏற்படச் செய்யவேண்டும் என்னும் அவா எழுந்தது. ஆனல் அதனை எவரிடத்தும் காட்டுவதற்குள்ள துணிவும் உண்டாகவில்லை. அறிவியாமலிருக்கவும் மனம் வரவில்லை.

ஆகவே ஒரு தந்திரம் செய்தார். பாட்டினை ஒரு கடிதத்தில் தீட்டினர். மாணவரெவரும் வருவதற்கு முன்னரேயே பள்ளிக்குச் சென்ருர். ஆசிரியர் அமரும் நாற்காலியினருகில் ஒருவருமறியாமல் மெல்லப் போட்டு விட்டு வந்துவிட்டார். பின் உரிய நேரத்தில் மாணவருடன் சென்ருர். முன்னரே சென்ற மாணவருள் ஒருவன் அதனைக் கண்டெடுத்துத் தமிழாசிரியரிடங் கொடுத்தான். ஆசிரியர் அஃதோர் புதுப்பாடல் என்பதை உணர்ந்து கொண்டார். அதன் சொல்லழகும் பொருளழகும் அவர் சிரத்தைத் துளங்கச் செய்தன. பொருளை விரித்துக் கூறிப் பாடலமைதியை மிக வியந்து பேசினர். இதனை மறைவில் நின்று அனுபவிக்கும் தே-வியின் உள்ளத்தெழுந்த மகிழ்ச்சி உவமைகூறுந் தரத்ததாயிருக்குமோ?

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயின் உவகையினும் சாலப் பெரிதாயிருக்கு மன்றோ இவர்கள் கொண்ட உவகை ?

தே-வி, தம் கவித்துவ சக்தியை ஒரு துறையில் நிறுத்தாது கண்ட கண்டவாறு செலுத்திச் சென்ற போக்கை மாற்றித் திருப்பிவிட்ட பெருமை தம்பிரானுக்கே உரியது. அவர் ஒரு சமயம் தே-வியை நோக்கி ' அப்பனே ! இதோ குளத்தின் நடுவே கோவில் கொண்டு வீற்றிருக்கும் அழகம்மை மீது ஆசிரிய விருத்தம் சில பாடேன் ' என்றார். அவ்வண்ணமே தே-வி, தேவிமீது பத்து இன்றமிழ்ப் பாடல்கள் பாடினார்கள்.

அவை, அவ்விளம் பருவத்திலேயே பிள்ளையவர்களிடம் அமைந்திருந்த கவித்துவ சக்தியையும், கற்பனைத் திறத்தையும், செந்தமிழறிவையும், பக்திப் பெருக்கையும் தெளிவுபட எடுத்துக் காட்டுகின்றன. அப்பாடல்கள் தாயுமானார் பாடலின் போக்கையும், திருவாசகத்தின் இனிமையையும், அருட்பாவின் கனிவையும், கம்பரின் கற்பனையையும் கொண்டு மிளிர்கின்றன. அவற்றுள் ஒரு பாடல் கீழே தரப்படுகின்றது.

**ஆற்றுப் பெருக்கை யொத் தழிகின்ற செல்வத்தை**
**அடைவதில் விருப்பு மில்லேன்**
**ஆண்டியாய் வேண்டிப் புசித்துண்டு நாடோறும்**
**அலைவதில் வெறுப்பு மில்லேன்**
**காற்றுப் பெயர்ந்திடிற் காயமோ சூத்திரக்**
**கயிறற்ற பாவை யதனால்**
**காரியஞ் சிறிதேனு முளதோவுன் னிருபதக்**
**கஞ்சமே தஞ்ச மென்று**

'போற்றிப் பெரும்பேறு பெறுதற்கெ னுள்ளமெப்
போதுந் தவிக்குதம்மா
பொங்கிடுங் குரவையிட் டெங்குமோ ரொலிசெய்து
பொலிவாக மள்ள ரெல்லாம்
சேற்றுப் பெருக்கூடு நாற்றைப் புதைக்கின்ற
செய்யகஞ் சூழு மூராம்
தென்னிரத புரிவாழு மென்னரிய செல்வமே
தேவியழ கம்மை யுமையே.

தேரூரின் சிறப்பைக் குறிப்பிப்பதற்கு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அமைத்திருக்கும் கற்பனை மிக்க பகுதிகள் படித்துப் படித்து இன்புறத் தக்கவை. அவை :—

'தித்திக்கும் முக்கனிகள் எத்திக்கும் உதிர்கின்ற
செறிமரச் சோலை சூழும்
தென்னிரத புரி'
'செய்யெலாந் துய்யவெண் சங்கின மிராப்பொழுது
திங்களின் ஒளியை வீசும்
தென்னிரத புரி'
'† தேங்கா மரத்திலே மாங்காய் பறிக்கவொரு
சினைமந்தி ‡ கொக்கை நோக்கும்
தென்னிரத புரி'
'சேனுக்கு நாட்டுபல தூணுக்கு நிகரெனத்
தெங்கினம் சூழு மூராம்
தென்னிரத புரி'

---

† தேம் காமரம் - இனிய சோலை. ‡ கொக்கு - மாமரம்.

அழகம்மன் ஆசிரிய விருத்தத்தை ஒரு சமயம் பிள்ளையவர்கள், குலசேகரபுரம் வலியமேலெழுத்துச் சிவராமலிங்கம் பிள்ளை யென்னும் பெரியாரிடம் வாசித்துக் காட்ட வேண்டியவரானார். இவர் மகா வித்வான் மீனாட்சி சுந்திரம் பிள்ளையவர்களின் நண்பர். நல்ல தமிழறிவு வாய்க்கப் பெற்றவர். இவர், பாடல்களைப் பொறுமையோடு கேட்டு விட்டு 'தம்பி உன்னிடம் சித்து ஏதாவது இருக்கிறதா?' என்று கேட்டாராம். அதற்கு 'என்னிடம் சித்துமில்லை; ஒன்றுமில்லை; பெரியோர் பாடிய முறையைப் பின்பற்றி, நானும் பாடினேன். அவ்வளவுதான்' என்று கூறினராம் தே - வி.

இவ்வளவு புகழ்ச்சிக்குக் காரணமாயிருந்த இப் பிரபந்தமும் அன்று தே-வி யின் பெயரால் வெளிவர வில்லை. அமைந்த வாழ்க்கை மீதிலிருந்த ஆர்வமும், அடக்கமும் இளமைத்துடிப்பையும் அடக்கி ஏவல் கொண்டன. ஆகவே, அவர்களுடைய அத்தான் ஒருவர் பெயராலேயே இஃது அச்சிடப்பட்டு வெளியுலாவிற்று. இவ்விருத்தம் முட்டின்றி முடியக் காப்புக் கடவுளாக நின்றவர் வீட்டினெதிரே எழுந்தருளியிருக்கும் உதய மார்த்தாண்ட விநாயகராவர்.

'சீருதவும் நல்லூராம் தேரூ ரழகிதிருப்
பேருதவும் பாவினையான் பேசவே - ஒருதய
மார்த்தாண்ட வேழம் வழூவேதும் வாராமல்
காத்தாண்டு கொள்ளக் கடன்.'

என்பது அவர் மீது பாடிய காப்புச் செய்யுள்.

தே-வியின் வீட்டுக்கு வடக்கே கோவில் கொண்டு இருப்பவர் அழகிய மணவாள விநாயகர். இவர் அவர்

களுடைய குலதெய்வமாவார். இவர்மீது பாடிய பாடல்களும் பல. அவற்றுள் ஓர் அடிதான் நமக்குக் கிடைக்கின்றது.

'ஐங்கர னேரத புரிபீ லெழுந்தருள்
அழகிய மணவாளா
அடியனு மென்குடி யனையவு நின்றிரு
அடியில் அடைக்கலமே'— என்பது அது.

இவையன்றிச் சுசிந்தைப் பெருமான் மீதும் பல பாடல்கள் பாடியுள்ளார்கள். அவை 'சுசிந்த மாலை' என்னும் பெயரால் வழங்கின. அவற்றுள்ளும் ஒரு பாடலே இப்போது கிடைத்துள்ளது. அது வருமாறு:—

'திங்களுன் கருணை காட்டும்
தீக்கணுன் வெகுளி காட்டும்
கங்கையுன் பெருமை காட்டும்
கடுவுமுன் ஆண்மை காட்டும்
சிங்கம்நுண் ணிடையைக் காட்டச்
சிறையனம் நடைக் காட்டும்
மங்கையோர் பாகா தாணு
மாலயா சுசிந்தை வாழ்வே.'

தே-வி அவர்களிடம் 'என்ன ஆசிரிய விருத்தத்தில் ஆண்டியாய் வேண்டிப் புசிப்பதில் வெறுப்புமில்லை என்றெல்லாம் பாடியிருக்கிறீர்களே? அந்தத் துற வுள்ளத்தை இப்போது காணோமே என்று கேட்டால், அவையெல்லாம் என்னுடைய சரக்குக்களா? பிறர் சரக்குக்களை என் குப்பியில் அடைத்து வைத்தேன் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும்?

அதனாலே தான் அக்கருத்துக்கள் நீண்டு நிற்கவில்லை என்கின்றார்கள். உண்மை யென்ன? இளமை யுள்ளத்தில் விழுந்த பக்தி யென்னும் விதை கடவுளென்னும் வான வெளியை அடைவதற்குத் துறவென்னும் வழி ஒன்றே யிருப்பதாகக் கருதி ஒரே கிளையாய் முளைத்தெழுந்து நேர் உச்சத்தில் சென்றது அக்காலத்தில். ஆனால் பருவம் முதிர முதிர அது பல்வேறு கிளைகளாய்க் கவடுவிட்டுச் செழித்துப் பரந்து வளரலானது. கடவுளை யடைவதற்கு எத்தனை வழிகள் உள்ளன, எத்தனை துறைகள் உள்ளன! இல்வாழ்க்கையில் நின்று கொண்டே கடவுளருளைப் பெற ஏன் இயலாது? என்னும் சிந்தனைகள் தோன்றின. இதன் பயன் தான் பிந்திய இன்ப வாழ்க்கை. இவர்களின் பாடல்களெல்லாம் இச் சிந்தனை வளர்ச்சியைத் தெள்ளத் தெளியக் காட்டு கின்றன.

பிள்ளையவர்களின் மனம் அவ்விளம்பருவத்தில் தானே தென்னிந்திய வரலாற்றாராய்ச்சியிலும், சாசன ஆராய்ச் சியிலும் பெரிதும் ஈடுபட்டது. இதற்குக் காரணமா யிருந்தவர் அரசாங்கச் சாசன ஆராய்ச்சித் துறையில் அலுவல் தாங்கியிருந்த திரு. கணேச பிள்ளை என்பவ ராவர். இவர் ராய் பகதூர் சுந்தரம்பிள்ளை யவர்களுக்கு உதவியாளராயிருந்தார். திருவனந்தபுரத்தில் வசித்து வந்தார். இவர் மனைவியின் உறவினர் தேரூர்க்காரர். தே-வியின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் வாழ்ந்து வருபவர். ஆதலால் கணேசபிள்ளை அங்கே அடிக்கடி வருவதுண்டு. பிள்ளை எவருடனும் சரசமாகப் பேசுகிற வரல்லர். செட்டாகப் பேசும் அவர் பேச்சும் கேட்பவர் திகைப்புறும் செந்தமிழாகவே யிருக்கும். சற்று முறுக் காகவும் இருக்கும். உண்மை நிகழ்ச்சிகளைப் பிள்ளை எளிதில் வெளிவிடமாட்டார். இவ்வளவெல்லா மிருந்

தாலும் தே-விக்கு அவரோடு பழக்கந்தான். அப் பழக்கமே அவருக்கு ஆராய்ச்சியில் ஆசையை எழுப்பியது.

ஒரு நாள் திரு. கணேசபிள்ளை தம் சேவகனுடனும் பெரியதொரு காகிதக் கட்டுடனும் தேரூருக்கு வந்தார். தே-வி அவரைக் கண்டதும் விசாரித்து விட்டு, காகிதக் கட்டெல்லாம் இருக்கின்றதே, வந்த காரியம் யாதோ? என்று கேட்டார். பிள்ளை சரியான மறுமொழி கொடுக்க வில்லை. தே-விக்குச் சாசன ஆராய்ச்சியிலிருந்த ஆர்வம் அந்தக் கட்டினைப் பற்றி எப்படியாவது அறிய வேண்டும் என்னும் விருப்பத்தை உண்டாக்கிற்று. இதனைக் கணேசபிள்ளையின் மைத்துனனை இளைஞனிடம் தெரிவித்தார் தே-வி. 'இதுதானு பெரிய காரியம்' என்று சொல்லிவிட்டுப் போனுன் பையன். அவர் இல்லாதவேளை பார்த்துக் கட்டினை யவிழ்த்துப் பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை அவனுக்கு. அதனுல் அக்கட்டினையே எடுத்து வந்துவிட்டான். தே-வி அதைத் திருப்பிப் பார்த்து ஒரு சிறு குறிப்பெடுத்துக்கொண்டு முன் போலக் கட்டிக் கொடுத்து விட்டார். அதில் கண்ட செய்தி யாவது - சுங்கான்கடை யென்னுமிடத்துக்குப் பக்கத்தில் தொன்மை வாய்ந்த கோட்டை ஒன்றிருந்த தென்பதும், அதற்கான ஆதாரங்களும் தான்.

கணேசபிள்ளை ஒன்றிரண்டு நாள் தங்கிவிட்டுத் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தார். அதற்கு முன்னரே 'ட்ராவங்கூர் டைம்ஸ்' (Travancore Times) என்னும் ஆங்கிலவார இதழில் ஆராய்ச்சிக் கட்டுரை யொன்று வெளிவந்திருந்தது. அதைப் பார்த்ததும் பிள்ளை திடுக்கிட்டுப் போனுர். 'தாம் பலநாள் முயன்று செய்த ஆராய்ச்சி; சிறந்த ஆதாரங்களோடு கூடிய மறுப்பை யேற்று வெளிவந்திருக்கிறது. இது என்ன வியப்பு! இதனை எழுதிய நாஞ்சி நாடன் யார்?' எனத்

திகைத்தார். கடைசிவரை ஒரே திகைப்புத்தான். இது தே - வியின் இளமைக் குறும்பு. ஆனால் கல்வித் துறையோடு கலந்து நின்றமையால் இதுவும் ஓர் அழகு பெற்று விளங்குவதைக் காணலாம்.

பிற்காலத்தில் இவர்கள் ஒரு சிறந்த கல்வெட்டாராய்ச்சிப் புலவராய் விளங்குவதற்கு இவை தாம் அடிப்படையிட்டவை. இன்றுள்ள தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் தே-வி கற்றறியாத கல்வெட்டுக்களே இல்லை யென்னலாம். இத்துறையில் இவர்கள் திரட்டி வைத்துள்ள அறிவுப் பெருமையினால் இவை சம்பந்தமாகப் புதியன பல வெளியிடுவதற்கும், பழையவற்றிற் கண்ட பிழைகளைத் திருத்திக் கோடற்கும் இவர்கள் உதவி பெரிதும் வேண்டப்படுகின்றது. பழமைப் பதிப்புக்களில் பிழைகள் கண்டால் அவை திருத்தப்பட வேண்டு மென்னும் நன் மனத்தோடு, தகுந்த சான்றுகள் காட்டி உரியவர்களுக்கு அறிவிப்பது இவர்கள் வழக்கம். வேண்டிவந்தால் மறுப்புரைகளும் வெளியிடுவார்கள். அவ்வாறு வந்த ஒரு வெளியீடுதான் 'காந்தளூர்ச் சாலை' என்னும் சிறு ஆராய்ச்சிநூல். இஃது ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இதனைப் படித்தோரெல்லாம் பிள்ளையவர்களுக்கிருக்கும் கல்வெட்டாராய்ச்சிப் புலமையையும், ஆங்கில மொழி வன்மையையும் பற்றிப் பெரிதும் புகழ்கின்றார்கள். மொழியாராச்சியிலாயினும், இலக்கண ஆராய்ச்சியிலாயினும், சாசன ஆராய்ச்சியிலாயினும் இவர்கள் திரட்டி வைத்திருக்கும் சிறந்த உண்மைகளைத் தமக்கென உரிமைப்படுத்திக் கொள்வதில்லை. அவை சென்றவர்களுக்கெல்லாம் சிலச் சிலவாகக் கிடைக்கின்றன. புதிதாகப் புத்தகம் எழுதுகின்றவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. இன்னொருவராயின் இவற்றைக் கொண்டு நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி நூல்களை

வெளிப்படுத்திப் பொருளும் புகழும் ஈட்டியிருப்பார். ஆனால் இவர்களோ அவை வரும் வாயில்களை அடைக்கக் கருதுகின்றார்கள். உரிய முறையாலன்றிப் பொருள் வரும் வாயிலை அடைத்தே விடுகின்றார்கள். புகழ்வரு வாயிலை அடைக்க முடியாமல் திணறுகின்றார்கள் என்றே சொல்லவேண்டும்.

## 5. உயர்தரப்படிப்பும் ஆசிரியத்தொழிலும்

மேற்கூறிய நிகழ்ச்சிகளிற் பெரும்பாலும் தே - வி ஆங்கிலப் பாடசாலையில் கற்குங் காலத்து நிகழ்ந்தவைக ளாகும். இவர்களது மனம் இத்தகைய புறச் செயல்களில் ஒருவாறு ஈடுபட்டிருந்ததேனும் பள்ளிப்படிப்புக்கு எவ்வித குந்தகமும் உண்டானதில்லை. முறையாகக் கற்றுக் கலாசாலைப் படிப்பை முடித்துக் கொண்டதும், கல்லூரியில் சேர்ந்தார்கள். ஓராண்டே நிறைந்தது. இதற்குள் குடும்பச் சுமை பெரிதும் வந்து தாக்கத் தொடங்கிற்று. ஆகவே மாணவ வாழ்க்கையை மாற்றிக் கொள்ள வேண்டியவரானார். அதோடு மணவாழ்க்கையில் புகுதற்கேற்ற வாய்ப்பும் நெருங்கிற்று. தமது இருபத் தைந்தாவது பருவத்தில் நாகை நகரையடுத்த புத்தேரியில் பிறந்தவரும், குணநலன்களெல்லாம் ஒருங்கமையப் பெற்றவருமான உமையம்மையார் என்னும் பெண்கள் நாயகத்தை வாழ்க்கைத் துணைவியாராகக் கொண்டார். வாழ்க்கைச் சகடமும் மெத்தெனச் சென்றது.

நாளடைவில் தே - விக்கு யாதேனும் ஓர் அரசாங்க அலுவல் பார்க்க வேண்டும் என்னும் சிந்தனை எழலானது. எவருக்கும் எளிதில் கிடைப்பது ஆசிரியத் தொழில் தானே! அதனால்தானே அரசாங்கத்தார் உட்பட யாவரும் அதன் மதிப்பைக் குறைத்துக் கணிக்கின்றனர்.

உண்மையும் இதுதானே? உலகிலுள்ள போற்றத்தகும் புனிதத் தொழில்களில் தலை சிறந்தது ஆசிரியத் தொழில் என்பதன்றோ அறிவாளிகளாயினோர் கருத்து. பெரிய கடமைப்பாட்டினையும், அரிய முயற்சியினையும் மேற்கொண்டு நிற்பது இதுவன்றி வேறென்னுளது? நுண் மதியும், சொல்வன்மையும், அறிவுப் பெருக்கும், பொறுமை மிகுதியும், பிறருளப்பாங்குணரும் ஆற்றலும், இன்ன பிறவும் ஏக காலத்தில் கைக்கொண்டொழுக வேண்டுவதொரு தொழில் இதற்கொப்பாக வேறென்ன இருக்கிறதென்று கேட்கின்றோம்? இத்துணையும் ஒருங் கமையப் பெற்ற ஆசிரியன் உண்மையில் பெரியன்! பெரியன்!!

ஆனால் ஏன் இவன் இவ்வாறு குன்றிக் கிடக் கின்றான் என்று கேட்கலாம். பிற அலுவலாளரைப் போல, தன் திறனை வயது வந்தோரிடமும் அறிவாளர் களிடமும் காட்டும் வாய்ப்பு இவனுக்கில்லை. இவனோ தன்னைவிட அறிவிலும் ஆண்டிலும் இளையராயினோரிடம் தன் ஆற்றலையும் உழைப்பையும் கவிழ்க்கின்றான். அவ் வுழைப்பு, உரிய பயனை உள்ளவாறு ஒருக்காலும் வெளிப் படுத்திக் கொள்ளாது என்பது யாவரும் ஒப்புக் கொள்ளத் தக்கதோர் உண்மையாகும். இதனை நன்கு உணரா மையால் பிறரெல்லாம் ஆசிரியனது மதிப்பை நன்கு மதிக்க இயலாதவராகின்றனர். இதனால், பிற அலுவ லாளர் மேற்கொள்ளும் உழைப்பு - அதற்குப் பெறும் ஊதியம் என்பவற்றுக்கும், ஆசிரியன் மேற்கொள்ளும் உழைப்பு - அதற்குப் பெறும் ஊதியம் என்பவற்றுக்கு முள்ள வேறுபாடு நாளுக்கு நாள் அகன்று கொண்டே போகிறது. இதனை யாவரும் உணரவும் ஆசிரியத் தொழிலின் உண்மை மதிப்பு நிலைநாட்டப்படவும் தகுந்த

காலம் மிக அண்மையில் வரும் என எதிர்பார்ப்பது தவருகாது.

பிள்ளையவர்கள், . முதலில் கோட்டாறு துவக்கப் பாடசாலையில் ஆசிரியத் தொழில் மேற்கொண்டார்கள். ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டும் தகுதிப்பாடெல்லாம் ஒருங்கமையப் பெற்றவர் நமது தே - வி அவர்கள். நன்னூலார் உத்தம ஆசிரியருக்கு விதித்துள்ள இலக்கணம் நிரம்பியதல்ல என்றே சொல்லவேண்டும். அன்பு, அடக்கம், ஆராய்ச்சி, நினைவாற்றல், . உற்றுப்பார்க்கு மாற்றல் முதலியனவாகச் சொல்லப்படாத ஏனைய இலக்கணங்களுக்கும் இலக்கியமாக விளங்குபவர் நமது தே-வி என்றால் அஃது உயர்வு நவிற்சியாகாது. அவர்களிடம் உற்றுப் பார்க்கும் ஆற்றல் சிறப்பாக அமைந்திருக்கிறது. அதற்குச் சான்று தரும் பிற்கால நிகழ்ச்சி ஒன்று தருகின்றோம்.

ஒரு சமயம், அரசாங்கத்தாரால் எழுதப்பட்ட பாடப் புத்தகங்களைத் திருத்தி அமைக்க தே - வி அவர்களும், இன்னும் சில பெரியார்களும், அவர்களுக்கு உதவிபுரிவார் சிலரும் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒருநாள் அவர்கள் எடுத்துக்கொண்ட புத்தகத்தில் ‘கிளி’ என்னும் பாடம் வந்தது. தலைப்பில் கிளியின் படமும் வரையப்பட்டிருந்தது. தே - வி, எல்லோரையும் புத்தகத்தை மூடும்படிச் செய்துவிட்டு ஒரு கேள்வி போட்டார். ‘கிளிக்கு விரல் முன்னே எத்தனை ? பின்னே எத்தனை ?” என்பதுதான் அக்கேள்வி. ‘இது தெரியாதா ? முன்னே மூன்று விரல்; பின்னே ஒரு விரல்’ என்றனர் சில இளைஞர்கள். யாவரும் அதுவே சரி என்று கருதினார்கள். உடனே தே - வி யாவரையும் புத்தகத்தைத் திறந்து படத்தைப் பார்க்குமாறு கூறினர். படத்திலுள்ள கிளியும் முன்னே மூன்று விரல்களைக் காட்டிக்கொண்டு

தான் இருந்தது. 'இது பிழை; கிளிக்கு விரல் முன்புறம் இரண்டு! அதுபோல் பின்புறமும் இரண்டு உண்டு' என்றதும் யாவரும் ஒரு விரலை மூக்கின் மேல் வைத்து உட்கார்ந்திருந்தனர்.

இன்னொரு சமயம் கடிகாரத்தைப் பற்றிய பாடம் வந்தது. பாடத்தின் முகப்பில் சுவரில் மாட்டப்படும் பெரிய கடிகாரம் ஒன்றின் படம் வரையப்பட்டிருந்தது. முன் போலவே, தே - வி யாவரையும் பார்த்து 'உரோமன் எண் இடப்பட்ட கடிகாரத்தின் முகத்தில் நான்கு எவ்வாறு தீட்டப்பட்டிருக்கும்?' என்று கேட்டார்கள். ஒரு வரை போட்டு, அதனையடுத்து ஆங்கிலத்தில் 'வி' போன்ற ஒரு குறி போடப்பட்டிருக்கும் என்றே யாவரும் கருதினார்கள்; சொன்னார்கள். படத்தைப் பார்த்த போதும் அவ்வாறுதான் போடப்பட்டிருந்தது. அதுவும் தவறு என்றும், நான்கு வரைகள் போடப்படுவதுதான் வழக்கமென்றும் கடிகாரத்தையே காட்டி அறிவுறுத்தி னார்கள். சிறியனவென்றும், பொதுவான தன்மைக ளன்றிச் சிறப்பான தன்மைகள் இருக்கமாட்டாவென்றும் பலரும் கருதி ஒதுக்கிவிடுகின்ற பொருட்களையும் நுணுகி நோக்கி யுணரவல்ல தே - வியின் உற்றுப் பார்க்கு மாற்றலை எண்ணியெண்ணி யாவரும் வியந்தார்கள்; மெச்சிப் புகழ்ந்தார்கள்.

இவ்வாற்றலும், அவர்கள்பால் அமைந்துள்ள குழந்தையுள்ளமும், கவித்துவ சக்தியும்தாம் தே-விக்குச் சின்னஞ்சிறு ஆசிரியப் பருவத்திலேயே இளைஞர் முதல் முதியோர் வரையுள்ள யாவரும் மதிக்கவும் விரும்பவும் தகுந்த பெரிய நிலையை யளித்தவை. பூவையும் புல்லையும் பேசவைத்து, குதிரையையும் குருடனையும் புலம்பவைத்து, கோழியையும் கிளியையும் கேட்க வைத்து அறிவைக் குழைத்துக் கவிதையாக்கிப் பண்ணோடிசைத்துப் பாடி

மகிழும்படி கொடுத்துக்கொண் டிருந்தால் இளஞ் சிறூர்க்கு வேறென்ன வேண்டும்? கண்டையும் கட்டி யையுங் கூட விரும்பார்களே! தே-வியின் பாடல்கள் என்றால் எல்லையற்ற விருப்பம் அவர்களுக்கு. சிறுவர் பலர் சேர்ந்து நின்றுகொண்டு,

' தங்கையேபார் தங்கையேபார்
 சைக்கிள் வண்டி இதுவே பார்
சிங்கார மான வண்டி
 சீமையிலே செய்த வண்டி ' என்றும்,

' சேவற் கோழியுண்டு காகமுண்டு—வானம்
 செக்கச் சிவந்து தெரிவதுண்டு
மேவுபொன் னேஅதி காலை தெரிந்திட
 வேறும் கடிகாரம் வேண்டுமோடி ? ' என்றும்,

உச்சஸ்தாயியில் பாடும்பொழுது அவர்கள் கொள்ளும் குதூகலத்துக்கு எல்லையிருக்குமா? கேட்போருக்குத்தான் எவ்வளவு கிளர்ச்சி ஏற்படும்? தே-வி யோ இவற்றைக் கேட்டுப் பின்னும் பின்னும் பாடிக் கொடுத்துக்கொண் டேயிருப்பார். இப்படியாக அவர் இந்த இன்பப் பூங்கா வனத்தில் இன்னிசைக் குயில் மொழிமாந்தி ஆனந்தப் பெருவாழ்வு வாழ்ந்தார் என்றே கூறவேண்டும்.

பிள்ளையவர்கள் துவக்கப் பாடசாலையில் வேலையி லமர்ந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே கோட்டாறு போதனை முறைப் பாடசாலையாசிரியராக மாற்றப்பட் டார்கள். குழந்தைகளின் மனப்பண்பை அறியவல்ல தே-வியைப் போன்றூரன்றி, இத்தொழிலுக்குத் தகுதி யுடையோர் வேறுயார்? ஆதலால் இங்கே ஒப்புயர்வற்று விளங்கினூர்கள் என்று சொல்லத் தேவையில்லை. பின்னர்,

திருவனந்தபுரம் பெண்கள் போதனை முறைப் பாடசாலை யாசிரியராகச் சென்றார்கள். அங்கு வேலை பார்த்த காலம் கொஞ்சந்தான். அதற்குள், இவர்களின் தமிழ்ப் புலமையை யறிந்த அரசாங்கத்தார் அங்கேயேயுள்ள 'மகாராஜா பெண்கள் உயர்தரப் பாடசாலை'யில் தமிழாசிரியப் பதவியை யளித்தனர். அதற்கடுத்த அலுவலுயர்ச்சியும் சில காலத்துக்குள் கிடைக்கலானது. பெண்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் என்னும் அலுவலே ஓய்வு காலம் வரை அவர்கள் தாங்கி நின்ற பெரும்பணி.

பொதுவாக, அந்தக் காலத்தில் கல்வி நிலையங்களில் தமிழாசிரியர் அல்லது தமிழ் விரிவுரையாளர் என்றால் பந்தியில் விளம்பப்படும் கறிவகைகளுள் நாரங்காய்ப் பச்சடிக்குள்ள மதிப்புத்தான் கொடுப்பது வழக்கம். ஆனால் தே - வியோ கறிக்கு உப்புக்குள்ள தேவைபோல் அமைந்திருந்தார்கள் அக் கல்லூரியில். நூல் நிலையம் இவர்கள் கையில். கல்லூரி இதழை (College magazine) நடத்தும் பொறுப்பு இவர்களுடையது. கல்லூரித் தலைவி திருமதி வாட்ஸ் அம்மையார் தே - வியிடம் சிறப்பான அன்பும் மதிப்பும் காட்டி எந்தக் காரியமும் கலந்தாலோசித்துக் கொள்வார். தே - வி கல்லூரியை விட்டு நீங்கும்வரை அவருடைய சகோதர அன்பு தே - வியிடம் நிறைவாக இருந்தது. ஆசிரியர்களும் அவ்வண்ணமே.

மாணவிகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. மாணவிகள் அங்கே கற்பிக்கப்பட்டார்கள் என்பது தவறு. அவர்கள் ஒருங்கு கூடியிருந்து தம் மனங்களைப் படிப்பில் ஓடவிட்டுத் தாமே உண்மைகளை ஆராய்ந்துணர்ந்தார்கள் என்று கூறுவதே பொருத்தமாம். தவறான பகுதிகள், பிழை பொதிந்த கருத்துக்கள்,

பொருத்தமற்ற இடங்கள் தம் பாடப்பகுதியில் வந்தால் அத்தவறுகளை அறிந்தொதுக்கி, அவரே உண்மை காணு மாறு தூண்டி மாணவருள்ளங்களில் இளகிய மெழுகில் இறங்கும் இரும்பாணிபோல் பதிய வைக்கின்ற திறம் தே - வியிடம் அமைந்த தனித்திறமாகும். பேருண்மை களைத் தம் ஆராய்ச்சித் திறனோடு சேர்த்து அன்பிற் குழைத்துப் பரிவுடன் ஊட்டும் போது மாணவியர் தம்மையே மறந்து போவர். மாணவிகளெல்லாம் தே - வி யைத் தந்தையாகவே மதித்தார்கள் என்பது மிகப் பொருந்தும். இவ்வாறு அக் கல்லூரியில் அன்பு உயிர்ப்பே உயிர்த்து, அழகுப் பொருட்களையே கண்டு, செஞ்சொற்களையே கேட்டு, தீந்தமிழை ஆய்ந்து, தேங் கவிகள் மொழிந்து, தம் ஐம்பத்து மூன்றாமாண்டளவும் இன்பமாகக் கழித்து வந்தார் நம் தே - வி.

பொதுவாக, அரசாங்க அலுவல் முதலான சேவ கங்கள் ஒருவனுடைய காலம், கருத்து, உணர்ச்சி என்பனவற்றை அடிமைப்படுத்துபவை யென்றும், தன் மதிப்புக்குப் பங்கம் விளைப்பவையென்றும் பெரும்பாலா ராலும் கருதப்படுவதுண்டு. ஒருவன் தன் உழைப்பையும் உணர்வையும் உரிமைப்படுத்துவது உண்மைதான். ஆனால் அவன் தன்மதிப்பை இழந்துதான் ஆகவேண்டும் என்ப தில்லை. சுதந்திர மனப்பான்மை யுடையவர்கள் இத் தகைய சேவகங்களுக்குத் தாம் என்றும் அடிமையாகாமல், அவற்றைத் தமக்கு அடிமைப்படுத்திக்கொண் டிருப்பர்.

பிள்ளையவர்கள் அலுவலுயர்ச்சி பெற்ற வரலாறு வேடிக்கையானது. அவர்கள், திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த போதனைமுறைப் பாடசாலையில் வேலை பார்த்து வரும்போது கல்லூரியில் தமிழ் விரி வுரையாளர்ப் பதவியில் ஓர் ஒழிவு வந்தது. கல்லூரித் தலைவி தே - வியின் திறமையைக் கண்டு அவர்களையே

சிபார்சு செய்தார். அப்பொழுது தே - வி, தலைவியிடம் 'பெண்கள் இந்தப் பதவிக்கு வருவதாக இருந்தால் எனக்கு வேண்டாம்; இல்லாவிட்டால் தங்கள் விருப்பப் படி இருந்து கொள்கிறேன்' என்றார்.

இந்த விவரத்தை திருமதி வாட்ஸ் அம்மையார், அப்போது கல்வி இலாகாத் தலைவராயிருந்த துரைமகனாரிடம் கூறினார். அவர் அதனை ஒப்புக்கொண்டு விட்டு 'ஒரு நற்சாட்சிப் பத்திரம் வாங்கி அனுப்புங்கள்' என்றார். அதற்கு அம்மையார் 'அவர் எவரிடமும் சென்று கெஞ்சி நிற்பவரல்லர். இதைச் சொன்னால் தமக்கு உத்தியோக உயர்வே வேண்டாமென்று சொல்வாரே யன்றி நற் சாட்சிப் பத்திரம் வாங்கித் தந்துகொள்ள மாட்டார். அவர் இயல்பு அது. அவரைப் பொறுத்தமட்டில் எந்த நற்சாட்சிப் பத்திரமும் தேவையில்லை. உத்தரவு அனுப்பி வையுங்கள்' என்று கூறிவிட்டு, தே - வியிடம் வந்து 'உமக்கு உத்தியோக உயர்வு வேண்டுமானால் ஒரு நற் சாட்சிப் பத்திரம் வேண்டியிருக்கிறது; வாங்கித் தர முடியுமா?' என்று கேட்டார்.

அதற்குத் தே - வி 'நான் நற்சாட்சிப் பத்திரம் வாங்கிக் கொடுக்கவும் வேண்டாம். எனக்கு உத்தியோக உயர்வு பெறவும் வேண்டாம்' என்று வெடுக்கெனக் கூறினார். கேட்ட அம்மையார் விழுந்து விழுந்து சிரித்து விட்டு முன்னமேயே நும்மியல்பையறிந்து 'டயரக்ட'ரிடம் இதைக் கூறிவிட்டேன் என்று சொன்னார். இரண்டொரு நாட்களில் தானாக உத்தரவு வந்து சேர்ந்தது. அவர் உத்தியோகம் பெற்றதும், உயர்வு பெற்றதும் அரசாங் கத்தார் தாமாக அறிந்து கொடுக்கப் பெற்றவைகளே. சிபார்சு செய்து பெறவேண்டும் என்பதைத் தே - வி சிந்தையிலும் நினைத்ததில்லை. அது போலவே, நியாயக் கேடான சிபார்சுகள் அவர்களிடம் வருமானால் அவற்

றுக்குச் செவிசாய்ப்பதுமில்லை. ஒழுங்காகத் தன்மதிப் போடு தன் வேலையைப் பார்ப்பது, தன் மதிப்புக்குப் பங்கம் வந்தால் வேலையை விட்டு விலகுவது என்பது தான் அவர்கள் முன் நின்ற கொள்கை.

தே - வி அவர்கள் தம் ஐம்பத்தைந்தாமாண்டிலன்றி, ஐம்பத்து மூன்றாமாண்டிலேயே வேலையை விட்டு வெளி வருவதற்குக் காரணமான நிகழ்ச்சியும் இதுபோலவே ருசிகரமானது. தே - வி ஒருநாள் கல்லூரியிலுள்ள தம் அறையில் இருக்கும்போது சேவகன் வந்து 'டயரக்டர்' அவர்கள் அழைப்பதாகச் சொன்னான். உடனே எழுந்து அங்கே செல்லுகிற பொழுது கல்வி யிலாகாத் தலைவரும், கல்லூரித் தலைவியும் (இப்போது தலைவியாக இருந்தவர் திருமதி வாட்ஸ் அம்மையாருக்குப் பதிலாக வந்த புதிய பெண்மணியாவர்.) பேசிக்கொண் டிருந்தனர். பிள்ளையவர்களைக் கண்டதும் பெயர் முதலிய வற்றைக் கேட்டு விசாரித்தார். பின் கீழ்வருமாறு கேட்டார்.

'ஆண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர்ப் பதவி காலியாயிருக்கிறதே, அதற்கு நீர் விண்ணப்பம் அனுப்பவில்லையா?'

'நான் ஏன் அனுப்ப வேண்டும்? அது மலையாள விரிவுரையாளரின் கீழ் அமைந்த பதவியாயிற்றே. நான் ஏன் அதனை விரும்பப் போகிறேன்? சுதந்திரமாக இங்கே இருந்து வருகிற நான் அடிமை வாழ்க்கைக்குச் சீட்டு வாங்குவதா?' என்றார் தே - வி.

சற்றுக் கசப்புடன் 'பெண்கள் கல்லூரியிலெல்லாம் பெண்களையே அமர்த்தவேண்டுமென்று பல்கலைக்கழகம் தீர்மானித்திருக்கிறது. ஆதலால் உங்களுக்குத் தனிச் சம்பளம் (Personal pay) தந்து அங்கே ஒரு வேலை மாற்றநேரும்.'

'ஒருவேளை யென்பதென்ன ? இப்பொழுதே செய்யுங்கள். தாராளமாகச் செய்யுங்கள். அதற்கு முன் என்னுடைய இராஜிநாமாவைப் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் இங்கே பெண்களை நியமிப்பதில் நான் குறுக்கே நிற்கமாட்டேன். நீங்கள் விரும்பியதால்தான் இவ்வளவு காலமும் இருந்தேன். அன்றி நான் விரும்பி இருக்கவில்லை. இதோ இராஜிநாமாவை எழுதிக்கொண்டு வந்துவிடுகிறேன்' என்று கூறி எழுந்தார்.

தலைவர் மறுபேச்சுப் பேசவில்லை. அவர் திகைத்துப் போனார். இதுவரை தம்முன் நின்று ஒருவர் தம் பேச்சை மறுத்துப் பேசியதையோ உதறிப் பேசியதையோ கேட்டனுபவித்ததேயில்லை. எதிர் நின்று கூழைக் கும்பிடு போட்டுக் குழைந்து குழைந்து, பணிந்து பணிந்து பேசிய அடிமைப் பேச்சுக்களையே கேட்ட பழக்கந்தான் அவருக்குண்டு. ஆதலால் இரண்டு நிமிடம்வரை ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்துவிட்டு, பின் தே-வியை நோக்கி 'இருங்கள். அப்படி ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்யவேண்டாம். நான் அந்தக் கருத்துப்பட ஒன்றும் சொல்லவில்லையே' என்று பலவாறு கூறிச் சமாதானப்படுத்தினார். தாம் தே-வியின் மனத்தில் உண்டுபண்ணிய சொரசொரப்பை அழுத்தம் செய்ய சுமார் பத்து நிமிடம் வரையிருந்து குடும்பகாரியம் முதலான பல்வேறு காரியங்களும் பேசி மெருகிட்டுவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

அவர் சென்றதும் கல்லூரித் தலைவியிடம் 'இனி நான் வேலை பார்க்க விரும்பவில்லை. வேனிற்கால விடுமுறைக்கு இன்னும் ஏழு நாட்கள் தானிருக்கின்றன. விடுமுறை கழிந்து வந்ததும் என்னைப் பிரித்துவிட வேண்டும்' என்றார்.

'நான் புதியவள். தங்கள் உதவி எனக்கு மிகவும் தேவையாயிருக்கும். இன்னும் தங்களுக்குள்ள இரண்

டாண்டையும் மகிழ்வுடன் இங்கேயே கழித்துவிட்டுப் போகலாம். தங்கள் பிரிவு கல்லூரிக்கே பெரு நஷ்டமாக இருக்கும்' என்று எவ்வளவோ கூறியும் தே-வி ஒரே பிடியாக நின்றார். இறுதியில் வேறோர் ஆள் கிடைக்கும் மட்டும் இருப்பதெனத் தீர்மானமாயிற்று.

விடுமுறை கழிந்து வந்ததும் தமக்கு உபகாரச் சம்பளம் தந்து விடுதலை யளிக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார். சின்னாட்களாகியும் தகவ லெதுவும் வராமையால் நினைவுறுத்தல் சீட்டு (Reminder) அனுப்பினார். அதற்கும் பதிலில்லை. பின்னுமொன்றனுப் பினார். இப்படியாகச் சுமார் நாலைந்து மாதங்களுக்குப் பின்னர் வேலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். தன்மானம் அழிந்து வாழ்தலென்பது தம்மிடத்தில்லை யென்பதைத் தமிழருக்குக் காட்டி நின்ற தனிப் பெரும் பண்பாளர் நம் தே-வி.

## 6. பொதுநலத் தொண்டு

தொண்டு அல்லது சேவை என்று சொல்லுகிற பொழுது சிறை செல்வதையும், தடியடிகள் தாங்கு வதையும், கண்ணீர்ப் புகை துப்பாக்கிக் குண்டு இவை ஏற்பதையும் தான் பொதுவாகக் கருதுகின்றார்கள். இவைகளை ஏற்பவர் தாம் தொண்டர்கள் என்பதற்கில்லை. அடிமை வாழ்வை அகற்றும் பணியில் ஈடுபடுகின்ற தற் காலத் தொண்டர்களுக்கு இவை பரிசில்களாகக் கிடைக் கலாம். எந்தத் தொண்டுக்கும் எந்தக் காலத்துக்கும் இவையே கைம்மாறு என்று கூறுதல் சாலாது. உலகிலே அமைதியான முறையில் செய்யத்தகும் சேவைகளும் பல உள்ளன. மனிதனைத் தலையெடுக்க வொட்டாமல் ஆழ்த்திவைக்கின்ற அடிமை யென்னும் புறப்பகையை அழித்தொழிக்கும் சேவை எவ்வளவு சிறந்ததோ அது

போல மனிதனை ஒளிபெற வொட்டாமல் ஆழ்த்தி விடுகின்ற அறியாமை யென்னும் அகப்பகையை அழித்தொழிக்கும் சேவையும் ஒப்பற்ற சேவையே யாகும். முன்னையதற்கேனும் ஒரு கால அளவு உண்டு. இஃதோ எக்காலத்தும் வேண்டப்படுவதாம். ஆகவே இம்முயற்சியில் ஈடுபட்டவர் சிறந்த தொண்டர் என்பதற்கு ஐயமில்லை யல்லவா?

இச் சேவையைத்தான் - அதிலும் அறியாமையின் அங்குரம் தோன்றுமிடமாய சிறுவருள்ளத்தைச் செப்பனிடும் இத்தொண்டினைத்தான் தே-வி ஒப்பற்ற பணியாக மேற்கொண்டொழுகினார்கள். அதற்குக் கைக்கொண்ட முறைதான் மிக மிக மென்மையானது. வலிய பேருண்மைகளை யெல்லாம் மெல்லிய கவிமலர்களாகச் செய்தார்கள். அவைகளை இளஞ்சிறாரின் இதய கமலங்களிலே மெல்லெனெ அள்ளிச் சொரிந்தார்கள். அவை அவர்களுக்குத் தின்பண்டங்கள் போலவும், விளையாட்டுப் பண்டங்கள் போலவும், இன்பக் களஞ்சியங்களாகவும் ஆனந்த மளிக்கின்றன. ஆனால் அவை விளக்கி நிற்கும் பொருட்கள் எவ்வளவு உயர்ந்தவை என்பதைப் பாருங்கள் :—

'கோபுரத்தின் அடித்தட்டில் நின்று பார்த்தால் சுற்றிலும் தெரியுமிடம் சிறு அளவினதாக விருக்கும். அதன் மேற்றட்டில் ஏறினால் அங்கு நின்று தெரியுமிடம் ஒரு பெரிய வட்டமாக அமையும். அதன் மேற்றட்டிலேறிப் பார்த்தால் அவ் வளையம் முன்னையதினும் விரிந்ததாக விருக்கும். இவ்வாறு மேலே செல்லச் செல்ல நம் கண்ணுக்குப் புலனாகும் பரப்பின் அளவும் பெரிதாய்க் கொண்டே செல்லும். ஆயினும் உயரிய நிலையில் நின்று உலக முழுமையும் உணர்ந்தவர் கடவுளொருவரன்றி வேறொருவருமிலர். இதுபோலவேதான் அறிவுத்துறை

முதலிய யாவற்றிலும் இப்பேருண்மையினை முட்டைக்கரு, கூட்டுக் குஞ்சு, சிறு பறவை, பெரும் பறவை - என்பு வற்றின் சிந்தனையாக நான்கு தொடர்களில் அமைத்துக் காட்டுகின்றார்கள்.

முட்டைக் கரு

1. முற்றுங் கருவாகி - ஒரு சிறு
முட்டையில் வாழ்க்கையிலே
சுற்று முலகெனக்கும் - உருண்டவெண்
தோடா யிருந்ததம்மா.

கூட்டுக் குஞ்சு

2. குஞ்சுப் பருவத்திலே - பிறிதொரு
கூட்டில் இருக்கையிலே
விஞ்சு முலகினையான் - உலர்ந்தபுல்
வீடாகக் கண்டேனம்மா.

சிறு பறவை

3. இறகு முளைக்கையிலே - பறந்திட
யானும் பழகையிலே
நிறையு முலகெனக்குத் - தழைகொடி
நேரிடமான தம்மா.

பெரும் பறவை

4. நீண்ட வெளிவரவே - உயர்ந்தவிண்
நீலம் தெரிந்ததம்மா
ஆண்டவ னன்றி எவர் - உலகை
அறிந்திட - வல்லாரம்மா!

என்று கூறும் பறவையின் கூற்றுக்கள் எண்ணி யெண்ணி இன்புறத் தக்கன.

இப்பாடல்களின் அருமையையும், கருத்துயர்ச்சியையும் சிறுவர்கள் தற்பொழுது உணராமற் போயினும் பிற்காலத்தில் தாமாக உணர நேரும்போது எத்துணை இன்பங் கொள்வர் !

ஆயிரம் இதழ்களாகிய கண்களை யலர்த்திக்கொண்டு மஞ்சள் பொடி பூசி, ஆகாச வீதியிற் செல்லும் ஆதித்தனை நோக்கி நிற்கும் சூரிய காந்திப் பூவை, அன்பன் மேனியை நோக்கி நிற்கும் ஆரணங்குக்கு ஒப்பிட்டுக் கூறும் அழகு எவ்வளவு சிறந்தது !

'மஞ்சள் குளித்து முகமினுக்கி இந்த
மாயப் பொடிவீசி நிற்குநிலை
† கஞ்ச மகள்வந்து காணிற் சிரிக்குமோ
‡ கண்ணீ ருகுக்குமோ யாரறிவார் ?' —

என்ற கேள்வி சக்களத்திப் போராட்டத்தை இழுத்து விடுவதன்றோ ?

'குதிரையின் புலம்பல்' என்னும் பாட்டு, நமக்கு ஏவல் செய்யும் உயிர்களுக்கு நம்மை யறியாமலே இழைக்கின்ற கொடுமைகளை எடுத்துக் காட்டி, கன்னெஞ்சையும் கரைத்து இரக்க வுணர்ச்சியை எழுப்பவல்லதாயுள்ளது. கிடைத்த வுணவைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணவேண்டும் என்னும் உண்மையை 'அப்பம் திருடின எலியும்', கள்ள வழியினில் செல்பவரை யமன் காலடி பற்றித் தொடர்வான் என்னும் உண்மையை 'நெற்பானை எலியும்' தத்தம் அனுபவங்களைக் கொண்டு விளக்கி நிற்கின்றன.

---

† கஞ்சமகள் - தாமரையாகிய பெண். ‡ கண்ணீர் உகுத்தல் - 1. கண்ணிலிருந்து நீரை வடித்தல்; 2. தேனாகிய நீரைச் சிந்துதல் எனச் சிலேடை.

பக்திச் சுவையின் உச்சநிலையை விளக்கிநிற்பது 'அன்பின் வெற்றி' என்னும் தொடர்நிலை. 'கருணைக் கடலை' ஒரு தனிக்காவியம் என்றே கூறவேண்டும். ஜீவ காருணியப் பிரசாரம் நடத்தி வந்த 'குமரன்' ஆசிரியர் முருகப்பா அவர்கள் வேண்டுகோளின்படி சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் பாடிக்கொடுக்கப்பட்டது இது. எவ்வளவு சிறந்த கற்பனைகள், தத்துவங்கள் இதன்கண் உள்ளன! தேசியக் கொடி, கதர்விற்பனை முதலியவை நாட்டுப்பற்றை யூட்டும் நற்றொண்டு செய்பவையா யுள்ளன. இவைபோலப் பல்வேறு துறைகளில் அமைந்த பாடல்கள் இன்னும் பல. அவையெல்லாம் பல முறை படித்துப் படித்து இன்புறத் தக்கவை. இளஞ்சிறுார் களுக்கு மட்டுமல்ல, பேரறிவாளர்க்கும் அவை நல்விருந்து களாம்; நல்லமுதங்களாம்.

இக் கவிமலர்களெல்லாம் 'நாஞ்சிநேசன்', 'தமிழன்' முதலான மலைநாட்டுப் பத்திரிகைகளிலும், செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், லக்ஷ்மி, கலைமகள், குமரன், ஆனந்த விகடன், தினமணி, லோகோபகாரி, ஈழகேசரி, தமிழ் நேசன், ஜனமித்திரன் முதலான பாண்டி, ஈழ நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளி வந்துகொண் டிருந்தன. கவிதைகளன்றிப் பல சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளும் தே - வி அவர்கள் எழுதியுள்ளார்கள். 'கேரளா ஸொஸைட்டி பேப்பேள்ஸிலும்', 'ஜேர்னல் ஆப் ஓரியண்டல் ரிஸர்ச்'சிலும் கல் வெட்டுகள் பற்றியும், அழகிய பாண்டிபுரம் முதலியார் வீட்டு ஓலைகள் சாசனங்கள் என்பவை பற்றியும் சிறந்த ஆராய்ச்சிகள் ஆங்கிலத்தில் எழுதிவந்தார்கள். மலபார் 'குவார்ட்டர்லி ரிவியூ'வில் 'நாஞ்சி நாட்டு வேளாளர்' என்னும் பொருள் பற்றி எழுதி வெளியிட்ட கட்டுரை தனிச் சிறப்புடையதாகும்.

இவற்றை யெல்லாம் விடச் சிறப்பாகச் சொல்லத் தகுந்த வெளியீடு வேறொன்றுண்டு. அது தகுந்த காலத்தில் வெளிப் போந்து மிகுந்த பயனை விளைவித்த ஒன்று. பண்டித S. முத்துசாமிப் பிள்ளையவர்களை ஆசிரியராகக் கொண்டு அனந்தைப் பதியினின்று வெளிப் பட்டுலவிய 'தமிழன்' என்னும் இதழில் வந்து கொண் டிருந்த இலக்கியம். அதுதான் 'மருமக்கள் வழி மான் மியம்' என்னும் புதுமைப் பனுவல்.

## 7. மருமக்கள் வழி மான்மியம்

இஃது, அக்காலத்து நாஞ்சிநாட்டு வேளாளரிடையே வழங்கி வந்த 'மருமக்கள் வழி' என்னும் அறக் கொடிய நச்சு மரத்தை வேரோடு வெட்டி வீழ்த்திய கோடரி. பிற சமுதாயத்தார் எள்ளி நகையாடலைக் கண்டும் உணர்ச்சியற்றிருந்த வேளாளரின் கண்ணிலும் கருத் திலும் கரிப்பினை யூட்டிக் கொந்தளித்தெழுமாறு செய்த கருமிளகு. அவர்களை ஒன்றுதிரட்டி ஒப்பற்ற சீர்திருத் தத்தை யுண்டு பண்ணிக் கொடுத்த மூவா மருந்து. இது சொல்வதெல்லாம் என்ன? இது ஆகாது, அது தீமை இது வேண்டும், அது வேண்டாம் என்று யாரையேனும் பார்த்துச் சொல்கின்றதா? இல்லவே இல்லை. மருமக்கள் வழியைச் சார்ந்த ஒரு குடும்பத்தின் நிலையை உள்ளது உள்ளபடி அழகிய சொல்லோவியமாகத் தீட்டித் தெளியக் காட்டுகின்றது. அதில் அணுவளவு கூடக் கற்பனையோ உயர்வு நவிற்சியோ கிடையா. மறைத்து மறைத்து வைத்துக்கொண் டிருந்த ஊழல்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்த ஒன்றுதான் தே-வி செய்த வேலை, ஆனால் அவற்றைப் பக்குவமாக நகைச் சுவை ததும்பத் திரட்டித் தருகின்றார். கதாபாத்திரங்கள் தாம் இதில்

பேசிக் கொள்கின்றார்கள். சிலவிடங்களில் பாத்திரங் களைச் சற்றுக் கடுமையாகவும் பேசவிடுகின்றார் தே-வி. இவர்களின் சாந்தமான போக்கை நன்கு அறிந்தவர்கள் இந்த முறையினை அவர்கள் கைக்கொள்ளக் கூடுமென்று கருதவே மாட்டார்கள். இந்த உக்கிர நெறியன்றித் தம் நோக்கத்தை நிறைவேற்ற வல்லது வேறில்லையென உணர்ந்தமையாலேயே இதனைக் கைக்கொண்டார்கள். ஆங்கிலத்தில் இதனை 'ஸட்டயர்' (ஹாஸ்ய கவி) யென்பர்.

தாம் கருதிய அனைத்தையும் விரித்துரைப்பதற்கேற்ற ஒரு கதாநாயகியைப் படைத்துக் கொள்கின்றார். நல்லூரில் பிறந்து, தாழக்குடியில் பஞ்ச கல்யாணிப் பிள்ளைக்கு ஐந்தாம் மனைவியாக வாழ்க்கைப்பட்டு, மாமியின் கொடுங் கோலாட்சியால் கொலையுண்டு, சக்களத்திகளின் அகங் காரத்தால் மிதியுண்டு, கணவரின் கடைக்கண் பார்வை யின்மையால் நசுக்குண்டு இறுதியில் அக்கணவனையும் இழந்து புலம்பித் தவிக்கும் நவீன கண்ணகியே அவ் வம்மையார். அவள் தானே தன் வரலாற்றைச் சொல் கின்றாள். தன்னைப் போன்ற பெண்களுக்குங்கூட நன்கு விளங்கும் மொழிகளில் தான் சொல்கின்றாள். இவளுக்கு உலகமே துன்பமயமாகத் தோன்றுகின்றது.

தன் கதையை முற்றுவிக்கக் காப்பாக இருக்குமாறு வேண்டப்படும் விநாயகரும் தன் போன்ற அகதியாகவே அவள் கண்களில் படுகின்றார். தன் புலம்பலில் சொற் சுவை பொருட்சுவைகளில்லை, எதுகை மோனை நயங்க ளில்லை என்றெல்லாம் இலக்கண வித்துவான்கள் கருதக் கூடுமே என்ற எண்ணம் வருகின்றது. 'அப்படியிருந்தால் தான் என்ன? எதனையும் அமைத்துக் கொள்வதற்குத் தான் இலக்கண அமைதிகள் உண்டே; அமையுமிட மறிந்து அமைத்துக் கொள்ளுங்களேன்' என்று சோகங்

கலந்த சிரிப்புடன் கூறி ஒதுக்கிவிட்டுக் கதையை தொடங்குகிருள்.

தன் கதையைக் குலமுறை கிளத்துப் படலம் முதல் கும்பி யெரிச்சல் படலம் ஈருகப் பதிெருரு படலமாகப் பகுத்துக் கொள்கின்ருள். இவற்றுக் கிடையே எத்தனை கேலிகள் ; கொடுமைகள் ; மடமைகள் ; சமுதாய ஊழல்கள் சித்திரிக்கப்படுகின்றன ! படிக்கப் படிக்க நகைப்பு ஒரு பக்கம், அவலம் ஒருபக்கம் உண்டாகும். இத்தனை கொடுமைகளுக்கும் ஏளனத்துக்கும் இடமா யிருந்ததா இச்சமூகம் எனத்தோன்றும். இச்சமூகத்திற் பிறந்தோரே இதன் சுவை முற்றும் அனுபவிக்க வல்ல வராவர்.

மாமி அரசியற் படலத்தில் அவள் கொடுமைகள் கூறப்படுகின்றன. அவள்,

'அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்
கொல்ல மிளகைக் குறுக்கி வைப்பாள்
உப்பில் புளியை உருட்டி வைப்பாள்
கறிக்குத் தேங்காய் கருக்கி வைப்பாள்
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்.'

இவள் திருவிளையாடலெல்லாம் பத்துப் பரஞ் சோதிகள் பாடினும் முடிவடையாதாம். கணவர் மனைவி யர் ஐவரோடும் ஒருநாள் குமரித்துறைக்குத் தீர்த்த மாடச் செல்கின்ருர். அடுக்கடுக்காக ஐவரையும் பற்றி ஐந்து முறை தீர்த்தமாடி வந்ததால் அறுபதுநாள் விடாச் சுரத்தில் வீழ்கின்ருர். ஏட்டைத் திருப்பித் திருப்பி யிருந்தும், பாட்டைப் பாடிப் பாடியிருந்தும் நாட்டு வைத்

தியர் நாளைக் கடத்தினர். இறுதியில் மிகத் தயவுள்ள மிஷியன் தொசர் மருந்து கொடுத்து, கணவரை மீட்டிக் கைகளிற் கொடுக்கின்றார். இவர்,

'காட்டை வெட்டிக் கஷாய மிடவோ
கடலைக் குறுக்கிக் குடிநீர் காய்ச்சவோ
மலையை யிடித்துச் சூரணம் செய்யவோ'

சொல்லி அவர்களைத் தொந்தரவு செய்யவில்லையாம்.

ஒருநாள், மருமகன் காரணவரிடம் வந்து அம்மான் என்றோர் அடக்கமில்லாமல், மாமன் என்றோர் வணக்கமில்லாமல் வழக்குப் போடத் தொடங்குகிறான்.

'ஆசை அங்கே அன்பும் அங்கே
பூசை இங்கே போசனம் இங்கே
ஆரைக் கேட்டுநீர் ஐந்துகல் யாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர் ஐயா!
பட்டப் பெயரும் பஞ்ச கல்யாணிப்
பிள்ளை யென்றுநீர் பெற்றுவிட் டீரே
... ... ... ...
காரணத் தீனம் கடிய தீனம்
கண்டூ ரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமா காது'

கால் அரை செலவாகும்; காரியமில்லை; உம்மைக் கூட்டில் ஏற்றிக் குறுக்கு மறுக்காய்க் 'கிராஸ்ᵐம்' கேட்டுக் கேவலமாக்கி விடவில்லையானால் வீரபத்திரன் மகனென் றென்னை மதிக்க வேண்டாம் என்கிறான். இது நாகாஸ்திரப்படலம்.

இதுகேட்ட காரணவர் கருடாஸ்திரம் தொடுக்கின்றார். அதில் காரணவர் தம் காரணவப் பதவியின் உயர்வும், குடும்ப கௌரவமும் தோன்றத் தாம் செய்த செலவுகளை யெல்லாம் எடுத்து விவரிக்கின்றார். ஆத்தாள் செத்த அடியந்திரச் செலவு, ஆலடி மாடன் கொடையில் தனக்குச் சல்லடம் கச்சை தைத்த செலவு, வில்லுக்காரி வீரம்மைக்குச் சேலையெடுத்துக் கொடுத்த செலவு, சானல் வார்ச்சர் சந்தனத் தேவருக்கு 'அட்ரஸ்' கொடுத்த செலவு முதலான செலவுகளை முறையே அடுக்கிவிட்டு,

'பிலே!

ஏழு வருஷமாய் இங்கிலீஷ் படித்தையே

ஏ, பி, ஸி, டி எழுதத் தெரியுமா?' என்று கேட்கின்றார்.

பின், மைத்துனன் வீரபத்திரபிள்ளை வந்து வசை புராணம் பாடி வாழ்த்துகிறான். அதற்கெல்லாம் 'வைய வைய வைரக் கல்லும், திட்டத் திட்டத் திண்டு கல்லு'மாய் இருக்கிறார் காரணவர். குடும்ப வழக்கு முற்றிக் கோர்ட்டு வழக்காக மாறுகிறது. வீர பத்திர பிள்ளை, காரணவருக்குச் சமன்ஸ் அனுப்பிவிடுகிறான். மேல வீட்டு வெள்ளையம் பிள்ளை இராஜி பேசச் சொல்கிறார். கோர்ட்டிலே சென்று ஓட்டாண்டிகளான அநேகர் வரலாறுகளையும் எடுத்து அழகாகச் சொல்கிறார். வக்கீல் சாமி மலரடிகளிலும், குமஸ்தா மாடன் கோவில்களிலும் சாட்சித் தெய்வ சன்னிதிகளிலும் பொருள்களை வாரிக் கொட்ட வேண்டாம்; கொட்டிக் குடியைக் கெடுக்க வேண்டாம் என்று எவ்வளவோ கூறி எச்சரிக்கிறார். பயனில்லை. கேசு நடக்கிறது. குடும்பச் சொத்து கரைகிறது. காரணவரின் தொந்தியும் கரைகிறது. தன் கணவருக்குக் குளியில்லை; ஊணில்லை; உறக்கமில்லை. நடக்கும் வலிமையும் குறைந்தது.

'படிப்படி யாயிப் படியவர் பாடு
குறைந்து குறைந்து கொண்டே வந்தது
அண்டை வீடாகி அறைப்புரை யாகிப்
படிப்புரை யாகிப் பாயிலு மானார்
எழுந்து நடக்க இயலா தானார்
நடந்தவர் கீழே கிடந்தா ரம்மா!'

என்கின்றாள் மிகுந்த துக்கத்தோடு.

காரணவர் இனி எழுந்திருக்க மாட்டார் என உணர்ந்த அவர் தங்கையும் மருமகனும் ஒருநாள் வந்து சற்றும் இரக்கமில்லாமல் அரங்கு, சாயப்பு, தட்டு எல்லாம் பூட்டி, வைப்புத்திட்டங்களைக் கண்காணிக்கின்றனர்.

பாயிலே கிடக்கும்—
காரணவர்க் கந்திய காலம் தண்ணீர்
குடிக்கும் பாத்திரம் குடுக்கை யானதும்
பரந்த சட்டி படிக்க மானதும்
பாலும் அன்னப் பாலே யானதும்—

எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணாகின்றாள் அப் பெண்மணி. இறுதியில் என்ன? கணவர் கண்களை மூடிக் கயிலை போய்விடுகின்றார். இவள் ஏதுங் கதியற்றவளாய் விடப்படுகின்றாள். இதைக் கூறிவரும்போது அவள் துக்கம் அளவுக்கு மீறிவிடுகிறது. மனங் கொதிக்கின்றது. கும்பி எரிகின்றது, நெஞ்சங் குமுறுகின்றாள். இந்த மருமக்கள் வழியல்லவா என்னை இக்கதிக்காளாக்கிற்று என்றெண்ணி ஏங்குகின்றாள். அதன்மீது வசைமாரி பொழிகின்றாள். சோகத் தீயைக் கொட்டுகின்றாள். மருமக்கள் வழியா இது?

'தீரா வழக்கும் சென்மப் பகையும்
உற்ருருக்குள் உண்டாக்கும்வழி ;
அப்பனைப் பிள்ளை அண்டவொட் டாவழி ;
பிள்ளையை அப்பன் பேணவொட் டாவழி ;
குடியைக் கெடுக்கும் கொடிய தீவழி ;
அடிபிடி சண்டை அகலாப் பெருவழி ;
மனிதரைப் பேயாய் மாற்றும் பெருவழி ;
நடைப்பிணம் ஆயிரம் நடக்கும் பாழ்வழி ;
வெவ்வழி ; சற்றும் வெளிச்சமி லாவழி ;
ஐயோ ! இவ்வழி ஆகா தாகாது ;
ஆடு மாடுகட் காகும் இவ்வழி ;
மனிதர் செல்லும் வழியா யிடுமோ ?

கற்றவ ருளரோ கற்றவ ருளரோ
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவ ருளரோ கற்றவ ருளரோ ?

நீதியு முளதோ நீதியு முளதோ
மாதர் கண்ணீர் மாரு நிலத்தில்
நீதியு முளதோ நீதியு முளதோ ?

தெய்வமு முளதோ தெய்வமு முளதோ
பொய்வழிப் பொருளைப் போக்குமிந் நிலத்தில்
தெய்வமு முளதோ தெய்வமு முளதோ ?'—என்று

ஓங்கிய குரலில் ஒப்பாரி கூறி முடிக்கின்ருள்.

இக் கண்ணகியின் கண்ணீர் வீண்போகவில்லை. அது நாஞ்சில்நாட்டு வேளாளரின் இதயங்களைக் கூரிய வாளொப்ப ஈர்க்கலானது. இன்றே இக்கொடிய வழியை முடித்திடுவம் என இளைஞரெல்லாரும் முனைந்தெழுந்

தனர். காரணவ போகத்திலே மூங்கித் திளைத்திருந்த பழமை மோகங்கொண்டவர்களுங் கூட மனம் திரும்பிய வராயினர். ஆக, முன்னெல்லாம் சீர்த்திருத்தத்துக்கு ஆதரவற்றுப் போயிருந்த கூட்டங்கள், மான்மிய வெளி யீட்டுக்குப் பின் எண்ணற்ற மக்களைக் கொண்டதாய் விரிவடைந்தன. முடிவென்ன ? நாஞ்சில் நாட்டு வேளா ளரின் தாயமுறைச் சீர்திருத்த மசோதாவானது கொல்லம் 1101-ல் சட்ட சபையில் கொண்டு வரப்பட்டது. அஃது அவ்வாண்டிலேயே நிறைவேறி 1102-ல் நடைமுறைக்கும் வந்தது. இன்று நாஞ்சில் நாட்டு வேளாளர் சமுதாயம், தம் தாய் தந்தையரின் சொத்தினை அவர் மக்கள் ஆண் பெண் வேற்றுமை யின்றிப் பகிர்ந்தனுபவிக்க விடுகின்ற உண்மை மக்கட்டாய முடையதாய் இலங்குகின்றது. இந்த ஒப்பற்ற சீர்த்திருத்தத்தைக் கொண்டுவரக் காரண மாயிருந்த மான்மியம் நாஞ்சில் நாட்டில் பெற்றுள்ள பெருமை இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது.

மான்மியம் ஆசிரியர் பெயரோடு இதழில் வெளிவர வில்லை. பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து பெயர்த் தெடுத்துப் பதிப்பிக்கின்ற தோரணையில் வந்து கொண் டிருந்தது. இதனை மெய்ப்பிக்க, சிலவிடங்கள் ஏட்டில் பொடிந்து விட்டதாகவும் காட்டப்பட்டன. சற்றுத் தீவிரப் பிரயோகங்கள் கையாளத் தக்க இடங்களாகப் பார்த்துப் பொடிந்து போனது வேடிக்கையாகத் தான் இருக்கிறது. காட்டாக, வீரபத்திர பிள்ளை காரண வரைத் திட்டு மிடத்தில் —

**வஞ்சகா ! உன்குட வண்டியைக் கலக்கிப்**
**போடுகிறேன்பார் ... ... ... ... ...**

இதற்குப் பின்னுள்ள சில சீர்களும் அடிகளும் பொடிந்து

போயின. நூலிறுதியிலுள்ள வெண்பாவும் இவ்வாறே சிதைந்து போகின்றது.

'**காரணவன்...தெப்போ கல்யாணம் செய்வதெப்போ**' என்னும் அடியில் பொடிந்த பகுதி 'சாவ' என்னும் மொழி தான் என்பது வாசகர்களுக்குத் திட்டமாகத் தெரிந்துவிடும். ஆயினும் ஏடு பொடிந்ததற்கு யார் என்ன செய்ய முடியும்? இவ்வாறு, எவ்வளவுதான் பழமையையும் அருமைத் தன்மையையும் அதன்மீது ஏற்றினாலும் உடையவர் இன்னார் தாம் என்பது பலருக்கும் தெரிந்த இரகசியமாகவே இருந்தது. தமிழறிஞரும், உயர்தர நீதிமன்றத் தலைவருமான கெ. ஜீ. சேஷையர் அவர்களும், தமிழ்ப்பெரியார் ராவ் சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும் இதன் பெருமையை யாவருமறியச் செய்தார்கள்.

தமிழுக்கோர் புதுமையிலக்கியம் கிடைத்துவிட்டது. தே-வி யோடு நெருங்கிப் பழகிய திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் முகவுரையும் புதுமைப் பதிப்பகத்தாரின் கண் கவர் பதிப்பும் சேர்ந்து ஒவ்வொருவரையும் அதனை வாங்கி ஒருமுறை இருமுறையல்ல, பன்னூறு முறை படித்துப் படித்து இன்புறுமாறு தூண்டுகின்றன. மான்மியம் புத்தகமாக வெளிவந்த காலத்தில் பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் உயர் திரு. மகாதேவ ஐயரவர்கள் 'இந்து' பத்திரிகையில் விமரிசனமொன்று எழுதியுள்ளார். அது இதன் பெருமையை நன்கு எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

# 8. ஓய்வும் உபசரிப்பும்

1931-ல் தே-வி, ஆசிரியத் தொழிலினின்றும் ஓய்வு பெற்றார்கள். அது முதல் இயற்கை யழகும் அமைதியும் நிறைந்த சிற்றூராய புத்தேரியிலேயே வதிந்து வருகின்றார்கள். நினைந்த வண்ணம் நெகிழ்ந்து கொடுக்கத்தக்க சுற்றுச் சார்புகள், அதில் செழுமையும் அமைதியும் நிறைந்த இன்ப வாழ்க்கை, போதுமான ஓய்வு இவற்றோடு ஆடம்பரமற்ற முறையில் வாழ்வை நடத்திச் செல்லுகின்றார்கள்.

இந்த அமைதியான காலத்தில் இவர்கள் இதயத்தினின்று எழுந்த கவிகள் எல்லாம் மிகச் சிறந்தவை. சிந்தைக் கினிய - செவிக்கினிய - நாவுக் கினிய எளிய செஞ்சொற்களின் தொடுப்பிலே இன்பத்தைத் தேக்கி நிறுத்தவல்ல அவர்களின் இயற்கைக் கவித்துவ சக்தி இப்போது மிக உயரிய கருத்துக்கள் கருக்கொண்ட பொருட்களைத் தாங்கிவரலானது. அவையெல்லாம் பழுத்த அனுபவத்தோடும் முதிர்ந்த கற்பனைகளோடும் மிளிர்கின்றன.

ஆசிய ஜோதியில் — மகனை யிழந்த தாய் துயர் தேற்றல், புத்தர் துறவு, காதல் பிறந்த கதை முதலியன இக்காலத்து வெளியானவை. இவற்றைப் போலச் சிறப்பான வெளியீடு வேறொன்று வந்துகொண் டிருக்கின்றது. அதுதான் ' பாரசீகக் கவியமுதம் '. இதைப் பற்றிச் சில கூறவேண்டும்.

பாரசீகக் கவிஞரான உமர்க்கய்யாம் என்பார், பாரசீக மொழியில் எழுதியுள்ள கவிகளை ஆங்கிலத்தில் பலரும் மொழிபெயர்த்துள்ளார்கள். அவற்றுள் பிட்ஜ் - ஜிரால்ட் (Fitz-Gerald), என்பாரின் மொழி பெயர்ப்புத் தான் மிகச் சிறந்தது. அதனையும் சுவாமி கோவிந்த

தீர்த்தர் முதலியோரின் மொழிபெயர்ப்புக்களையும் ஒத்திட்டுப் பார்த்து, ஆசிரியன் உளப்பாங்கையும் குறிக்கோளையும் நுவல் பொருளையும் ஆய்ந்தறிந்து, தம்முணர்வோடு ஒன்றுமாறு கரைத்துத் தமதாக்கித் தமிழ் முதனூல் என்றுகூறுமாறு பாடப்பட்டது இப் பாரசீகக் கவியமுதம்.

உண்மையில் இது பெற்றுள்ள ஏற்றத்தை மதிக்காமல் சற்று மாறுபட்ட கருத்துக் கொள்கிறவர்களும் இருக்கலாம். 'என்னவாறாலும் மொழிபெயர்ப்புத்தானே' என்று அவர்கள் கூறலாம். அவர்கள் கூற்றுக்குக் காரணமில்லாமலுமில்லை. பெரும்பான்மையான மொழிபெயர்ப்புக்களும் எவ்வாறு வருகின்றன என்று நாம் சிந்திக்க வேண்டும். சொல்லுக்குச் சொல்லாகப் பெயர்த்தடுக்கி, கருத்து முட்டின்றி ஒழுகவும் தம் மொழி மரபுக் கேற்றவாறு இயைக்கவும் வகையறியாது குழப்பி, வைக்கப்பட்டிருப்பவைகளே தற்கால மொழிபெயர்ப்புக்கள் பலவும். இவற்றால் இலக்கியத் துறையில் மொழிபெயர்ப்பின் விலையே குறைந்து விடுகின்றது.

ஆனால், மொழிபெயர்ப்புக்க ளெல்லாவற்றையும் இதே கண்கொண்டு பார்த்தல் அறிவுடைமையன்று. பார்ப்பதாயின் கம்பராமாயணமும், சிந்தாமணியும் இன்றுள்ள பெருமையைப் பெற எவ்வாற்றானும் தகுதியற்றவை யாகிவிடும். புலவன், கதையையோ கருத்தையோ எம்மொழியினின்று திரட்டினாலும் சரி, அவன் இதயத்தினின்று எழுகின்றவை தனித் தமிழ் மூலமென்று தோன்றுமாறு இன்பவுருவெடுத்து வழிக்கொழுகுகின்றனவா என்பதே நமக்குக் காரியம். இத்தகைய புலவன், மொழிபெயர்ப்புப் புலவனாக மாட்டான் என்பதையும், உண்மையான படைப்புக் கவிஞனே யாவான் என்பதையும் நாம் நன்கு உணர்தல் வேண்டும். உமர்க்கய்யாம்

தமிழ்க் கவிஞனுக இருந்தால் இவற்றினும் மிஞ்ச எவ்வாறு பாடிவிடுவான் என்பதை ஊகிக்கவும் நம்மால் முடியவில்லை. செஞ்சொற் சதங்கையாய், இன்னேசை தழுவி, தமிழ் மரபோடொத்து விளங்கும் தே-வி யின் படைப்புக்களின் இனிமையைச் சுவைத்தறிய இரு பாடல்கள் கீழே தருகின்றேம்.

1. தண்ணூர் மதியும் புரிசடையும்
தாங்கும் தையல் பாகனென
எண்ணு தொருவன் சொன்னதுகேட்
டெவனே சொன்னுன்; அவனைக்கேட்
டண்ணு சொன்னுன்; அதுபோலின்
றடுத்த தம்பி சொல்கின்றுன்;
கண்ணுல் ஈசன் திருமேனி
கண்டா ரெவரு முண்டோ சொல்.

2. வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ ?

இவை போல்வன பல. இவை, சிறுகச் சிறுக இன்னும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. இன்னும் பல ஆயிரமாகப் பெருகிக் கிடைக்கும் பேற்றைத் தமிழர்கள் பெறுவார்களாக.

மேற் கூறியவையும் பிறவும் வார மாத இதழ்களில் வெளிவந்த காலத்தில் அவை அறிஞர்களின் கருத்தைப் பெரிதும் கவர்ந்து நின்றன. அவற்றில் முதன்முதல் மனம் இலயிக்க நின்றவர் ரசிக மணியான டி. கே. சிதம்பர நாத முதலியாரவர்களாவர். தே - வியின் பாடல்கள் என்றால் முதலியாரவர்களுக்குத் தெவிட்டா இன்பம். பாடிப்பாடி மகிழ்வார்; அனுபவிப்பார்; ஆனந்திப்பார்; கூட்டங்களிலெல்லாம் அதன் இனிமையை எடுத்துக் கூறிக் குதூகலங் கொள்வார். இவ்வளவும் போதுமா? தமிழராவார் ஒவ்வொருவரும் தே-வியின் பாமலரை மோந்து இன்பம் துய்க்க வேண்டுமென்று கருதினர். பலப் பல வெளியீடுகளிலும் பரிமளித்துக் கிடந்த அம்மலர்களை யெல்லாம் ஒருங்கு திரட்டித் தொடுக்கத் துணிந்தார். அப் பணியைப் புதுமைப் பதிப்பகத்தாரைக் கொண்டு முற்று வித்தார். அதன் பயன்தான் தமிழர் கைகளுக்கு அழகளித்து கருத்துக்கு ஆக்கமளித்து, மனத்துக்கு இன்ப மூட்டி நிற்கும் 'மலரும் மாலையும்'. 'மலரும் மாலையும்' வெளிப்பட்டதும் அதன் நறுமணமும், தே-வியின் பெரும் புகழும் அபேதமாக எங்கும் பரந்தன. மாலையைப் படியாதாரில்லை, தே-வியைப் போற்றாதாரில்லை. மாலையைச் சிறுவரெல்லாம் எமதென்றனர், சிறுமியர் எமதென்றனர்.

'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்
கிந்த நூலுரிய தாயென்றும் வாழ்கவே' என்று

தே-வியோ உரிமைப்படுத்தி விட்டார். ஆயினும் தம் உரிமை விரிக்கப்பட்டிருப்பதால் பெண்டிரோ தமக்குரிய தென்கின்றனர். ஆண்களோ தேசீயம் முதலியன பேசப் படுதலால் தமக்குரிய தென்கின்றார். சுருங்கக் கூறின் ஆத்திகர் நாத்திகர், ஏழையர் பணக்காரர், தேசத்

தொண்டர், இலக்கிய ரசிகர் முதலிய யாவரும் தத்தமக்குரியதாகக் கருதி இதனைப் படித்தின்புறுகின்றார்கள்.

'மலரும் மாலை'யும் பற்றி 'இந்து'ப் பத்திரிகையில் விமரிசனம் ஒன்று வந்தது. பாரபட்சமற்ற முறையில் எழுதப்பட்ட அழகிய விமரிசனம் அது. தற்காலத்தில் சிலர் எழுதுகின்றார்களே! பார்த்தால் விமரிசனமா, விளம்பரமா என்று ஐயம் வந்து விடுகின்றது. ஆளைப் பார்த்தும், பட்டத்தைப் பார்த்தும், முன்னுரையைப் பார்த்தும் எழுதித் தீர்த்து விடுகின்றார்கள். விமரிசகர்கள் துலாக் கோல் போன்றவர்களாயிருக்க வேண்டும் பேரறிஞர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் கூற்றுத்தான் மதிக்கவும்படும். மாகாணக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் உயர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கவிமணியோடு எவ்விதத் தொடர்பு மில்லாதவர். அவர் எழுதிய விமரிசனத்துக்கு நாம் சரியான விலை கொடுக்க வேண்டுமல்லவா? வேண்டுமேல் அதனை 'இந்து'ப் பத்திரிகையில் கண்டு கொள்ளலாம்,

தே-வி சிறந்த கவிஞர் வரிசையில் வைத்தெண்ணப் பட்டார். பெரியார் பலரும் அவரிருக்கும் இடந்தேடிச் சென்று கண்டு களிக்கலாயினர். தமிழன்பர்கள் தே-விக்குத் திருவிழாக் கொண்டாடத் தலைப்பட்டார்கள். 'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்' கவிஞரை முதற்கண் போற்றிய பெருமையைப் பெற்றுக் கொள்ளத் துணிந்தது. அதன் பயனாக 1940 டிஸம்பர் 24-ஆம் நாள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் வைத்து நடந்த புலவர் பெருங் குழுவின் தலைவர் உமாமகேசுவரனார் அவர்களால் 'கவிமணி' என்னும் பட்டம் சிறப்புற வழங்கப் பட்டது. பட்டம் அளிக்கப்படுவதற்கு முன்னரே தே-வியிடம் இது பற்றித் தெரிவித்தபோது, இது தம் திறமைக்கு மிஞ்சிய தென்றும், தமக்கு

வேண்டா மென்றும் எவ்வளவோ மறுத்து எழுதினார்கள். இன்றும் அவர்கள் கருத்து அதுவேயாதலின் இதனை மதித்துத் தாங்கிக் கொள்வதில்லை.

கவிமணியவர்களின் மேன்மையை டி. கே. சி. அவர்கள் வழியாகவும், 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா அவர்கள் வழியாகவும் செட்டி நாட்டன்பர்கள் உணர்ந்தார்கள். கவிமணியவர்களை அழைத்து வந்து ஒப்பற்ற முறையில் உபசரிப்பதெனத் தீர்மானித்தார்கள். அழைத்து வரும் பொறுப்பையும் டி. கே. சி அவர்களுக்கே அளித்தனர். கவிஞரைக் கௌரவிப்பதன் மூலம் கௌரவம் பெறப் போகிறவர் தாமே என்பது செட்டி நாட்டார்க்கு நன்கு தெரியும். 'இதனைப் பெற இதனைக் கொடுக்க வேண்டும்' என்பதை நன்குணர்ந்த வணிகர் பெருமக்கள் அன்றோ அவர்கள்?

1943 மே 11-ஆம் நாள் காலை ஏழுமணியிருக்கும். தேவகோட்டை ரஸ்தா புகைவண்டி நிலையத்தில் செல்வந்தர்கள் அறிஞர்கள் முதலியோரின் பெருங் கூட்டமொன்று திரண்டு நின்றது. அவர்களனைவரும் விழித்த கண் இமையாமல் வண்டியையே எதிர் நோக்கி நின்றனர். வண்டியும் ஊதிக்கொண்டு வந்து நின்றது. இரண்டு கிழவர்கள் அதினின்றும் இறங்கினர். அத்தனை பேர்களுடையவும் ஒருமுகமான மலர்ந்த பார்வை அவ்விருவர் மீதும் விழுந்தன. அனைவர் கைகளும் ஒருங்கு குவிந்தன. இவைகளுக்கெல்லாம் இலக்காவார் எவர்? நம் கவிமணியும், ரசிகமணியும் தாம் என்று சொல்லவும் வேண்டுமோ? அன்பர் பலர் மாலையிட்டு, சிறப்புக்கள் செய்து கவிமணியை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அன்று முருகப்பா அவர்களின் 'மகளிர் இல்லத்தில்' தங்கி, மறுநாட்காலை அங்கு அரசும் வேம்பும் நட்டு வாழ்த்தினார் கவிமணி.

பின், ஆத்தங்குடிக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். நா. அரு. மண்டபத்தில் நகரத்தாரின் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக் கணக் கான மக்கள் குழுமிய அக்கூட்டத்தில் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் கவிமணியை வர வேற்று அரியதோர் சொற்பொழிவு ஆற்றினார்கள். பண்டைப் புலவர்களைப் பேரரசர்கள் உபசரிக்கும் புராதன முறைப்படி அழகிய வேலைப்பாடுகளமைந்த பொன்னாடையைப் போர்த்தினார்கள். அதோடு, வெள்ளி யில் நேர்த்தியான சித்திர வேலைப்பாட்டுடனே பாராட் டுரை பொறிக்கப்பட்டு, நாற்புறமும் தங்கம் பொதிந்த உருவங்களையுடைய 'புகழ்மொழியிதழ்' அமைந்த பேழையையும் அளித்து மாலை யணிவித்தார்கள். அதன் பின் டி. கே. சி, முருகப்பா முதலான பல அன்பர்கள் கவிமணியைப் பாராட்டிப் பேசினர். முடிவுரையாகத் தே-வி சில கூறினர். அதன் கண் உள்ள ஒன்றிரண்டு பகுதிகள் கீழே தரப்படுகின்றன :—

'இனிய தமிழை, செந்தமிழை, எவர்க்கும் ஆசை தரும் தமிழைப் போற்றி வரும் நகரத்தாரவர்களே! பெண்மணிகளே! முதலில் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். ஒரு யானைக்கு அணி விக்க வேண்டிய பொன்னாடையை ஓர் ஆட்டுக்குட்டிக்கு அணிவித்தார்கள் நமது ராஜா ஸர். இந்த ஆட்டுக் குட்டி இதைத் தாங்குமா என்று நீங்களே யோசியுங்கள். ஆனால் ராஜா அவர்கள் என்னை யானை யென்று நினைத்து இந்தப் பீதாம்பரத்தை அணிவித்திருப்பதினால் யானை யின் பலம் இந்த ஆட்டுக் குட்டிக்கும் ஏற்படுமல்லவா?

'நான் நான்கு ஐந்து வருஷம் 'எக்ஸிமா'' என்ற நோயினால் மிகவும் கஷ்டப்பட்டேன். அதற்காக ஆங்கி லேய வைத்தியம், அஷ்டாங்க யோகம் முதலிய முறைகளி

லெல்லாம் பார்த்துவிட்டேன். நோய் தீர்ந்த பாடில்லை. முடிவில் ஒருவர், திருச்செந்தூர் முருகன் மீது பாடினால் நோய் தீருமென்று சொன்னார். அவ்விதமே முருகன்மீது பாட்டுப் பாடினேன். நோயும் தீர்ந்து விட்டது என்ன லாம். ஏன் இந்தக் கஷ்டம்? எனக்கும் வயதாகி விட்டது, தமது திருவடி நிழலில் சேர்த்துக் கொள்ள வேண்டியது தானே! அவ்விதம் செய்யாமல் ஏன் காப்பாற்றினார்? யோசித்துப் பார்த்தேன். ஒன்றும் புலப்பட வில்லை. ஆனால் இன்றுதான் புலப்பட்டது. "நகரத்தார் மகா சந்நிதானத்திலே நமது ராஜா அவர்கள் உனக்குப் பெருமை செய்யவேண்டி யிருக்கிறது; கவலைப் படாதே" என்று என்னை அந் நோயினின்றும் காப்பாற்றியிருக்கிறார் என்று இப்பொழுது நினைக்கிறேன்.

'ஆயுதங்களினால் உலகத்தை வெல்லலாம் என்று சில சண்டாளர்கள் நினைக்கிறார்கள். அது தவறு. அன்பினால் யாவற்றையும் வெல்லலாம். இப்பொழுது என்னை உங்கள் அன்பினால் விலைக்கே வாங்கிவிட்டீர்கள். ஏதோ நான் பித்தன் போல் பாடிய பாட்டுக்களை மெருகு கொடுத்து அழகு செய்து டி. கே. சி அவர்கள் உங்களை ரசிக்கச் செய்கிறார். அவர் யாவரையும் எளிதில் மயக்க வலலவர்; எவர் மனத்தையும் தம்மிடம் இழுத்து விடுவார்.

'நீங்கள் இவ்விதம் பெருமைப்படுத்தினதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்! நீங்கள் எல் லோரும் நீடூழி காலம் வாழ வேண்டு மென்பதே என் பிரார்த்தனை. பொன்னாடையைப் பற்றிக் 'கல்கி' ஹாஸ்ய மாக எழுதியிருக்கிறார். "நூல்விலை அதிகமாயிருக்கும் காலத்தில் பொன்னாடையைப் போர்த்திக் கவியைத் தண்டிக்கலாமா?" என்றெழுதியிருக்கிறார். நூல்விலை அதிகத்துக்குப் பொன் என்றால் காகித விலை அதிகப்

பட்டதற்காக வெள்ளியிதழ்ப்பஞ்சமேற்பட்டால் தனவணிகர்களுக்கு நூல் பொன்னுகவும், தாள் வெள்ளியாகவும் மாறிவிடும் போலும்.'

மறுநாள் ராஜா ஸர் அவர்கள் மாளிகையில் தே-வியின் பொருட்டு அரியதொரு விருந்து நடைபெற்றது. விருந்தின் முடிவில் திரு. அண்ணுமலை செட்டியாரவர்கள் ஆயிரம் ரூபாயடங்கிய 'கவர்' ஒன்றை நீட்டி 'இதைக் காணிக்கையாகப் பெற்றுக் கொள்ளவேண்டும்' என்ருர்கள். தே-வி அதனை வாங்கிக் கொள்ளாமல் 'ஐயா! இவை எனக்கு எதற்கு? யாதேனும் ஒரு தருமத்துக்குக் கொடுத்துவிடுங்கள்' என்று கூறினுர். மறு நிமிடமே, இம்மறுப்பு ராஜா அவர்களுக்கு மனத்தாங்கலை யுண்டுபண்ணக் கூடுமோ என்ற ஐயம் வரவே, அவரைக் கௌரவிப்பதற்காக என்று அதனை வாங்கினுர். வாங்கினவர் அப்படியே வலப்புறமிருந்த முருகப்பா அவர்களிடம் கொடுத்து விட்டார். அவ்வளவுதான்.

சில மாதங்கள் சென்றன. தாள் வடிவமாயிருந்த ரூபாய்கள் எல்லாம் முன்னைய வெள்ளி வடிவத்தையெடுத்து அழகிய பாத்திரங்களாகப் பரிணமித்தன. டி. கே. சி அவர்கள், திருநெல்வேலி திவான் பகதூர் ஆவிடையப்ப பிள்ளையவர்கள், ஆத்தங்குடி சுப்பையா செட்டியாரவர்கள் என்றிம் மூவரையும் துணைக்கொண்டு தே- வியின் வீட்டுக்குள்ளே புகுந்தன. தே-வி திருமுன் காணிக்கைப் பொருளாக அமைந்து நின்றன. கவிமணியவர்களைக் கர்வபங்கம் கண்டு விட்டோம் என்ற எக்களிப்பே வந்த மூவருக்கும்.

உண்மைதான். தே-வியும் முதலில் திகைத்துத்தான் போனுர். ஆனுல் இதற்கெல்லாம் வழி வகுத்துக் கொடுப்பது அவர் நுண்மதிக்கு அரிய செயலா? மறு

னாளே, தாம் பெற்ற தொகையை ஓர் அறநிலையத்துக்குச் செலுத்தி ஈடுகட்டிவிட்டார். அதுதான் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்துக்குத் தம் அருமை அன்னை ஆதி லட்சுமி அம்மையார் பேரால் ஆயிரம் ரூபாய்க்கு விடப் பட்ட நிதி (Endowment). B. A. வகுப்பில் தமிழில் முதற்றரமாகத் தேறுகிறவர் இதன் பலிசையைப் பரிசி லாகப் பெறக் கடவர் என்பது இதன் நிபந்தனை. இது நிகழ்ந்து வருகிறது. இந் நிகழ்ச்சி தே-வியின் பொரு ளாசை யின்மையையும், தமிழார்வத்தையும் நன்கு விளக்குவதாகு மன்றோ?

பிறிதொரு சமயம், ராஜா ஸர் அவர்களை வாழ்த் திப் பலகவிகள் பாடியபோது, ராஜா ஸர் அவர்கள், தமக்குச் செய்த உபசரிப்பையும் இரு கவிகளில் குறிப் பிட்டுள்ளார்கள்.

'உருகி அன்பு பெருகிவழிந் தோடி ஒழுக எதிர்வந்து
வருக வருக வருகவென மதுர மொழிகள் பலகூறி
அருகி லமரச் செய்தென் னோடளவ ளாவி அமுதளித்த
தருகை நீண்ட பெருந்தகையைத் தரணி மீது
[மறவேனே'

'நாடு சேர்ந்த நல்லவையில் நடுநா யகமா யெழுந்தருளி
ஈடி லாத பொன்னுடை எவருங் காண எனக்கணிந்து
பீடு மிகவே பெறவைத்த பெரியன் அண்ணா மலை மன்னன்
நீடு வாழ ஈசனையான் நித்தம் நித்தம் வேண்டுவனே.'

1945 ஆடித்திங்களில் நாகர்கோவில் அன்பர்கள் கூடி S. L. B. ஆங்கில உயர்தரப் பாடசாலையில் வைத்துத் தே-வியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்புறக் கொண்டாடினார்கள். விழா, திருவாங்கூர்

உயர்தர நீதிமன்றத் தலைவர் திரு. ஐ. சத்திய நேசன் M. A, B. L அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. கூட்டத்துக்குத் தே-வி அவர்களும் அழைத்து வரப்பட்டிருந்தார்கள். அப்போது புகழ் மொழியிதழ்கள் பல வாசித்தளிக்கப்பட்டன. பல பெரியார்கள் பாராட்டுரைகள் நிகழ்த்தினர். இன்னும் பல சிறப்புக்களும் நடந்தன. முடிவில் தே-வி அளித்த மாற்றந்தான் மிக இனிமையானது.

'நமது பக்தியை வெளிப்படுத்துவதற்குச் சுவாமிக்குச் சந்தனத்தைக் குடங்குடமாகக் கொட்டுகிறோம். பன்னீரைக் குப்பி குப்பியாகக் கவிழ்க்கிறோம். ஆரங்களை ஒன்றன்மேல் ஒன்றாக அள்ளிப் போடுகிறோம். தோத்திரப் பாடல்களைச் சோர்வில்லாமல் பாடிப் புகழ்கிறோம். இவற்றையெல்லாம் அவரால் தாங்கிக் கொள்ள முடிகிறது. எதனால்? அவர் கல்லாய் இருப்பதால். நானோ சாதாரண மனிதன். இவற்றை என் உடலும் மனமும் தாங்கிக் கொள்ளுமா? நீங்களே யோசியுங்கள். இந்தப் புகழ் மொழிகளை யெல்லாம் கேட்டு என் உள்ளம் ஒருக்கால் பொங்கிப் பெருமிதங் கொண்டு விடாதா? ஆனால் நீங்கள் வாசித்தளித்தது "உபசாரப் பத்திரம்" என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆதலால் இதில் பொறிக்கப்பட்டவை யெல்லாம் வெறும் உபசார மொழிகள் என்றே கருதி அமைகிறேன். நீங்கள் என்னிடம் வைத்துள்ள அன்பைக் கண்டு பெரும் மகிழ்ச்சி உண்டாகிறது. இன்று நான் பிறந்த பயனைப் பெற்று விட்டது போலவே தோன்றுகிறது. உங்களை யெல்லாம் வாயார வாழ்த்துகிறேன்' என்று கூறினார்கள்.

மேற்கூறியவை போன்ற விழாக்களும், பாராட்டுக் கூட்டங்களும் தே-விக்கு நெடுக நிகழ்ந்த வண்ணமாகவேயிருக்கின்றன. 1944 செப்டம்பர் 26-ஆம் நாள் திருநெல்

வேலிக் கலையன்பர்கள் கூடிச் சிறந்த உபசரிப்பொன்று வழங்கினார்கள். தே-வியின் அன்புள்ளத்தோடு தம் அன்புள்ளத்தையும் கரைத்து ஒன்றாக்கிக் கொண்டவர்கள் திருநெல்வேலிப் பெரியார்களிற் பலர். இத்தகையோர் தமக்கு உபசரிப்பு நடத்தத் தேவையில்லை யென்பதைக் கூறி மறுத்தார் தே-வி. ஆயினும் அவர்கள் விடவில்லை. பெருங்கூட்டம் கூட்டினார்கள். விருந்துகளும், நடனங்களும், வேடிக்கைகளும் நடத்தினார்கள். பொற்றகட்டில் பொறிக்கப்பட்ட 'புகழ்மொழியிதழ்' அளித்துக் கௌரவித்தார்கள்.

தமிழ்க் கவிஞர் என்ற காரணத்திற்காகத் தமிழ் மக்களால் ஒன்றுபட்ட மனத்தோடு அழைத்து இருத்திப் போற்றிப் புகழப்படும் முதற் கவிஞர் நமது கவிமணியவர்களேயாவர். இவ்வளவுக்கும் இவரோ படாடோபமான உபசாரங்களையும், சிறப்புக்களையும் அறவே வெறுப்பவர். எனினும் உபசரிப்புக்கள் அனைத்தையும் புறக்கணித்துவிட அவரால் இயல்வதில்லை. ஆனால் அவர் உடற்கோளாறு அவர் எண்ணத்துக்கு உறுதுணை புரிவதாக வுள்ளது.

## 9. கவிதைப் பண்பு

கவிதை என்றால் என்ன ?

இதைக் கேட்டுவிடுதலோ யார்க்கும் எளிது. ஆனால் விடையிறுப்பது சற்று அருமைதான். சொல்லத் துணிகின்றவரெல்லாம் வெவ்வேறு மாதிரியாகவே சொல்கின்றார்கள்.

ஒருவர் சொல்கின்றார்—'உணர்ச்சியைத் தருவது கவிதை' என்று.

அப்படியானால் புலம்பலும் அழுகையுங் கூடக் கவிதையாக வேண்டுமே.

இன்னொருவர்—'வயிற்றுக்கு வழி வகுப்பதெதுவோ அது கவிதை' என்கின்றார்.

அங்ஙனமாயின், பொதுவுடைமை அரசாங்கங்கள் வகுத்துள்ள அரசியல் திட்டங்கள் தாம் கவிதைகள் என்று ஏற்பட்டு விடுமே.

'மனிதனை மனிதனாக்குவதே கவிதை' என்பது வேறொருவர் கூறும் இலக்கணம்.

இது திட்டமற்ற கூற்று அல்லவா? இத்தலைப்பில் எத்தனையோ பல காரியங்கள் அடங்கி நிற்குமே.

'மேற் கூறப்பட்டவை யனைத்தும் பிழையா?' என்பது இன்னொருவர் கேட்குங் கேள்வி.

அவையெல்லாம் கவிதைக்கு ஏகதேச இலக்கணங்களாக இருக்கின்றனவே யன்றி வரையறுக்கப்பட்ட திட்டமான இலக்கணங்களாக இல்லை. அவற்றைக் கவிதை யிலக்கணம் அல்லது கவிதைப் பண்புகள் என்று கூறுவதைவிடக் கவிதைப் பயன்கள் என்று கூறுவதே பொருத்தம். கவிதைக்கு இலக்கணங் கூறுவது இவ்வளவு கடினமானதாயிருக்கின்றது. கவிச்சுவையும் செவிச்சுவையும் நன்குணர்ந்த ரசிகமணியான டி. கே. சி அவர்கள் கவிதைபற்றி என்ன கூறுகின்றார்கள் என்பதைக் கீழே தருகின்றோம்.

"கவி என்றால் இன்னது என்று சொல்வதற்கு இலக்கணம் கிடையாது; உலகத்தில் எங்குமே கிடையாது. யாப்பியல் இந்த விஷயத்தில் என்ன உதவியும் புரிவதில்லை. வெண்பா இது, விருத்தம் இது என்று ஏதோ சொல்லமுடியலாம்; ஆனால் கவி இது என்று சொல்லவே முடியாது. ஒரு பாஷையோடும், அதிலுள்ள சிறந்த கவிகளோடும் உண்மையான ஆர்வத்தோடு, படா

டோபத்தை யெல்லாம் தூரத்தே விட்டு விட்டு நெடுநாள் பழகி வருவோமானால் அது தெரியவரலாம். இதுவும் தாய்மொழியில் தான் தெரியக்கூடும்; இதர பாஷைகளில் தெரியமுடியாது என்று கவி இரவீந்திரர் சந்தேகத்துக்கு இடமில்லாமல் சொல்லியிருக்கிறார்.

"கவியை யுணர்வதே இவ்வளவு கஷ்டமென்றால் கவியைப் பாடுவது எவ்வளவு கஷ்டம் என்று சொல்லவும் வேண்டுமா? உலகத்தில் ஆயிரம் வருஷத்திற்கு ஒரு தடவை கவி பிறக்கிறதுண்டு என்று கவியின் அருமையையும் அதன் பெருமையையும் பற்றி நன்கு ஆராய்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொன்னதும் வெறும் வின்னியாசம் அல்ல; உண்மையைத் தெளிவு படச் சொன்ன நேரான வார்த்தையே."

(இதயஒலி. பக். 115)

ஆம்; இவ்வளவும் உண்மை. ஆனால் கவியின் இலக்கணம் இப்படிப்பட்டதென்று சொல்லவே முடியாதா? எவரும் சொன்னதில்லையா?

சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவும் கூறிய டி. கே. சி அவர்களே அதே மூச்சில் கவியிலக்கணத்தைத் தெளிவு படக் கூறியிருக்கிறார்கள். எவ்வளவு தெளிந்து ஆய்ந்து பேசும் பேச்சு என்பதைப் பாருங்கள் :—

"ஒரு கவிக்கு விஷயம் எதுவாயுமிருக்கலாம். ஆனால் எடுத்துக் கொண்ட விஷயத்தில் ஆழ்ந்த ஆர்வம் இருக்க வேண்டும். அதாவது ஆசையோ வெறுப்போ அழுத்தமாயிருக்கவேண்டும். இவைகளையே ரஸங்கள் என்று நம்மவர்கள் குறிப்பிட்டுச் சொல்லுவார்கள். அநேக விஷயங்கள் சம்பந்தமாக ரஸஞானம் சாமானிய மக்களுக்கும் உண்டு. ஆனால், இந்த உணர்ச்சிக்குத் தக்க விதமாகப் பாஷையில் அடங்கிக் கிடக்கிற பாவமான சொல், பாவமான இசை (ஆங்கிலத்தில்-ரிதும்), பாவமான கட்டுக்

கோப்பு (டெக்னிக்)—இவைகளை அனுபவிக்கும் திறம் சாமானிய மக்களிடத்தில் காணப்படுவதில்லை; அபூர்வமாகத் தான் காணப்படுகிறது. ஆதிகாலந் தொட்டு மொத்தத்தில் பத்துப் பதினைந்து பேர் ஒரு பாஷைக்கு இருந்தால் அந்தப் பாஷை செய்த புண்ணியந்தான். உணர்ச்சியானது சொல், இசை, கட்டுக்கோப்பு இவைகளோடு ஒத்த உருவத்தில் வெளிவந்து விட்டதென்றால் அதுவே கவி. அது அற்புத சிருஷ்டிதான். இப்படி எழுந்த ஒரு கவிக்காக அந்தப் பாஷைக்குரியவர் ஒரு விழாக் கொண்டாடினால் பொருத்தமே. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இவ்விதமான கவிகள் எத்தனையோ பாடியிருக்கிறார்கள்." (இதய: பக். 118)

உணர்தற்கும் உணர்த்தற்கும் அரியதாய், தோன்றியவாறெல்லாம் சொல்வதற்கு இடமளித்து நின்ற கவிதை யிலக்கணத்துக்குச் சூத்திரம் செய்து காட்டியதுபோலக் கூறிவைத்த அற்புதப் பேருரைக்காக டி. கே. சி அவர்களுக்கே ஒரு விழாக் கொண்டாடலாம் போல் தோன்றுகிறதல்லவா?

பேரறிஞனை கவிஞன் கல்லையோ மண்ணையோ, கதையையோ நிகழ்ச்சியையோ காண்கின்றான். உள்ளம் அதில் தோய்கின்றது. ஒருவகையான உணர்ச்சியைக் கொள்கின்றது. உள்ளத்துள்ள அவ்வுணர்ச்சி, பொங்கித் ததும்பிச் சொற்களின் துணையினால் வெளிப்படத் துணிகின்றது. சொற்களும் இனியவையாய் இன்னோசை தழுவி லயம்பட அமைந்து நான்முன்னே நான்முன்னே என்று முன்னே வந்து நிற்கின்றன. உணர்ச்சி பாவமானது உயர்ந்த உண்மைகளைத் தாங்கிக்கொண்டு அவற்றினூடே பாய்ந்தோடுகின்றது, படிப்பவர் உள்ளத்தில் அதே உணர்ச்சியை எழுப்பவல்ல ஆற்றலோடு. இந்தத் தன்மையைத்தான் டி. கே. சி அவர்கள் '**உணர்ச்சியானது சொல், இசை, கட்டுக்கோப்பு, இவைகளோடு**

ஒத்த உருவத்தில் வெளிப்படுவது கவிதை' என்று அழகு படக் கூறினார்கள்.

இந்த அழகிய இலக்கணத்தை இன்னும் வடித்தெடுத்துக் கவிதையாகவே கூறியிருக்கின்றார் ஒரு பெரியார். அவர் யார்? வேறெவருமல்லர்; நமது கவிமணியவர்கள் தான். அதனைக் காணுங்கள் :—

'உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை'

இதற்கொரு விளக்கமே தேவையில்லை. ஆயினும் உள்ளத்துள்ளது என்றது—உணர்ச்சி பாவங்களை யென்றும், இன்பம் என்றது—சொல்லின்பம் பொருளின் பங்களை யென்றும், உருவெடுத்தல் என்றது—அவை கட்டுக் கோப்பாக அமைதலை என்றும் மட்டும் சொல்லிக் கொள்கின்றோம். இனி, முதலடிக்கு வேறொரு கருத்தும் கொள்ளப்படும். புலவர்களுக்குப் பொருள்களைக் கண்டு அல்லது கேட்டுத்தான் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதில்லை. ஓர் ஓவியப்புலவன் பூஞ்சோலை ஒன்று வரையக் கருதுகிறானென்று வைத்துக் கொள்வோம், அவன் தன் அறைக்குள் இருந்து கொண்டே பலவகை மரம் செடி கொடிகளையும், பன்னிறப் பூக்களையும், பூவார்ந்த பொய்கைகளையும், பசும் புற்றரைகளையும், செய்குன்று சிற்றருவி நீரோடை என்பவற்றையும், துள்ளி விளையாடும் மானினங்களையும், தோகை விரித்தாடும் மயில்களையும் அழகுபடச் சித்திரித்துக் கண்ணையும் கருத்தையும் கவரச் செய்துவிடுவான். இத்தகை ஒன்றை அவன் என்றுமே கண்டிருக்கக் கூட

மாட்டான். இருந்தும் எங்ஙனம் தீட்டினான்? இவை யெல்லாம் அவன் கருத்தில் கிடக்கின்றன. இவற்றை ஏற்றவாறு அமைத்து அழகுபடக் காட்டும் ஓவிய ஆற்றல் அவன் உள்ளத்தே உள்ளது.

இப்படித்தான் கவிஞனும். கவிஞன் கடல் நடுவே வதிந்துகொண்டு வளமார்ந்து ஓங்கிய மலையைச் சொல்லோவியத்தால் காட்டிவிடுவான். அவன் சோழ நாட்டில் இருந்துகொண்டு அயோத்தி நகரை அழகுபட வருணிப்பான் நாஞ்சில் நாட்டில் இருந்துகொண்டு இராஜகிருக நகரத்தைக் கற்பனை செய்வான். அவனுக்குக் காட்சிகள் தேவையில்லை; கேள்விகளும் வேண்டுவதில்லை. அவையின்றியே அவனுக்கு எதையும் காட்டமுடியும். ஏதனால்? கவிதை, அதை வெளிப்படுத்தும் ஆற்றல் இவை அவன் உள்ளத்திலே அமைந்து கிடக்கின்றதனால். இதனைத்தான் 'உள்ளத்துள்ளது கவிதை' என்று கவிஞர் குறிப்பிட்டார் என்று கொள்ளலாம்.

இவ்வாறு முதலடியிலேயே கவிதையிலக்கணத்தை முடித்துவிட்ட கவிஞர். அவ்விலக்கணம்படத் தன் தாய் மொழியில் இயற்றுவது தான் உண்மைக் கவிதையும், அனுபவிப்பது தான் உண்மைக் கவியின்பமும் ஆக இருக்கும் என்னும் உண்மையைப் பின்னடியில் வைத்து விளக்கினார். இதற்காகவே 'தெள்ளத் தெளிந்த மொழியில்' என்னாது 'தெள்ளத் தெளிந்த தமிழில்' என்று கூறினார்.

இக்கூற்று—"கவியை அனுபவித்துவிடுவதற்காக எத்தனையோ மொழிகளைக் கற்றேன். இங்கிலீஷ் மட்டு மல்ல; பிரஞ்சு பாஷை, லத்ஜெர்மன் பாஷை, லத்தீன், கிரீக் ஆகிய புராதன பாஷைகள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கற்றேன். என்ன பயன்? கவியின் இதயம் தெரிந்ததா? இல்லவேயில்லை. என் தாய்மொழி ஒன்றன் மூலமாகத்

தான் அது தெரியவந்தது. ஒருவன் பிற மொழிகளின் மூலமாகக் கவியின் உயிர்நிலையை அறியப் புகுவது, காதலியின் அருள் முறுவலைப் பெறுவதற்காக வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற அழகுதான்" என்று கவி இரவீந்திரநாத தாகூர் அவர்கள் கூறிய பொன் மொழிகளின் இதய பீடமாய்ப் பொலிகின்றது. இந்தப் பேருண்மைகளெல்லாம் பொதிய நிற்கும் கவிமணியின் மணிமொழிகள் வைரச் சட்டமிடப்பட்ட பொற் பலகையில் பொறிக்கத் தக்கவையன்றோ?

தே-வி, கவிதையைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டால் நாள் முழுமையும் கேட்டுக்கொண்டே யிருக்கலாம். அவ்வளவு இன்பமாக ஆற்றொழுக்காக அழகு படப் பேசுவார்கள். அதன் மிகச்சிறிய சுருக்கம் ஒன்று கீழே தரப்படுகிறது.

" உள்ளத்தினின்று, தானே கனிந்து வெளிப்படுவது தான் கவி. அத்தகையதைக் கவி என்று கூறுவதை விடக் கனி என்று கூறுவது மிகப் பொருத்தம். கவிகளைக் கவிஞன் எப்பொழுதும் தள்ளிக்கொண் டிருப்பான் என்று எதிர்பார்த்தல் இயலாது. அவன் பழமரத்தைப் போன்றவன். மரம் உரிய காலத்திலே தான் பழங்களைக் கொடுக்கிறது. கவிஞனும் உணர்ச்சி தன்னைத் தாக்கிய காலங்களிலே தான் கவிதை புனைகிறான். பல காலங்கள் அவன் பாடாமல் இருந்து விடவுங் கூடும். 'இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும், அம் மென்றால் ஆயிரமு' மாகப் பாடித் தள்ளிவிடவுங் கூடும். அதற்குப் பக்குவமாக அவன் உள்ளம் கனியவேண்டும். இன்னும் சொல்லப் போனால் உண்மையான கவிதை, பொங்கிவரும் கங்கைப் பெருக்கைப் போன்றது. அது இன்ப ஊற்றாக அமைந்து, ஓசையால் — பொருளால் — உணர்ச்சியால்

உள்ளத்துள் இன்பத்தைத் தேக்கி எவரையும் ஆனந்தப் பெருங் கடலுள் ஆழ்த்தி விடும்."

கவிஞர்கள் உள்ளக் கனிவு கொள்ளுகிற போதன்றிக் கவி பாடுவதில்லை; நிகழ்ச்சிகள் தம்மைத் தாக்கும் பொழுதே கவிதை புனைகின்றார்கள் என்பதற்குத் தே-வி பால் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியே தக்க சான்றாக இருக்கிறது.

ஒரு சமயம் இரண்டு நண்பர்கள் சுசீந்திரம் கோவிலுக்குப் போனார்கள். இந்துக்களல்லாதார் அக்கோவிலுக்குள் போகக் கூடாதென்பது இன்றும் நடைமுறையிலிருக்கும் நிபந்தனை. இவ்விருவரும் பார்ப்பவர்க்கு இந்துக்கள் என்று தோன்றுமாறு தான் செல்கின்றார்கள். இருவருள் ஒருவன் இஸ்லாமியன் என்பது அவனை அழைத்துச் செல்லும் நண்பனுக்கும், இவ்விருவரையும் கவனித்துக் கொண்டே பின்தொடரும் ஒருவருக்கும், கடவுளுக்கும் தான் தெரியும்.

கோவிலுக்குட் சென்றதும் இந்துவானவன் பய பக்தி வணக்கத்தோடு கைகுவித்த வண்ணமாய் நடந்து கருப்பக் கிரகத்துக்கருகே வந்து நின்றான். இஸ்லாமியனோ கோபுரம், தூண்கள் முதலியவற்றின் அமைப்புக்களையும், அவற்றிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டு வியந்தவனாய் "இது என்ன? இது எதற்கு?" அது என்ன சிலை? அதுதான் உங்கள் சாமியோ?" என்றெல்லாம் வாய் ஓயாமல் கேட்டுக் கொண்டே வந்தான். ஏனையவன் இவற்றுக்குச் சுருக்கமாக விடையிறுத்துக் கொண்டே வந்து சுவாமி முன் வீழ்ந்து வணங்கி, அரிதாக விடை பெற்று, அவனையும் அழைத்துச் சென்றான்.

இவ்விருவரையும் கவனித்துக் கொண்டே வந்த பெரியவர் நமது கவிமணியவர்கள் தாம். அவ்விருவரும் சென்ற பின்னர் தாமும் கடவுளைத் தொழுது விட்டு வீடு

சேர்ந்தார். அவர்கள், நீங்கிச் சென்றனரேனும் அவர்களின் உருவச் சிலைகளும், செய்கைச் சித்திரங்களும் தே-வியின் உள்ளத்தில் அப்படியே பதிந்து நின்றன. ஒரு புறம் இந்து நண்பனின் பக்தி முதிர்ந்த தோற்றம்; மறுபக்கம் மகமதிய அன்பனின் பொருட் காட்சிப் பார்வை. அன்றைய இரவு முற்றிலும் அதே தோற்றமும் சிந்தனையும் தான். உள்ளம் அதிலே ஈடுபட்டது; அனுபவித்தது; கவிந்தது. அது முதிர்ந்து அதிகாலையில் சிந்திய கவிரசம் தான் 'கோவில் வழிபாடு' என்னும் தலைப்பினையுடைய கவிதைகள். ஒருத்தி, தன் தோழியிடம் கேட்பதாகவும் அதற்கு அவள் விடையிறுப்பதாகவும் அமைந்த பாடல்கள் அவை.

'கோவில் முழுதுங் கண்டேன்—உயிர்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனை யான்—தோழி
தேடியுங் கண்டிலனே.
சிற்பச் சிலைகண்டேன்—நல்ல
சித்திர வேலை கண்டேன்
அற்புத மூர்த்தியினைத்—தோழி
அங்கெங்குங் கண்டிலனே.

## தோழியின் விடை

கண்ணுக் கினிய கண்டு—மனத்தைக்
காட்டில் அலையவிட்டுப்
பண்ணிடும் பூசையாலே—தோழி
பயனொன் றில்லையடி

உள்ளத்தில் உள்ளானடி—அதைநீ
உணர வேண்டுமடி
உள்ளத்தில் காண்பாய் எனில்—கோயில்
உள்ளேயும் காண்பாயடி.

மிகச் சிறந்த உண்மைகள். இவற்றைச் சிவவாக்கியர் போன்ற யோகிகளும் பாடத்தான் செய்தார்கள். அவை நம் உள்ளத்தில் இவ்வளவாக உறைக்கவில்லை. ஆனால் இவையோ உள்ளக் கனிவு கொண்டபோது பாடப் பட்டவை. ஆதலால் உணர்ச்சி பாவத்தோடு வெளி வந்துள்ளன. நம் உள்ளத்தில் ஆழ்ந்து பதிகின்றன. இவ்வாறு உயர்ந்த தத்துவங்களை எளிதாகக் கூறிவைக் கின்ற திறம் கவிமணிகளிடத்தன்றிப் பிறரிடம் அமையுமோ ?

அவர்கள் எந்தப் பொருளிலும் பேருண்மைகளைக் காண்பார்கள். எதிலும் வைத்து வெளிப்படுத்தியும் விடுவார்கள். நாம் 'புல்' என்று அற்பமாகக் கருதுவோம். அதுவும் அவர்களிடம் பேசும். அதைப் புராணமாக நமக்கு விரித்துத் தருவார்கள். கல்லும் அவர்களிடம் கதை சொல்லும். அதைக் காதாரக் கேட்பார்கள்.

'கல்லின் கதைகள் எல்லாம்—இரு
காது குளிரக் கேட்பேன்
புல்லின் பேச்சும் அறிவேன்—அதைப்
புராணமாக விரிப்பேன்.'

என்கின்றார் கவிஞர். ஆம்; உண்மை. புல்லின் பேச்சைக் கேளுங்களேன்.

'பசும்புல் என்பெயர் பட்ட பாடெலாம்
ஒரு பெருங் கதையாம் உரைப்பது மெளிதோ ?'

என்று தொடங்கி அது விரித்துரைக்கும் வரலாற்றையும், இறுதியில் கூறும் பேருண்மையினையும் நெஞ்சங் கொள்ளக் கற்றுணருங்கள், 'மலரும் மாலையும்' என்னும் தொகுப்பில்.

கவிகளுக்கு எந்தப் பொருளுமே எளிய பொருட் களல்ல. யாவும் அற்புதப் பொருள்கள் தாம். கவிமணி யவர்கள் கூறுகின்றார்கள்—

'வண்டி அற்புதப் பொருளாம்—வண்டி
மாடும் அற்புதப் பொருளாம்
வண்டி பூட்டும் கயிறும் என்றன்
மனத்துக் கற்புதப் பொருளாம்.
வண்டல் கிண்டி உழுவோன்—கையில்
வரிவில் ஏந்தி நின்ற
பண்டை விஜயன் போல—இந்தப்
பாரில் அற்புதப் பொருளாம்.'

இந்த மனப் பண்பு உண்மைக் கவிஞர்களுக்குத் தானே ஏற்பட முடியும். ஈயையும் எறும்பையும் தோழர்க ளாகவும், நாயையும் நரியையும் நண்பர்களாகவும் வேறு யாருக்குக் கருதமுடியும்?

'கவிஞன் எதைச் சொல்கின்றான் என்பதல்ல முக்கியம். எப்படிச் சொல்கின்றான் என்பதே காரியம்' என்பர் பெரியோர். கவிமணியவர்கள் குதிரையை எடுத்துக் கொள்கிறார்கள்; குருடனை யெடுத்துக் கொள் கிறார்கள்: புலியை எடுத்துக் கொள்கிறார்கள்; கிளியை யெடுத்துக் கொள்கிறார்கள். இவையெல்லாம் நாம் பார்க்காதவையா? கேட்காதவையா? அவர்கள் சொல்லும் போது நாம் கண்டறியாத உண்மைகள்,

கொண்டறியாத உணர்ச்சிகள், கொள்ளத்தகுந்த நீதிகள் என்பவை நம்முள்ளே வந்து மோதுகின்றன. இன்ப அலைகள் எழுகின்றன.

பசு மேய்வதையும், கன்று துள்ளுவதையும், அது பால் குடிப்பதையும் நாம் தான் நாள் தோறும் பார்க்கிறோம். நமக்கு எவ்வித உணர்ச்சியையும் உண்டாக்கவில்லை. ஆனால் அதே பொருள் கவிமணியின் உள்ளத்தினின்று வருகிறது. எவ்வளவு இன்பத்தை அளிக்கிறது என்று பாருங்கள்.

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு—அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி.' —என்று

அவர்கள் சொல்லும் போது நம் உள்ளமும் துள்ளிக் குதிக்கின்றதல்லவா ?

'அம்மா என்குது வெள்ளைப்பசு—உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு—பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு—மடி
முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி.' என்று

எளிமையும் இனிமையும் பட எவ்வளவு அழகாகச் சொல்லி வைக்கின்றார்கள். 'கவிமணியிடம் தேனை விடவும் அமுதத்தைவிடவும் இனிமையான ஏதோ ஒரு பொருள் இருக்க வேண்டும்; சொற்களை அதில் தோய்த்துத் தோய்த்துக் கவியாக அடுக்குகின்றார்கள் போலும்' என்று ஒரு நண்பர் சொன்னார். இஃது உண்மை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் நாவினின்று வரும் சொற்களில் ஒருவகை இனிமையும்,

சொற் கோவையில் ஒரு புதுமையும் இருப்பதைக் காணலாம்.

கவிமணியவர்களின் கவிதையில் காணுகின்ற இன்னொரு புதுமை என்னவென்றால் 'யாப்பு அமைப்பு' ஆகும். பல்வேறு வகைப்பட்ட சந்தங்கள் எழுமாறு இரண்டிரண்டடிகளில் இலக்கியக் கவிகள் அமைத்துப் பாடத் தொடங்கியவர் தே - வியே யாவார். ஆனந்தக் களிப்பு, கும்மி, சிந்து போன்றவை பண்டே உள்ளன. இவை இலக்கியப் பொருளமைப்புக்குப் புலவர்களால் கொள்ளப்படவில்லை. தே - வி இவற்றைத் தழுவிக் கொண்டது மட்டுமல்ல; இவற்றினின்று மாறுபட்ட எத்தனையோ விதமான சந்த பேதங்களையும் தோற்று வித்துக் கொண்டார். அவற்றுள் சில காண்க :—

'சின்னஞ் சிறிய மலரிந்தச்
சிறிய மலரைக் கொய்திடுவாய்
இன்னும் காலம் செல்லின் ஒளி
இழந்து வாடி விழுந்திடுமே.' இஃது ஒருவகை.

'பாவின் நயமெலாம்—யானும்
பகர வல்லேனோ?
ஆவின் பாற்சுவையை—நாழி
அளந்து காட்டிடுமோ?'

இஃது அதினின் வேறுபட்டது.

'சின்னஞ் சிறு பள்ளியில்—உனக்கொரு
சிங்காரப் பெஞ்சுமிட்டுத்
தின்னக் கனியளித்துப்—பாலபாடம்
செப்புவன் வாகிளியே.'

—இஃது இன்னொரு விதம்.

'தேடிச் செலவுசெய் யும்பொருள் நம்பொருள்
சேர்த்துவைக் கும்பொருள் யார்பொருளோ?
வாடி வயிற்றுக்கொன் றீயாத உலோபிக்கிவ்
வையக வாழ்வேது முண்டோவடா?'
—இது, முன்னையதினும் வேறுபட்டது.

ஒரு சந்தத்தைப் பிடித்துப் பாடிக் கொண்டு வரும் போது, அது நீண்டு போகுமேல் படிப்போர்க்கு அலுப்புத் தட்டிவிடு மென்றறிந்து இடையே விருத்த அடிகளை மடுத்துச் சந்தப் போக்கை மாற்றிக் கொள்வார். இந்த விருத்த அடிகள் பெரும்பாலும் இரண்டடிகளாக இருக்கும். இரண்டடியோடு கருத்து முடிந்து விடுவ தாயின் மேலும் இழுத்துச் செல்ல வேண்டியதில்லை யல்லவா? இவை புதுமையுடனே அழகும் பொலிந்து விளங்குவதைப் பார்க்கலாம்.

'என்றுகனிந் துளமுருகி நின்ற காலை
எமன்விட்ட தூதுவர் போல் ஆட்டை யெல்லாம்
குன்றிருந்து துரத்திவரு மவரைக் கண்டு
குவலயத்தில் அருள்மாரி பொழியு மையன்.'

இஃது எண்சீர் விருத்தத்தில் இரண்டடி. இதனைக் 'குறள்வெண் செந்துறை' என்று கூறவேண்டும். யாப் பிலக்கணம் இன்னும் வளரும்போது இவற்றுக் கெல்லாம் தனியிலக்கணம் அமைத்துக் கொள்வார்கள்.

என்னவாயினும் இவையே தற்கால மக்களின் போக்குக் கேற்ற யாப்பமைப்பு. எண்சீர் விருத்தங் களையும், பதினன்குசீர் விருத்தங்களையும், நீண்ட ஆசிரியப் பாக்களையும் எழுதினால் படிப்பதற்கு ஆட் களைக் கூலி கொடுத்துத்தான் பிடிக்க வேண்டும்.

காலத்துக் கேற்ற பாட்டளவைகள் இவைகள். ஆகை யாலே தான் யாவராலும் விரும்பிப் படிக்கப் படுகின்றன. தற்கால இளைஞர் பலருக்கும் தே-வியின் கவிதைகள் சிறந்த முன் மாதிரிகளாய் இருக்கின்றன. தே-வியின் கவிகள் தமிழ் நாட்டில் பல இளங்கவிகளைத் தோற்று விக்குமாக.

## 10. இசைப் புலமை

தே - வி அவர்களை ஓர் இயற்றமிழ்ப்புலவர் என்றும், சாசன ஆராய்ச்சிப் புலவர் என்றும் தான் நாம் அறிந் திருக்கிறோம். அவர்களுடைய இசைப் புலமையையும், இசைப்பாக்களும் கீர்த்தனங்களும் இயற்றும் ஆற்றலையும் நாம் வெகுவாக உணர்ந்ததில்லை. தமிழிசை யியக்கத்தின் போது தமிழிசைக்கு அவர்கள் காட்டிய ஆதரவு மிகப் பெரிது. தமிழிசையின் மேன்மை பற்றியும், பாட்டுக்கள் தமிழிலேயே பாடப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் பலரும் பலவாறு காரணங் காட்டி விளக்கினார்கள். ஆனால் தமிழிசை, தெய்வத்தன்மை வாய்ந்தது எனத் தே - வி காரணங்காட்டி விளக்கும் நயம் மிகச் சிறந்ததாயுள்ளது.

சமணரோடு வாதிடுங்கால் திருஞான சம்பந்தப் பெருமான் எழுதியிட்ட ஏட்டினை யேற்ற வெந்தழல் தண்மையுற்று ஏட்டினைப் பசுமைப் படுத்தக் காரணம் யாது? அதன்கண் இன்னிசைத் தெய்வத் தமிழ்ப் பாட்டுப் பொறிக்கப்பட்டிருந்ததல்லவா காரணம்? குடத்திலடைக் கப்பட்டிருந்த வெள்ளெலும்புகள் பூம்பாவை யென்னும் பெண்ணாயினவே. இறைவர் திருமுன்னர் நின்று சம்பந்தப் பெருமான் கசிந்துருகிப் பாடிய தீந்தமிழிசைப் பாக்க ளன்றி வேறு எவைதாம் இதனைச் செய்தன? நாவுக் கரசரை யானைக்காலால் இடறுவிக்கப் பணித்தானே

பல்லவன். அவர் தீந்தமிழ் கேட்டு, வந்த மதவேழம் வணங்கியதே யன்றிச் சினந்ததா? இவ்வாறுள்ள அரிய செயல்களைச் செய்த தமிழிசைக்கு இவ்வுலகில் நிகர் ஏது? எதுவுமில்லைதான். இதனை ஒரு வெண்பாவில் மிக அழகு படக் கூறுகின்றார் தே - வி. பாட்டைப் பாருங்கள் :

'வெந்தழல் நீராகும் வெள்ளெலும்பு பெண்ணாகும்
வந்தமத வேழம் வணங்கிடுமே – சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்?'

இதுமட்டுமல்ல. தமிழிசைப் பெருமையைத் தமிழிசைப் பாட்டாகிய கீர்த்தனையிலேயே அமைத்து மிக அழகுபடக் காட்டுகின்றார் கவிமணி. மதுரையில் வரகுண தேவன் என்பான் ஆண்டுவருங்காலத்தே தென்னாட்டு இசைவாணர்களை வெல்வதன் பொருட்டு வடநாட்டினின்றும் ஏமநாதன் என்னும் யாழ்ப்பாணனொருவன் பலவகை விருதுகளுடன் மதுரை வந்து சேர்ந்தான். வந்தவன் அரசன் ஆணைபெற்று பாணபத்திரர் என்னும் சிவனடியாரோடு இசைவாது இடத்துணிந்தான். தம் அடியார்க்கு அருள்புரிய எண்ணிய சிவபிரான் விறகு வெட்டியின் கோலத்தோடு ஏமநாதனின் புறத்திண்ணை மீதமர்ந்து இனிமையாகப் பாடிக்கொண் டிருந்தார். ஏமநாதன் புறத்தே வந்து விறகு வெட்டியை யணுகி 'நீர் யார்?' என்று கேட்க, 'நான் பாணபத்திரரிடம் இசை கற்றவன்; எனக்கு மூப்பு வந்துவிட்டமையால் இனி இசை கற்க இசைவில்லை யென்று கூறி அனுப்பி விட்டார்; விறகு வெட்டிப் பிழைக்கின்றேன்' என்று கூறினார் விறகு வெட்டியாகிய சிவபிரான்.

'ஆயின் இன்னொரு முறை பாடும்' என்று ஏமநாதன் கூற, யாழைவாங்கி மீட்டிகேட்பவர் இன்ப வெள்ளத்துள்

தோயவும், கல்லும் மரமும் கனிந்துருகவுமாக அம்மாலைக் காலத்துக் கேற்ற சாதாரி என்னும் பண்ணை யெடுத்துப் பாடினார். பின், யாவரும் மெய்ம்மறந்திருக்கும் நிலைபார்த்து மறைந்துவிட்டார் சிவபிரான். ஏமநாதன் திகைத்துப் போனான். அவனால் தள்ளப்பட்ட இவனே இப்படிப் பாடுவானானால் பாணபத்திரன் இசை எவ்வா றிருக்கும்? அவனை வெல்ல நம்மாலாகுமா? என்று கருதி இரவோடிரவாய் ஓடிவிட்டான். இவ்வாறு வடநாட்டிசையைத் தமிழிசை வென்றது இக் கதைச் சுருக்கத்தை மிக அழகுபட அமைத்துப் பாடுகின்றார் கவிமணி. அதுவும் அழகிய ஒரு கீர்த்தனத்தில் தான் அமைக்கின்றார். அது தமிழிசைப் பெருமையை விளக்கி நிற்பதுமட்டுமல்ல, அவருடைய இசைப்புலமையையும் விளக்கி நிற்கின்றது.

[இராகம்-மோகனம்: தாளம்-ஆதி]

பல்லவி

*பாதார விந்தம் பணிந்தேன்—கடைக்கண் நீ*
*பாலிக்க வேண்டும் ஐயா!*

அநுபல்லவி

*சாதாரி பாடி வெற்றி தமிழிசைக்கே யளித்த*
*நாதா லீலாவிநோதா! நங்கை உமையாள் பங்கா!*
*(பாதார)*

சரணம்

*புத்தகக் காடுமுழுதும் அலைந்தலைந்தென்*
*பொழுதெலாம் போக்கி விட்டேன்*
*சித்தங் கலங்கியுண்மை தெளியாது திகைப்புற்றேன்*
*பத்தர்க் கருளும் ஈசா! பாபவிநாசா உன்—*
*(பாதார)*

இதுபோலச் சிறந்த இசையமைதி வாய்ந்த

ஒப்பற்ற கீர்த்தனைகள் எத்தனையோ பாடியிருக்கின்றார்கள். அனைத்தும் மிக எளியவை; இனியவை. இசைவாணர்க்கு விருந்தாயிருப்பவை. அவற்றுள் அகப்பொருளின்பம் பொதிந்த பக்திச் சுவை ததும்பும் கீர்த்தனம் இரண்டு தருகின்றோம். சுவைத்துப் பார்த்து அவர் இசைப் புலமையைக் கணித்தறியுங்கள்.

பெண்ணொருத்தி. வேறுயாருமில்லை; தில்லை நடேசரை நாயகராக வுடைய பாக்கியவதி. நாயகரைப் பிரிந்திருக்கின்றாள் இப்பொழுது. 'அன்று கூடுகின்ற போழ்தில் "நின்னிற் பிரியேன்; பிரியின் தரியேன்" என்றெல்லாம் கூறினார்; கன்னங்குழிய முத்தமிட்டுக் கூறினார். இப்பொழுதோ பிரிந்தார். போகட்டும். இதோ வந்துவிடுகிறேன் என்று தானே போனார். நானும் நம்பினேனே. நாள் என்னவாயிற்று? ஒரு வாரமா ஒரு மாதமா? ஒரு வருஷமாயிற்றே. கிறுக்கி கிறுக்கி என்று கூறி ஊராரும் சிரிக்கும்படியாச்சே' என்று சோக மொழி கூறிப் பிரிவாற்றாது புலம்புகின்றாள். பாடத் தெரியுமானால் ராகம் அமைத்துப் பாடிப் பாருங்கள்.

(இராகம்-உதயரவிச்சந்திரிகா : தாளம்-ஆதி)

பல்லவி

சொன்ன தெல்லாம் மறந்தாரோ—என்னைச்
சோதனை செய்யத் துணிந்தாரோ? (சொன்ன)

அநுபல்லவி

செந்நெற் கழனி சூழும்
தில்லைப் பதியார் அன்று
கன்னங் குழிய முத்தம்
கனிந்து கனிந்தளித்துச் (சொன்ன)

சரணம்

**வருவார் வருவார் என்று நித்தம்—வரும்**
**வழிமேல் விழியாய் நின்றேன் தோழி.**
**ஒருவாரம் ஒருமாதம் ஒருவருஷமும் போச்சே**
**ஒருத்தி கிறுக்கி யென்றிவ் வூரும் சிரிக்க லாச்சே.**
**(சொன்ன)**

இன்னுமொருத்தி. இவள் பிரிவுத்துன்பத்தின் உச்ச நிலையை எட்டிவிட்டாள். ஆதலால் தூது அனுப்பத் தொடங்கிவிட்டாள் தோழியை. யாரிடம்? தில்லை நடராஜப் பெருமானாகிய தலைவரிடம் தான். முன்னும் தோழி எத்தனையோ முறை தூது போயிருக்கிறாள்; அதனால் பயனொன்றும் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் சகுனப் பிழையாயிருக்கலாம். 'இப்பொழுது நல்ல சகுனம் பார்த்துச் செல்' என்று கூறுகின்றாள். பிரிவுத் துயரால் அவள் படும் பாடுகளையெல்லாம் எடுத்து விரிக்கின்றாள். ஐம்புலன்களும் வலிமை குன்றியதை அழகு படச் சித்திரிக்கின்றான். நமக்கே அவற்றைக் கேட்கத் தாங்கமுடியவில்லையே; நடராஜர்—?

(இராகம் - ஷண்முகப்பிரியா. தாளம் - ஆதி)

பல்லவி

**நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி - சென்று**
**நான் படும் பாடவர்க்குச் சொல்லடி**

அநுபல்லவி

**அல்ல லகற்றி அன்பர்க்**
**கானந்தம் அருள்நேசர்**
**தில்லைப் பதி நடேசர்**
**திருவுள்ளம் அறிய நீ—** **(நல்ல)**

சரணம்

*வண்ண மலர்களெதும்*
*வாசம் தருவதில்லை*
*பண்ணில் இனிமை யில்லை*
*பாலில் சுவையு மில்லை*
*கண்ணில் உறக்க மில்லை*
*கருத்தோர் நிலையி லில்லை*
*எண்ணி அளப்ப தேனோ ?*
*எல்லாம் அறிவாயோடி*
*புண்ணியம் உண்டடி*
*பொற்றொடி யேஇன்று— (நல்ல)*

இவை பாடுவதற்கு மட்டுமல்ல; அபிநயத்துக்கும் ஏற்றவை. இவற்றைப் 'பதம்' என்பார்கள்.

தமிழில் கீர்த்தனைகள் வெளிவந்த வண்ணமா யிருக்கின்றன. ஒரு நாளில் ஒரு படப்பிடிப்புக்கு வேண்டிய அளவு பாடித் தள்ளிவிடுகிறார்கள். அவர்கள் கீர்த்தனங்களுக்கு வகுக்கும் இலக்கணமெல்லாம் வடமொழிச் சொற்களால் வரிகளை நீட்டி வளைத்து ஒன்றன் கீழ் ஒன்றாக அமைக்கவேண்டும் என்பதுதான். பாட்டினை எழுதிச் சிறந்த பாடகர் கையில் கிடைக்குமாறு செய்துவிட வேண்டியது. பெரிய கீர்த்தனாசிரியர் என்னும் பட்டம் கிடைத்துவிட்டது. பிறகுள்ளவற்றைப் பாடகர் பார்த்துக் கொள்வார். எழுத்துக்கள் போதாத இடங்களை இராகத்தால் இழுத்து, நீண்டவிடங்களில் இசையரத்தைக் கொண்டு தேய்த்து மழுக்கிச் சிதைத்துச் சமப்படுத்திவிட வேண்டும் பொறுப்பு அவருடையது. 'இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று' என்னும் தொடர்தான் தமிழ் நாடெங்கும் பரந்த ஒன்றாயிற்றே! இசையறிவு மட்டு

யிருந்தாற் போதும்; வசனத்தைக் கூடப் பாட்டாக அமைத்து விடுவார்கள்.

தமிழர்கள் என்று சொல்லிக் கொள்கிற இவர்களுக்கு எவர் வாயிலும் நுழையாத வடமொழிச் சொற்கள் எங்கிருந்து கிடைக்கின்றனவோ? இவர்கள் பாடல்களில் பாவ உணர்ச்சிகளோ மெய்ப்பாடுகளோ மருந்துக்கும் உண்டா? கொலை! கொலை! இசைக்கொலை! தமிழ்க் கொலை! என்றுதான் கூறவேண்டும். கீர்த்தனைகள் என்னும் பெயரால் கண்ட கண்டவாறு எழுதி வெளிப்படுத்தப்படுகின்ற கேடான பாடல்களை விலைக்கு வாங்கும் அறக்கொடிய வழக்கத்தைப் படமுதலாளிகள் ஒதுக்கவேண்டும். தமிழர்களும் அத்தகையவற்றைப் புறக்கணித்தல் வேண்டும்.

தமிழில் சிறந்த கீர்த்தனங்களில்லையே என்று நீலிக் கண்ணீர் வடித்த சில பாடகர்களின் வாயைத் திரு. இலட்சுமண பிள்ளைவர்களும், சுத்தானந்த பாரதியவர்களும், கவிமணியவர்களும் அடைத்து விட்டார்கள். கவிமணியின் கீர்த்தனங்கள் அனைத்தும் இதய பாவங்களை வெளிப்படுத்துபவை. வெறும் இலக்கிய ரசிகர்களுக்குங் கூட இன்ப மூட்டுபவை. எத்தனையோ பெண்மணிகள் அவற்றைப் பரத நாட்டியத்துக்குப் பயன் படுத்துகின்றார்கள். இசைத் தட்டுக் கழகத்தார் தே - விக் கெழுதி, பாடல்களை உரிமைப் படுத்துகிறார்கள். இலங்கை, திருச்சி, சென்னை முதலான ஒலிபரப்பு நிலையங்களில் இவர்களுடைய பாடல்கள் பாடப்படுவதை அடிக்கடி கேட்கலாம். இவற்றை இன்பக் களஞ்சியங்களாகவும், அழியா நிதியாகவும் கருத வேண்டுவது தமிழர் கடமை. தமிழுலகம் - சிறப்பாக இசையுலகம் கவிமணியவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டுளது.

பிள்ளையவர்கள் முருகப் பெருமான்மீது கரை கடந்த பக்திபூண்டவர்கள். அப் பெருமான்மீது வஞ்சப் புகழ்ச்சியாகவும் பல பாடல்கள் பாடியுள்ளார்கள். அவன்மீது பாடிய கீர்த்தனைகளும் பல. அவற்றுள் ஒன்று தருகின்றோம்.

(இராகம்-கமாஸ். தாளம்-கண்டசாப்பு)

பல்லவி

தெள்ளத் தெளிந்ததையா—உமது
கள்ளத் தனமெல்லாம்.

அநுபல்லவி

வள்ளிக் குறத்தியின் மையலில் சிக்கினால்
எள்ளத்தனை அன்பும் என்மீ திருக்குமோ? (தெள்ளத்)

சரணம்

(1) வேட்டைக் கென எழுவீர்—கையில்
வேலையும் ஏந்திக் கொள்வீர்
காட்டினைச் சுற்றியக் கள்ளி தினைப்புன
மேட்டுக் கோர் மானை விரட்டிப்பின் ஓடுவீர்.—
(தெள்ளத்)

(2) கட்டிச் சிறையிடுவார்—அந்தக்
காட்டுக் குறவரென்று
தட்டழிந் துள்ளம் தடுமாறி யல்லவோ
வெட்ட வெளியிலோர் வேங்கை மரமானீர்—
(தெள்ளத்)

இவை போல்வன பல. தே-வியின் தனிப்பாடல்கள் 'மலரும் மாலையு' மாகத் திரட்டப் பட்டாற் போல,

அவர்களுடைய கீர்த்தனை மலர்களும் இசைமாலையாகத் தொடுக்கப்படவேண்டும். இசை வாணர்கள் அவற்றுக்குச் சுவரங்கள் அமைத்து, இசை மழை பொழிந்து தமிழ்நாட்டில் இன்பநீரைத் தேக்கவேண்டும். ஆயின் தமிழிசைப் பெருமை உலகெங்கும் பரந்து சிறந்து விளங்கித் திகழு மென்பது தேற்றம்.

## 11. அன்புள்ளம்

நீங்கள் எப்பொழுதேனும் கவிமணியவர்களைப் பார்த்த துண்டா ? இல்லையாயின் இதனை ஒரு விளம்பரமாகக் கருதி விடாது ஒரு முறை சென்று பார்த்து வாருங்கள். ஆனால் அதற்கு மேலும் செல்லத் தயாராய்க் கொண்டுதான் புறப்படவேண்டும். ஒரு முறை கண்டு விட்டு அமைந்து நின்றவர் ஒருவருமே யில்லை. கண்டவரெல்லாம் மறுமுறை தே-வியை எப்பொழுது காண்பது ? எப்பொழுது போவது ? என்று தத்தமக் கேற்ற தருணத்தை ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டே யிருப்பர். அவர்கள் காட்சியும் பேச்சும் அவ்வளவுக்கு இனியவை.

ஆண்டவர் அன்புக்கு உறைவிடமாயிருக்கின்றார் என்பர் சிலர். அப்படிக்கூட இல்லை. அன்பே கடவுள் என்கின்றார் திருமூலர்.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தியாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே'.—என்பது

திருமந்திரம். ஆண்டவர் இவ்வுலகத்தை ஆள்கின்றார் என்கின்றார்களே, அதன் பொருளென்ன ? அன்பு

உலகத்தை ஆளுகின்றது; இணைந்து வாழச் செய்கின்றது; அணைத்து நிற்கின்றது; ஆதரவளித்துக் காக்கின்றது என்பதுதானே பொருள்? அன்பற்ற இடத்தில் வன்பும் துன்பும் மலிகின்றன; பிணக்கும் பூசலும் பெருகு கின்றன; கொள்ளையும் கொலையும் குமுறுகின்றன; உலகம் அவதியுறுகின்றது.

இவ்வன்பு யாண்டு உளது? எங்கும் தான் உள்ளது, யாவரிடத்தும் இருக்கின்றது. தன்னைத் தான் காதலியாத உயிர் உலகில் இல்லையன்றோ? ஆகவே தன் கண் மறைந்து கிடக்கும் அன்பை உள்முகமாகப் பார்த்து உணர வேண்டும். உணர்ந்து அவ் வன்பென்னும் பாசத்தை இழுத்துப் பிறவுயிர்களோடு பிணிக்கவேண்டும். இதனைத் தான் 'உன்னைப் போலப் பிறனை நேசி' என்ற உபதேச மொழியாகக் கூறினார் ஏசுபிரான். அங்ஙனம் பிணிக்கத் தொடங்கி விட்டால் அப்பிணிப்புக்கு அகப் படாத மக்கள் இரார்; விலங்கு புள் ஆதி அஃறிணை யுயிர்களும் இரா என்று கூறலாம்.

இந்திய தேசீய வானத்தில் தண்மதியென மிளிரும் உயர் பெரும் தலைவராய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் நைனிச் சிறைச் சாலையில் தங்கியிருந்த காலையில் கொடு நஞ்சு படைத்த கருந்தேளுடன் நட்புப் பூண் டொழுகிய செய்தியை அவர்களின் வாழ்க்கை வரலாற் றால் அறிகின்றோ மன்றோ? ஆதலின் அன்பானது எப் பொருளையும் தன்வயமாக்கும் தன்மையுடையது; எதனை யும் வெல்லும் தன்மையுடையது; வலிமையுடையது; பெருமையுடையது என அறியலாம். இதயத்தோடு இதயத்தைப் பிணித்து நிற்கும் ஆற்றல் வாய்ந்த அருவப் பொருள் அன்பன்றி வேறில்லை.

இவ்வன்புடையாரே உலகில் சிறந்து வாழ முடியும்.

வாழ்க்கைப் பண்பே அன்புடைமைதான் என்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது' —என்பது தமிழ்

மறை. அன்றியும் 'உயிர் மனித உடலைத் தாங்கிநிற்பதே அன்பொடு பொருந்துவதற்கு வந்த நெறியின் பயனாகும் எனப் பெரியோர் கூறுவர்' என்று பெரியார்மீது வைத்து அழகுபடக் கூறுகின்றார் பொய்யில் புலவர். இச்சொற் பொருட்களை உணர்ந்தமையினாலோ அன்றித் தன்னியல் பாலோ ஒருயிர் பிறவுயிர்கள் மீது அன்பு பூண்டொழுகும் தன்மையைப் பெறுமேயானால் அவ்வுயிர் எத்துணைச் சிறப்புடையது! அம்மம்ம! அதன் பெருமை அளவிட்டுரைக்கத் தகுவதல்ல.

கவிமணியவர்களின் பெருமைக்கெல்லாம் காரணம் கவித்துவப் பண்பு நிறைந்திருப்பது மட்டுமல்ல; ஒப்பற்ற பேறாகிய இவ் வன்புடைமையும் ஒருங்கு அமைந்திருப்பதாகும். அவர்களின் உள்ளம் அன்பு; உரை அன்பு; செயல் அன்பு; எல்லாம் அன்பு, அன்பு, அன்பு. இதனால் அவர்கள் இம்மையில் பெற்றுள்ள பயனென்ன தெரியுமா? அது ஒப்பற்ற செல்வம் - எளிதில் நாடி அடைய முடியாத பேறாகிய 'நட்பு' என்னும் நாடாச் சிறப்பை அவர்கள் வேண்டுமட்டும் பெற்றிருக்கிறார்களே; அதுதான் பயன். அன்பின் செயலே இதுதான். முதலில் தொடர்புடையார்களிடத்தில் செலுத்துகின்ற அன்பானது எல்லாரிடத்திலும் மனங்கனிந்து விருப்பம் கொள்ளுதலாகிய ஒரு நிலையைத் தரும். பின், அது இவ்வுலகிலுள்ள எவரையும் பகைவர், அயலார் என்னும் தன்மைகள் இலராய் யாவரும் நட்பினர்களாகவே ஆகிவிடுகின்ற அளவற்ற சிறப்பினைச் செய்யும். இதனைச் செந்நாப்போதார்,

'அன்பீனும் ஆர்வ முடைமை ; அதுவீனும்
நண்பென்னும் நாடச் சிறப்பு' —என்றார்.

இத் தெய்வத் திருப்பாவுக்கு இலக்கியமாயிருப்பவர் நம் கவிமணியவர்கள். அவர்களுக்கு இவ்வுலகிலே பகைவர் என்ற ஒருவரில்லை ; உள்ளத்தால் ஒன்றாத வர்களைத் தவிர வேறு அயலார்களு மில்லை. அவர் களுக்கு உணர்ச்சி யொத்த நண்பினர்கள், நெருங்கிப் பழகும் நண்பினர்கள் ஆயிரவர். ; ஆயிரவர். பேரறிஞர் களாய டி. கே. சி, வையாபுரிப்பிள்ளை போன்ற உயிரன் பர்களும் உயரன்பர்களும் மிகப் பலர்.

ரசிக மணிக்குக் கவிமணி யென்றாலே அமுதம் தான். தே-வியின் பாடலை யாதேனும் இதழ்களில் கண்டுவிட்டால் போதும். அதனை அள்ளிப் பருகி ஆனந்த நடனம் புரிந்து விடுவார்கள். உடன் தானே தே-விக்கு நீண்ட கடிதமொன்று வரும். பாராட்டுக் கடிதமாக இராது அது ; உண்டாட்டுப் படலமாக இருக்கும். பாட்டைப் படித்த காலத்தில் அவர்கள் இதயம் புரிந்த ஆனந்தத் தாண்டவத்தை அதில் தெளியக் காணலாம்.

திரு. வையாபுரிப் பிள்ளையவர்கள் கவிமணியவர் களை விட்டுப் பிரியாமல் எப்போதும் அளவளாவி மகிழ் வதே ஒரு பேறு என்று கருதுகிறார்கள். ஆதலால் அடிக் கடி அவர்களைச் சந்திக்காமல் இருப்பதில்லை. 'சென்னைக் கும் புத்தேரிக்கும்தான் எவ்வளவு தொலை இருக்கிறது ! நானூற்றுக்கு மேற்பட்ட மைல்கள் ! அப்பப்ப ! நாலு மைலாயிருக்கலாகாதா ? "டெலிவிஷன்" என்கிறார்களே அதுதான் விரைவில் வருகிறதா ? ஏட்டைக் கையிலே வைத்துக்கொண்டு எப்பொழுதும் பிள்ளையவர்களோடு பேசி இன்புறலாமே' என்று எண்ணிய வண்ணமிருக்

கிருர்கள். இப்படியே, தாங்கள் தொலைவிடங்களில் இருந்தாலும் உள்ளத்தைத் தே-விபால் ஒன்றவைத்துச் சதா அவர்கள் சிந்தனையாகவே இருக்கின்றவர்களும், அடுத்தடுத்துக் கடிதங்கள் மூலம் தொடர்பு வைத்துக் கொள்கின்றவர்களுமான நண்பர்கள் இன்னும் பலர்.

உயர் நிலையிலே யுள்ள பலர் கவிமணியவர்களுக்கு நண்பர்களாயுள்ளனர் என்ருேம். இருக்கலாம். அவர்களெல்லாரும் உண்மைக் கவிஞராய தே-வியின் நட்பை நாடுவதும், இவர்களும் பட்டம் பதவிகள் தாங்கியுள்ள அன்ருேரோடு நட்பாயிருப்பதும் இயல்புதானே! இதில் வியப்பென்ன இருக்கிறது? நேர்மாருய்த் தம்மினும் எளியாரிடத்தில் அன்பும் விருப்பும் செலுத்துதலும், தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் நிலை குப்புறக் கவிழ்ந்த காலத்தும் தம் அன்புடைமையில் அணுவளவும் மாறுபாடு கொள்ளாமல் இருத்தலுமே வியக்கத்தகுந்தவையாம். இவ்வியத்தகு பெருங்குணம் தே-விபால் அமைந்துள்ளதா என்று சிலர் கேட்கத் துணியலாம்.

ஆம்; இத்தகுதிப் பாடுகளெல்லாம் முழுக்க முழுக்க அமையப் பெற்றவர் தே-வி என்று சொல்வதுதான் அதற்கு ஏற்ற விடை. ஏன்? அவர்களின் அன்புள்ளம் பட்டம் பதவிகளை நாடிப் பாய்வதில்லை. தூய அன்புள்ளங்களையும் அறிவுள்ளங்களையுமே நாடிப்படர்கிறது. அதுதான் காரணம். இதனுல் அது எக்காலத்திலும் எந்நிலையிலும் மாறுபடுவதில்லை. இதற்கு வேண்டுமானுல் ஒரு சான்று தருகின்ருேம்.

கலைவாணர், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் அவர்களை இன்று தமிழ்நாட்டில் அறியாதவர் எவரும் இருக்கமாட்டார். இவர் நாகர்கோவிலிலே பிறந்தவர். ' முற்றத்து முல்லைக்கு மணமில்லை ' என்னும் முதுமொழியை முறியடித்து நிற்பவர். இவர்பால் அமைந்த

நகைச்சுவை காரணமாக மக்களனைவரும் ஒருமுகமாக இவர்களை விரும்புகின்றார்கள் என்பது உண்மைதான். அதைவிடச் சிறப்பாகச் சொல்லப்பட வேண்டியவை இவர்குண நலன்களாகும். இவற்றை அவரை அடுத்து நெருங்குபவர்கள் எளிதில் உணரமுடியும். ஏழைமையில் பிறந்த காரணத்தால் எளியார் நிலைகண்டு இரங்கி அவர்களிடம் கனிவும் விருப்பமும் செலுத்துதலும், அவர்கள் நிலைக்கேற்ப ஒப்புரவும் உதவியும் செய்தலும், அறநிலையங்களுக்கு உதவுதலும் இவர் உடன்பிறந்த குணங்களாகவுள்ளன. யாவருடனும் முகமலர்ந்து சுவைக்கச் சுவைக்கப் பேசுதலோடு தூய அன்பு செலுத்துதல் இவரது சிறப்பியல்பு.

இத்தகைய அன்பர் கவிமணியவர்களுக்கு அன்பரானது வியப்பல்ல. இவர் அடிக்கடி தே-வியைக் காணச் செல்வார். அளவளாவி மகிழ்வார். தே-வியின் உபதேச மொழிகளைக் கேட்டு மனங்கொள அமைத்துக் கொள்வார். அவற்றைத் தாம் நடிக்கும் ஓடும் படங்களில் ஏற்ற இடங்களில் பொருத்திச் சிறக்கச் செய்வார்.

'நித்தம் நித்தம் நீராடில்
நெடுமால் அருளைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களுமத்
தனிப்பே றடைய வேண்டாவோ?'

என்பது போன்ற பகுத்தறிவு வாதத்தை யெழுப்பும் பகுதிகள் அவர்கள் நடிப்பில் நகைச் சுவையோடு இலக்கிய மணமும் கமழச் செய்கின்றன.

திரு. கிருஷ்ணன் அவர்களின் நடிப்பு வரவரச் சிறந்து விளங்கலாயிற்று. அது சுவையறிவார் யாவரையும் தன்வசமாகக் கவர்ந்து விட்டது. திரு. என். எஸ்.

கிருஷ்ணன் என்றால் 'சினிமா', 'சினிமா' என்றால் திரு. என். எஸ். கிருஷ்ணன் என்ற நிலைவந்து விட்டது. அவர் இல்லாத படமே ஒரு படமாகத் தோன்றுவதில்லை அநேகருக்கு. இதனால் அவர்களுக்குப் பேரும் செல்வமும் பெருகலாயின. அன்பர்களும் நண்பினர்களும் பல்லாயிரக் கணக்காகச் சூழ்ந்தனர். அண்டிநின்று ஆதரவு பேசுவோர் பலராயினர்.

இந்நிலையில் அவர் வாழ்க்கைச் சூழலில் திடீரெனப் பேரிடி ஒன்று வீழ்ந்தது. அவர் சிறையகப்பட்டார். அவ்வளவுதான். அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல்—என்றாலும் போதாது; கல்லேறு வீழ்ந்த காக்கைக் கூட்டம்போல் கலைந்து பறந்தனர் அன்பரெல்லாரும். பின், திரு. கிருஷ்ணனவர்களுக்குச் சாதகமாகப் பேசுவாரும் கூட அரியராயினர். உண்மையில் தம் நண்பன் குற்றமுடையவன் என்று அறிந்து அவர்கள் அகன்றிருப்பார்களானால் அது நேர்மையாயிருந்திருக்கும். நம் உறுப்புக்களுள் ஒன்று அழுகிவிட்டால் அதனை வெட்டிக் களைந்து விடுகிறோமல்லவா? அதுபோல என்னலாம். ஆனால் உண்மை நிகழ்ச்சி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சில பொறாமைப் பேய்களின் சதித் துள்ளல்களால் தம் அன்பன் பலிபீடத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறான் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். இனி அவரால் தமக்குப் பயனில்லையே என்று அகன்றார்கள்; மனம் மாறுபட்டார்கள். திரு. என். எஸ். கிருஷ்ணன் எனது நண்பன் என்று சொல்வதைக்கூடத் துறந்தார்கள். இதனினும் கொடுமை வேறுண்டா? உண்மை அன்பின் இயல்பு இதுவா?

அக்காலையில் தே-வி படுக்கையிலேதான் கிடந்தார்கள். தாங்க முடியாத துயரம் அவர்களை வாட்டிற்று. 'என். எஸ். கிருஷ்ணனும் கொலைக்குற்றமும். அம்மம்ம!,

என்றால் நினைக்கவே முடியவில்லை. அவன் ஒருபோதும் இது செய்யான். இது வஞ்சவினை மலிந்த உலகின் செயல். கடவுள் ஒருவர் உண்டு. அவர் எல்லாம் அறிவார். அவர்தான் காக்கவேண்டும். அவன் தரும வான். தருமம் தலைகாக்கும்; கட்டாயம் காக்கும்.'' இப்படியே முணு முணுப்பார்கள். வருவார் போவாரிட மெல்லாம் கூறுவார்கள். திரு. கிருஷ்ணன் பொருட்டுக் கடவுளைச் சிந்திப்பார்கள்; தியானிப்பார்கள். ஒருநாள் சிந்தனை சிறந்ததொரு கீர்த்தனை வடிவமாய்ச் சமைந்து நின்ற அதுவருமாறு :

(இராகம்-தர்பார். தாளம்-ஆதி.)

பல்லவி

ஐயா நீ அருள்செய்ய வேண்டும்—உன்றன்
அடியிணை யன்றிவே றொருதுணை அறியேன்—(ஐயா)

அநுபல்லவி

ஒய்யார மாமயிலில் உல்லாச மாகவரும்
வையா புரிமுருகா மாயன் திருமருகா —(ஐயா)

சரணம்

வஞ்ச வினை மலியும் உலகில்—வாழும்
வழியறி யாது நிதம் வருந்திடும் எளியேன்
அஞ்சிவந் துன்னையே அடைக்கல மாய்ப்புகுந்தேன்
அமரரைச் சிறைதவிர்த் தாண்டகுமரா! என்
—(ஐயா)

இதில் 'ஐயா! நீ அருள் செய்யவேண்டும்' என்ற தொடக்கமும், 'அமரரைச் சிறைதவிர்த் தாண்டகுமரா!' என்னும் கருத்துடை அடைமொழியோடு கூடிய விளியை

ஏற்று நிற்கும் முடிவும் அவர்களுக்கே மிகவும் பிடித்திருந்தன. தன் வேண்டுதலுக்கு முருகன் செவிசாய்ப்பான்; அனுகூலமான பலனை அருளுவான் என்னும் நம்பிக்கை ஆழப் பதிந்து நின்றது. இப்பாடலைக் 'கலைமகள்' மாத இதழுக்கு அனுப்பினார்கள். இதழில் வெளிவந்ததும் 'கலைமகள்' இதழ் இன்றொன்று வாங்கித் திருமதி டி. ஏ. மதுரம் அம்மையாருக்கு அனுப்பின தோடல்லாமல் 'இப்பாடலை என். எஸ். கேக்கும் கொடுத்து இருவரும் நாள்தோறும் இதனைப்பாடி முருகனை வழிபட்டு வாருங்கள்' என்றும் எழுதினார்கள். திருமதி மதுரம் அம்மையார் தே-வியைக் காணப் பலதடவை வருவதுண்டு. அப்பொழுதெல்லாம் 'கிருஷ்ணன் குற்றமற்றவன். இதை என் மனம் ஓயாமல் சொல்லிக்கொண் டிருக்கிறது. கடவுள் இதனை நன்கறிவார். அவர் அவனைச் சிறை தவிர்த்தருளுவார். வருந்த வேண்டியதேயில்லை. அவன் செய்த அறப்பயன் வீண்போகாது' என்று பலவாறு தேறுதல் கூறுவார்கள். இவ்வாறுதல் மொழிகள் கடலில் வீழ்ந்து தத்தளிப்பவனுக்குக் கைகொடுத்துக் காப்பது போன்றிருக்கும் அவர்களுக்கு. இவ்வாறு ஆற்றவல்ல பெரியார்கள் தே-வியைப்போல மிகச் சிலர்கூட அக்காலையில் இருக்கவில்லை. ஆகவே, அவர்களிருவரும் தே-வியின் அன்புள்ளத்தை யெண்ணி யெண்ணி உருகினார்கள்; அவர்களைத் தெய்வம்போல மதித்தார்கள் என்பதில் வியப்பில்லையல்லவா?

திரு. கிருஷ்ணன் அவர்கள் தே-வி அருளிய பாடலோடு தே-வியையும் சேர்த்தே தியானித்து வந்தார். சில நாட்களுக்குள் தானே கைமேல் பலன் கிடைத்துவிட்டது. அவர் விடுதலை பெற்று வெளிவந்ததும் சென்னையினின்றும் நாகர்கோவிலுக்கு ஓடோடியும் வந்தார். முதலில், தம் பிரிவுக் காற்றுது வாடித்துவண்டு

கண்ணீரும் கம்பலையுமாக வருந்திக் கிடக்கும் தம் அருமை அன்னையாரைக் கண்டு தேற்றிக் களிப்பூட்டினார். சில நிமிடங்களில் புறப்பட்டுச் சென்றார் கலைவாணர். வேறெங்கு மல்ல; புத்தேரிக்குத் தான்.

திரு. கிருஷ்ணன் விடுதலை பெற்றுவிட்டார் என்பதைக் கேட்டதும் தே-விக்கு உண்டான ஆனந்தம் இவ்வளவு அவ்வளவல்ல. அவரைக் காணவேண்டும் என்ற ஆசை யிருந்தது. ஆனால் இப்படித் திடீரெனத் தம்முன் குதித்து வந்து நிற்பார்; காண்போம் என்று அவர்கள் கருதி யிருக்கவில்லை. திரு. கிருஷ்ணனைக் கண்டதும் படுத்துக்கிடந்த தேவி துள்ளிக் குதித்தெழுந்து அவரை மார்போடணைத்துக் கண்ணீர் உகுத்து நின்றார்கள். நாத்தழுதழுக்கப் பேசும் வகையறியாது பொருமி நின்றார்கள். இருவருமே சற்று நேரம் ஊமையர்களானார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அக்காட்சி யாவரையும் உருக்கவல்லதா யிருந்தது

சிந்தாமணிக் கொப்பான தன்னரும் புதல்வன் சீவகனைப் பெற்ற அன்றே விட்டுப் பிரிந்த அவன் தாய் விசையை, அவனுடைய ஆக்கத்தின் பொருட்டு நோன்புகள் செய்துகொண்டிருந்தவள் பலவாண்டுகளுக்குப் பின் அவன் ஒப்பற்ற காளையாய்ச் சிறந்த வீரனாய் விளங்கிக் கொண்டிருப்பதை அறிகிறாள். அவனைக் காணத் துடிதுடிக்கிறாள். அவனும் தன்னைப் பெற்ற தாய் ஒருத்தி இருக்கின்றாளென்றும், அவள் இருப்பிடம் இதுவென்றும் அறிந்து ஓடோடியும் வருகின்றான்.

வந்தவன் தாயைக் கண்டு நிலம்தோய வீழ்ந்து வணங்குகிறான். விசையையோ அவன் காளைப் பருவத்தான் என்பதையும் கருதாமல் அவனை வாரியெடுத்து மார்புற அணைத்துக் கொள்கிறாள். அக்காட்சியை,

† 'அங்கிரண்டு அற்பு முன்னீர்
அலைகடல் கலந்த தொத்தார்'

என்றார் சிந்தாமணி ஆசிரியர். இதுதான் கவிமணி—கலைவாணர் சந்திப்புக் காட்சி.

ஒருவர் செலுத்தும் அன்பு, அதனை ஏற்பாரையும் அன்பு மயமாக்கியே விடும். ஆகவே கலைவாணர் தே - வி பால் கொண்ட அந்த முதிர்ந்த அன்பை பக்தியென்று கூறினாலும் குற்றமில்லை. ஆம்; பக்திதான். அதனை வெளிக்காட்டத் தருணம் நோக்கி நின்றார் அவர். விடுதலை பெற்று வந்ததும் அவர் தம் சிறையனுபவங்களையும் சமூக வழக்கங்களையும் அமைத்துச் சிறந்ததொரு படம் பிடிக்கத் துணிந்தார். அதன் பயன்தான் 'பைத்தியக்காரன்?' என்னும் பெயருடைய ஒளிப்படம். கணவனையிழந்த இளம் பெண்களுக்கு விதவைகள் என்னும் பட்டம் சூட்டி அவர்கள் வாழ்க்கையை இருளடையச் செய்து கொடுமைப்படுத்துகின்ற சமூகம் அதே சமயத்தில் மனைவியை யிழந்த தொண்டு கிழவன் இளங்குமரியை மணந்து இன்புற அனுமதி கொடுக்கும் அறக் கொடிய வழக்கத்தைக் கல்லெறியப் போராடும் நிகழ்ச்சிச் சித்திர மாக அமைந்துள்ளது இது. இதன்கண் மக்களுடையவும் போலீசினுடையவும் அறியாமையினால் நிரபராதிகள் துன்புறுவது, சோதிடம் பார்த்து மணம் செய்தல் போன்ற மூடப் பழக்கவழக்கங்கள், சிறை வாழ்க்கையின் பலா பலன்கள் முதலியவை நன்கு விளக்கப் பட்டுள்ளன. சிறந்த உண்மைகள் பொதிந்துள்ள கிருஷ்ணனவர்களின் நகைப் பேச்சு கருத்துக்கு நல்

† அவ்விருவரும் முற்பட்ட (எதிர்ப்பட்ட) தன்மையினால் அப்போது அங்கே இரண்டு அன்பாகிய அலையெறிகின்ற கடல்கள் தம்முள் கலந்ததை ஒத்தார்கள்.

விருந்தாயிருப்பதோடு வயிறு வெடிக்குமாறுள்ள சிரிப்பையும் தருகின்றது. சுருக்கிச் சொன்னால் நல்ல நோக்கங்களையும் உயரிய நடிப்பினையும் கொண்ட ஒப்பற்ற படம் இதுவென்று தயக்கமின்றிக் கூறலாம். இதில் நம் கவிமணியவர்களுக்கு ஓர் உயரிய இடம் கொடுக்கப் பட்டிருக்கின்றது கவிவாணரால்.

தம்பால் அன்பைச் சொரிந்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் பெயரை முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ள வைத்தாரே கம்பர் அது போல என்று சொல்லலாம். இல்லை; அதை விடவும் பெருமைப் பட என்றுதான் சொல்லவேண்டும். ஏன்? இங்குக் கவி மணியவர்களுக்கே விழாக் கொண்டாடப்படுகின்றது. அதுதான் படத் திறப்பு விழா. கதை முடிவில் கவிமணி யவர்களின் படத்தைத் திருமதி மதுரம் அம்மையார் திறந்து வைப்பதும், அப்போது ‘பாட்டுக்கொரு புலவன்’ என்று தொடங்கும் தே - வியின் பாடலை இளமங்கைய ரிருவர் நடிப்பதும், நடிப்புக்கேற்றவாறு இசைவாணி பெரியநாயகி பின்னனியில் நின்று பாடுவதும் மிக்க இன்பம் தருபவையாக வுள்ளன. இத் திருக்காட்சியைப் பல கோடிக் கணக்கான கண்களும் காதுகளும் கண்டும் கேட்டும் களிகொள்ள வைத்த கலைவாணர் கிருஷ்ண னவர்கள் தமிழ் மக்களால்—சிறப்பாகக் கலைஞர்களால் பெரிதும் போற்றுதற்குரியராகின்றார் என்பதில் ஐயமில்லை.

திரு என். எஸ். கே. அவர்களுக்குத் தே-வியிடம் உள்ள அன்பு இன்று நேற்றுத் தோன்றியதல்ல. சற்றுப் பழைமையானதே. சிலவாண்டுகளுக்கு முன் நாகர் கோவிலைச் சேர்ந்த வடசேரி S. M. R. V. ஆங்கில உயர்தரப் பாடசாலையில் நடந்த ஆண்டு விழாவின் போது தலைமை தாங்குவதற்குக் கவிமணியவர்களும்,

மாணவர்களுக்குப் பரிசளிக்க திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் இசைந்திருந்தார்கள். மாலை நேரமானதும் தே - வி அங்கே சென்றார்கள். அவர்கள் முன்னிலையில் பெரும் அளவான புத்தகங்கள் கொண்டு வைக்கப் பட்டன. கவிமணியவர்கள் வியப்பெய்தி 'இத்தனை புத்தகங்களும் பரிசளிக்கத்தானா?' என்று கேட்டார்கள். அதற்கு நிர்வாகிகள், இன்று தமக்கு ஏற்பட்ட தவிர்க்க முடியாத அலுவல் காரணமாக விழாவில் பங்கு கொள்ள முடியாமைக்குத் தாம் வருந்துவதாகவும், கவிமணி யவர்கள் பெயரால் நூறு ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்கி நூனிலையத்தில் வைத்துக்கொள்ள வேண்டு மென்றும் தெரிவித்து திரு. என். எஸ். கிருஷ்ணன் நூறு ரூபாய் அனுப்பினார். அத்தொகைக்கு வாங்கப்பட்டவை இவை; பரிசளிப்பதற்குரியவை இவை என்று கூறி வேறு வேறு காட்டினார்கள்.

இது கேட்ட தே - விக்கு என்ன சொல்வதென்றும் செய்வதென்றும் தோன்றவில்லை. பரிசளிப்பு நடந்தது. முடிவுரையில் சொன்னார்கள்—" இங்கு வந்த பிறகுதான் இச்செய்தியை அறிகிறேன். இது கிருஷ்ணனுடைய உண்மையான அன்பைக் காட்டுகிறது. ஒருவனுடைய உறவினருங் கூட இவ்வாறு செய்துகொள்ள மாட் டார்கள். இனிக்க இனிக்கப் பேசுவார்கள்; கூடி மகிழ் வார்கள். பணச்செலவு என்றால் தயக்கம்தான். பதினா யிரம் ரூபாய் தேடி வைத்துவிட்டு ஒருவன் இறக்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவனைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் உறவினர்கள்? 'இவ்வளவு தானே மீதி வைத்தான்; இது எதற்காயிற்று? இன்னும் ஒரு பதினா யிரம் ரூபாய் சேர்த்து வைக்காமல் போனானே' என்று தான் நினைக்கின்றனர். இருபதினாயிரம் தேடி வைத்துச் சென்றவன் விஷயத்திலும் இதே பேச்சுத்தான். வருந்தித்

தேடியவன் பெயரால் கால் காசு செலவிடவும் உறவி னர்க்கு மனமிராது. இதுதான் உலக நிலே. இந் நிலேயில் திரு. கிருஷ்ணன் செய்த செயல் சொல்ல முடியாத பெருமை வாய்ந்தது. அது கிருஷ்ணனுடைய தூய்மை யான அன்பையும் அறச் சிந்தனேயையும் நன்கு காட்டு கிறது" என்று கூறி வெகுவாகப் பாராட்டினர்கள்.

அன்புதான் அன்பினே ஆக்கும்; அது வன்மைப் போக்கும்; நன்மைச் சேர்க்கும்; இன்மைத் தேக்கும். தே - வியின் அன்புள்ளம் வாழ்க.

## 12. பண்பட்ட மனம்

அன்புள்ளம் படைத்த பெரியார்கள் பிறரெவரையும் அணேத்துப் பேசி உறவு பூண்டொழுகுவதைத் தமக்கு இயல்பாகப் பெற்று விடுவார்கள். அவர்கள் எவரையும் சீறி நோக்கார்; சினந்து பேசார். தம் நிலேக்கு மிஞ்சிய செயலில் ஈடுபட்டவர்களிடத்திலும் அருவருப்புக் கொள்ளாது அணேத்துப் பேசி உபதேசமே செய்வர். பண்பட்ட மனம் படைத்தார் பாங்கு இது.

கவிமணியவர்களிடம் இளங்கவி ஒருவன் செல்கிருன் என்று வைத்துக் கொள்வோம். பிறரிடத்துப் போல தே - வியிடம் செல்லும் போது இவன் நாணங் கொள்ள வேண்டியதில்லே. அன்றி 'பிள்ளே விளேயாட்டுப் போல பாட்டொன்று எழுதினேன்; அதன் போக்கு எப்படி குற்றங் குறைகளே எடுத்துக்காட்டித் திருத்தவேண்டும்' என்று குன்றிக் குன்றிப் பேச வேண்டிய தேவையுமில்லே. அவர்களே தொடங்கி விடுவார்கள். 'அப்பா! வா, இப்படி உட்கார். சும்மா அருகே உட்கார். நீ ............ பத்திரி கையில் பாட்டொன்று எழுதியிருந்தாயல்லவா? பார்த் தேனே. குற்றமில்லே; நன்ருயிருக்கிறது. இப்படித்தான்

எழுத வேண்டும். அந்தாதியும் கலம்பகமும் எழுதிஞல் யார் இந்தக் காலத்தில் படிக்கப் போகிருர்கள். காலத்துக் கேற்றபடி எளிய பாடல்களாகத்தான் எழுத வேண்டும். பாட்டு எழுதிஞல் இன்ஞர் எழுதினது என்று சொல்லாமலே ஒரு சிறுவன் கையில் கொடுத்து, வாசித்துப் பொருள் கூறச் செய்ய வேண்டும். கருதிய பொருளை அவன் சொல்லி விட்டாஞஞல் அந்தக் கவி பொருள் விளக்கம் பெற்றிருக்கிறது என்று கருதலாம். இந்தச் சோதனை மட்டும் போதாது. பின், கோஞ மனம் படைத்த கல்விமான் ஒருவரிடம் காட்டிச் சொற்குற்றம் பொருட்குற்றங்கள் இல்லாமையைத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர்தான் அதை வெளிப்படுத்தலாம். நல்லது; நீயும் இந்த முறையைப் பின்பற்றிக் கொள். இன்னுங் கொஞ்சநாள் போஞல் உனக்குக் கவி நன்ருக அமையும். நீ பழந்தமிழ்க் கவிதைகளையும் ஆங்கிலக் கவிதைகளையும் நன்கு கற்க வேண்டும். திரும்பத் திரும்பக் கற்க வேண்டும். அந்த அறிவு உன் கவிதைச் செடிக்கு அடி உரமாக அமைய வேண்டும். நல்லது; மிக்க சந்தோஷம்' என்று சொல்வார்கள்.

நவீன எழுத்தாளன் ஒருவன் செல்கிருனென்ருல் அவனையும் இவ்வண்ணமே தட்டிக் கொடுப்பார்கள். "வசனம் எழுதுவது எளிதல்ல. என்னிடம் கேட்டால் கவியைப் பார்க்கிலும் கஷ்டமானது என்பேன். இதில் பழகுவது மேலானது. நீ அடிக்கடி சிறு கதைகள், கட்டுரைகள் இவை எழுத வேண்டும். தமிழில் கட்டுரைகள் குறைவு. கதைகள் என்ற பெயரோடு சில வருகின்றன. உள்ளீடு என்பது கிடையாது. பெரும்பாலும் ஒரே முறைதான். அவற்றின் வசன நடையோ சொல்ல வேண்டியதில்லை. நல்ல கதைகளாய், படிப்போர்க்கு நல்லுணர்ச்சியும் நல்லறிவும் எழத்தக்க

முறையில் கதைகள் எழுதவேண்டும். எழுதும்போது பண்டிதத் தமிழில் எழுதலாகாது. அம்மாஞ்சித் தமிழும் நமக்கு ஆகாது. படிப்பவர்க்கு நன்கு புரியும் எளிய செந்தமிழில் கிராமியச் சொற்கள் வழூச் சொற்கள் என்பவை கலவாமல் எழுத வேண்டும். உனது கட்டுரையைப் பார்த்தேன். நன்ருக அமைந்திருக்கிறது. இப்படியே இன்னும் நிறைய எழுது" என்று கூறுவார்கள்.

புதுப் பத்திரிக்காசிரியர் ஒருவர் சென்ருல் அவருக்கும் வேண்டுவன கூறி அணைத்துப் பேசுவார்கள். "தமிழில் வார மாத இதழ்கள் ஏராளமாக இருக்கின்றன. சில பத்திரிகாசிரியர்கள் பத்திரிகை விற்பனை ஒன்றையே குறிக்கோளாகக் கொள்கின்ருர்கள். அது தவறு. ஆசிரியர்களின் பொறுப்பு மிகப் பெரிது. அதுபோலவே தான் அவர்கள் ஆற்றலும். ஆதலால் என்ன வந்தாலும் தம் கொள்கையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் தமிழ் மொழிக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் உழைப்பதையே தங்கடமையாகக் கொள்ள வேண்டும். சிலர் தமிழ் நடையைக் கெடுத்து விடுகிருர்கள். வந்து குவியும் தந்திகளைச் சுடச்சுட மொழி பெயர்க்கும்போது ஆத்திர மிகுதியால் சொற்களும் தொடர்களும் தமிழ் மரபுக்கு மாறுபட்டவையாய் விழத்தான் செய்யும். ஆயினும் அவர்கள் கூடியவரையிலும் கவனிக்க வேண்டும்.

"மோசமான கட்டுரைகள், கதைகள், கவிகள் இவை வெளிவருவதற்கு இவர்களே முக்கிய காரணர்களாயிருக்கிருர்கள். சிலர், மோசமானவை யென்று தெரிந்திருந்தும் அவற்றைத் தம் இதழ்களில் வெளிப்படுத்துகிருர்கள். பின், அவர்கள் பத்திரிகையிலேயே மதிப்புரை யென்னும் பேரால் மறுப்புரையும் வருகிறது. இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறேன். பத்திரிகாசிரியர்கள்

சற்றுக் கவனித்து, வருபவற்றை ஆராய்ந்து, இறுத்து வெளிப்படுத்துவார்களேயானால் பொருளற்ற கட்டுரைகளும், உரைநடைகளும், கவிதைகளும் தமிழ் நாட்டில் உலவுமா?

"இன்னுமொன்று. இவர்களுள் சிலர் மதிப்புரை எழுதுவதைப் பார்த்தால் வேடிக்கையாகவே இருக்கிறது. தமக்கு வேண்டிய பட்டம் பதவிகளுடையவர்களின் புத்தகங்களாயிருந்தால் மனம் போலத் தட்டிவிடுகிறார்கள். அது வியாபார விளம்பரம் போலத் தோன்றுகிறது. அல்லாதவர்களின் புத்தகங்களாயிருந்தால் ஓரே ஆழ்த்தாக ஆழ்த்தி விடுகிறார்கள். இப்படிச் செய்வது கூடாது. ஆசிரியர்கள் துலையின் நாவைப் போன்றிருக்க வேண்டும். பொறுப் புணர்ந்து நடக்க வேண்டும். உங்கள் பத்திரிகை நல்ல முறையில்தான் செல்லுகிறது, இப்படியே நடக்கட்டும். கொஞ்சம்பேர் படித்தாலும் போதும்; கொஞ்ச நாள் நடந்தாலும் போதும்; நன்றாக நடக்க வேண்டும். இப்பத்திரிகை நெடுநாள் வாழும் என்பது என் மனப்பூர்வமான எண்ணமும் ஆசியும்" என்று கூறி வாழ்த்துவார்கள். இப்படியெல்லாம் அவர்கள் சொல்வார்கள் என்று ஏன் கூற வேண்டும்? இவையெல்லாம் அத்தகையோரிடம் கூறிய மணிமொழிகள் தாம்.

சிலவாண்டுகளாகக் கவிமணியவர்கள் உடல்நலம் குன்றிய காரணத்தால் எங்கும் செல்வதில்லை. படுக்கையில் தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். படுத்துக் கொண்டிருந்தாலும் அவர்கள் படித்துக் கொண்டேதானிருப்பார்கள். அறிவு திரட்டுவதிலுள்ள ஆர்வம் அவர்களுக்கு அவ்வளவு. அவர்கள் படிக்காத செய்யுட்கள் தமிழிலோ ஆங்கிலத்திலோ இல்லை யெனலாம். உமர்க்கய்யாம் கவிதைகளென்றால் ஆங்கிலத்தில் எத்தனை மொழி பெயர்ப்புக்கள் உண்டோ அத்தனையும் அவர்களிட

யிருக்கும். ஷேக்ஸ்பியர், வேட்ஸ்வொர்த், ஷெல்லி, பிளேக், எட்வின், ஆர்னால்ட், பயரன், கௌப்பர், பிரான்ஸிஸ் தாம்ஸன், மாத்யு ஆர்னால்ட் போன்றாரின் கவிதை மூலங்களைத் தவிர அவைபற்றிப் புலவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரைகள் எத்தனையுண்டோ அத்தனையும் அவர்கள்பால் உண்டு. தொல்காப்பியத்திலும் இளம்பூரணர் உரைமுதல் கணேசய்யர் பதிப்புவரையுள்ள எல்லாப்படிகளும் அவர்கள் பார்த்தவைகளே. திருக்குறளை எடுத்துக் கொண்டாலும் அதற்கெழுந்துள்ள மணக்குடவர் உரை முதலிய பல்வேறு உரைகளைமட்டுமல்ல, உரை விகற்பங்கள் பற்றி யெழுந்துள்ள தமிழ், ஆங்கில உரை நடைகளையும், 'வள்ளுவர் ஜைனர்' என்பதை விளக்கி யெழுதியுள்ள பல ஜைனப் பெரியார்களின் நூல்களையும், அவற்றுக்காதாரமான ஸ்ரீபுராணம் முதலான ஜைனமத நூல்களையும் நன்கு கற்று நூல் நுட்பம் திரட்டுவார்கள்.

தென்னிந்திய சரித்திரம், சாசன ஆராய்ச்சி என்றால் அவர்களுக்கு அமுதம் சாப்பிடுவது போலத்தான். வட்டெழுத்து, கோலெழுத்து, மலையாம முதலான எழுத்துக்களிற் பதிப்பிக்கப்பட்ட சாசனங்களடங்கிய பதிப்புக்களனைத்தும், அவைபற்றி யெழுந்துள்ள ஆராய்ச்சியுரைகள் அனைத்தும் அவர்கள் நூல்நிலையத்தின்கண்ணும் மனத்தகத்தும் நிரம்பிக் கிடக்கின்றன. அவை பற்றிப் பேச்சு வரும்போது அவர்களுக்கு வாலிபம் திரும்பிவிடும். எவ்வளவு அறிவுகள்; எவ்வளவு உண்மைகள். எடுக்க எடுக்கக் குறையாதபடி இவை நிரம்பிக் கிடப்பதைக் காணலாம்.

அவர்கள் படுக்கையில் கிடக்கும் நிலைகண்டும், குரல் கம்மியிருப்பது கண்டும் நாம் பேச்சுக் கொடுக்கத் தயங்கக்கூடும். போன நம்மை மெதுவாக விசாரித்து

அன்போடு பேசிக்கொண்டே யிருக்கும்போது விவாத காரியங்கள் யாதேனும் வந்துவிட்டாற் போதும். எழுந்து உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கி விடுவார்கள். அப்போது பார்க்க வேண்டும் அவர்களின் முகக்களையை. முன்னமே நோயுற்றுப் படுத்திருந்த ஆள் வேறு; இவர்கள் வேறு என்றுதான் சொல்லத் தோன்றும். பசி, நீர் வேட்கை, உபாதி முதலியன இல்லாவிட்டால் நாமும் எத்தனை நாட்களானாலும் எழுந்து போக எண்ணாமல் கேட்டுக் கொண்டே யிருந்துவிடுவோம்.

கவிதைபற்றி அவர்கள் கூறியுள்ளதன் சுருக்கவுரை தான் 'கவிதைப் பண்பு' என்னும் தலைப்பின் கீழ்க் கொடுக்கப்பட்டது. இலக்கணத்தைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்துக்களின் சுருக்கம் ஒன்று கீழே தருகின்றோம். ஏனென்றால் கவி மணியின் கொள்கை காலத்துக் கேற்றபடி இலக்கணச் சீர்திருத்தம் வேண்டு மென்பதேயாதலால் அதை விரும்பாத பழம் பண்டிதர்கள் கவிமணி இலக்கணம் வேண்டாமென்று சொல்வதாகக் கூறுகின்றனர். அதன் உண்மையைப் புலப்படுத்துவதற் காகவே இது தரப்படுகின்றது.

"மொழியானது வளர்ந்துகொண்டே போகும் தன்மையுடையது. அது செழித்து வளரும் ஒரு மரத்துக்கு ஒப்பானது. மரத்தில் முற்றிய இலைகள் உதிர்கின்றன; புதியன தளிர்க்கின்றன. நறுமணங் கமழும் பூக்கள் பூக்கின்றன. காய்கள் காய்க்கின்றன; அவை கனிகின்றன. அதுபோலவே மொழியாகிய மரமும் வழக்கு வீழ்ந்த பிரயோகங்களாகிய சருகுகளை உதிரவிட்டு, செஞ்சொற்களாகிய பசிய இலைகளைக் குழையவிட்டு, இனிய பொருட்களாகிய நறுமலர்களைப் பூத்து, சிறந்த நூற்களென்னும் தீங்கனிகளை கனிந்து தரவேண்டும். வேர்கள் நாலாதிசைகளிலும் ஓடி உணவெடுத்து உருமாற்றிக் கொடுத்து

மரத்தைச் செழுமைப்படுத்துவது போல, மொழிப்பயிற்சியாளரும் அறிஞரும் கவிஞரும் பிறமொழிகளிலுள்ள சிறந்த பொருள்களையும், வேண்டிவந்தால் சொற்களையும் எடுத்துத் தம்முடையனவாக்கித் தம்மொழிக்கு ஊட்டி அதனை வளம்பெறச் செய்ய வேண்டும்.

"தமிழில் எத்தனையோ சொற்கள் இறந்துபட்டன; எத்தனையோ சொற்கள் புகுந்துள்ளன. சொற்களின் போக்கிலும் சொற்றொடரமைப்பிலும் செய்யுளமைப்பிலும் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதை நாம் பார்க்கிறோம். அவற்றுக்கேற்றபடி மொழியமைப்பைக் காட்டும் இலக்கணமும் மாறுபடவேண்டுவது இன்றியமையாதது. தமிழ் இலக்கணம் தொன்மை வாய்ந்தது என்ற காரணத்திற்காக அதனை விடாப்பிடியாகப் பிடிப்பது முறையல்ல. ஐந்து வயதில் தைத்த சட்டையை ஐம்பது வயதானபோதும் பழமையானதென்ற காரணத்திற்காகப் பயன்படுத்த முடியுமா? இலக்கணம் காலத்துக்கேற்றபடி அசைந்து கொடுக்காமலிருந்தால் சில காலத்துக்குள் அது புறக்கணிக்கப்பட்டுவிடும். இலக்கணமானது வேட்டைக்குச் செல்லும் நாய் போல மொழியை முன்னுக்கு இழுத்துச் செல்ல வேண்டுமேயன்றி, இளைத்துத் திரும்பிவரும் நாய் போலப் பின்னுக்கு இழுத்தலாகாது. அன்றியும் இலக்கணம் இலக்கியத்துக்கு ஒரு வேலைக்காரி போன்றிருக்க வேண்டும்; எஜமாட்டியாய் விடலாகாது.

"இன்று உலகமே உள்ளங்கையில் அமைந்துள்ளது போல்க் காணப்படுகிறது. உலகத்தின் ஒரு மூலையிலுள்ள செய்தி இன்னொரு மூலைக்கு விநாடிக் கணக்கில் பறக்கிறது. ரயில், கப்பல், விமானம் இவைகள் நாடுகளின் அகலத்தைக் குறுக்கி ஒன்றாக்குகின்றன. பல ஆயிர மைல்களுக்கப்பாலுள்ள நிகழ்ச்சிகளைக்கூட மனிதன்

நேரில் காண விரும்புகின்முன்; காண்கின்முன். ஆகவே இவற்றுக்கேற்றபடி மனிதனின் அறிவு, சிந்தனை என்பவை எவ்வளவு விரிந்தவையாயிருக்க வேண்டும்! அவற்றை வெளிப்படுத்துவதற் கேற்றவாறு அவன் மொழி எவ்வளவு வளர்ந்து கொடுப்பதாயிருக்க வேண்டும். அந்த இலாகவம் ஒரு மொழிக்கு இல்லையென்முல் அஃது அழுகி நாறும் குண்டு நீர்க்குச் சமம்தான். குண்டுநீர்க் கொப்பான மொழி குன்றிப்போவது திண்ணம்.

"மொழிக்கு, வேண்டாத இலக்கணக் கட்டுப்பாடுகள் இருத்தலாகாது. வடமொழி வழக்கற்றொழிந்ததைப் பார்த்தோமே. பின்னுமா நமக்குக் கண் திறக்காமலிருக்க வேண்டும்? வழக்கு வீழ்ந்த இலக்கணங்களை விட்டுவிடத் தான் வேண்டும். சில இலக்கண பண்டிதர்கள் உதிர்ந்த சருகுகளைப் பசைதடவி மரத்தில் ஒட்டத் துணிவதுபோல அவற்றை விடாமல் பிடித்துப் பொருத்தப் பார்க்கிருர்கள். அது பிசகு. சந்திசேர்த் தெழுதுவதைக் கூடிய வரையிலும் தவிர்க்க வேண்டும். சில புணர்ச்சிகளில் இயல்பாக வந்தமையும் சந்திகள் உண்டு.

"எடுத்துக் காட்டாக—தாள் தலை என்னும் இரு சொற்களையும் அகல நிறுத்தி உச்சரிக்கும் பொழுது எவ்வித வேற்றுமையும் தோன்றுவதில்லை. கொஞ்சங் கொஞ்சமாக நெருக்கி உச்சரிக்கும் பொழுது நிலைமொழி யீறும் வருமொழி முதலும் திரிந்து உச்சரிப்பு வேறுபாடு உண்டாவதைக் காணலாம். ஒரு சொல் போலச் சொல்லும்பொழுது 'தாடலை' என்றே ஆய்விடுகின்றது. நாக்கின் ஓரத்தைத் தடித்து மேலண்ணத்தைத் தடவி 'ள்' உச்சரித்து விட்டு, உடன்தானே நாக்கை நீட்டி மேல் வரிப்பல்லின் அடிப்பாகத்தோடு பொருந்தித் 'த' உச்சரிப்பதற்குள்ள முயற்சிப் பெருக்கம் நிகழாமல் இரண்டுக்கும் நடுவே வைத்து முறிந்து 'ட' தோன்றி

விடுகிறது. இஃது 'இயல்பு சந்தி,' இத்தகையவற்றைத் தழுவிக் கொள்வதில் தவறுதலில்லை. மேல்+நோக்கினான் = மேனோக்கினான் — என வருவதும் இது போன்றதே. ஆயினும் இவற்றைக் கூடப் பிரித்தெழுதுவதே மேல்

" இப்படிக் கூட இல்லாமல் பொன்+குடம்=பொற்குடம் என்றும், மேல்+பார்வை=மேற்பார்வை என்றும் எழுத வேண்டுமென்கிறதே இலக்கணம். இந்தச் சந்தியைப் பண்டிதர் சந்தி என்று சொல்வதைத் தவிர வேறென்ன சொல்வது? யாவரும் பொன்குடம் என்றும், மேல்பார்வை என்றும் இயல்பாகக் கூறுவதைத்தான் நாம் பார்க்கிறோம். இது போலவே தான் 'அங்குச் சென்றான்' 'இங்குப் பார்த்தான்' என்பவைகளும். இந்த விதியைக் கவனித்துக்கொண்டிருக்கும் பண்டிதர்களைத் தவிர இக்காலத்தில் இடையே ஒற்று மிகுத்தெழுதுவார் வேறு ஒருவரையும் காணோம். நூல்கள், நூற்கள்; குறிப்புகள், குறிப்புக்கள் முதலியனவாக விகற்பித்து எழுதப்படுபவைகளும் மிகுந்துள்ளன. ஆதலால் முன்னைய இலக்கணத்துக்கு மாறுபட்டவையாயினும் வழக்குப் பயிற்சியைப் பெற்று விடுமேயானால் அவற்றைத் தழுவிக் கொள்ளவேவேண்டும். வேண்டாதவற்றை விலக்கிவிட வேண்டும்.

நன்னூலார் தம் நூலுள்—

**'இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்;**
**பெயரும் வினையும் குறிப்பி னானே'**

என்று இலக்கணங் கூறுகின்றார். சில பொதுப் பெயர்களும் சில பொது வினைகளும் குறிப்பினாலே இருதிணையிலுமுள்ள ஆண்பெண்களுள் ஒரு பாலையொழித்து ஏனைய பாலைக்காட்டி நிற்கும் என்பது பொருள். உழவுக்கு மாடு

கொண்டு போனுன், அல்லது வண்டியில் மாடு பூட்டினுன் என்றுல் சொல்லப்படுவது காளைமாடுதான் என்பது யாவருக்கும் தெரியும். இந்த விதியைத் தெரிந்து கொள்ளாதவர் எவரேனும் இதில் தவறிப் போகிருர்களா என்றுல் இல்லை. வேறெந்த மொழிகளிலும் இப்படிப்பட்ட விதிகள் இருக்கவுமில்லை. ஆகவே இவற்றையெல்லாம் பகுத்தறிவினுல் உணர விடவேண்டுமேயன்றி இலக்கண வலையுள் அகப்படுத்தி வைக்கத் தேவையில்லை. இலக்கணம் மொழிப் பொருளையுணரப் பயன்படுவதா யிருக்க வேண்டும்; பாரமாயிருத்தலாகாது.

"உடல் கூறுகளையும், உறுப்பமைதிகளையும் பற்றிக் கூறும் எத்தனையோ நூல்கள் தற்காலத்தில் வந்து விட்டன. அவற்றின் துணையுடன் எழுத்துப் பிறப்பின் இயல்பைக் காட்டுவதுதான் சிறப்பு. இவை யொன்று மில்லாத காலத்தில் நன்னூலார் எழுத்துப் பிறப்பின் இயல்புகளைச் சுருக்கமுறச் சூத்திரித்ததற்காக நாம் அவரை மிகவும் போற்றவேண்டும். ஆனுல் அவற்றில் பொருத்தக் கேடுகள் உள்ளன என்பதை நாம் மறைக்க லாகாது. நன்னூல்

'அண்பல் அடிநா முடியுறத் தநவரும்' என்றும்,
'மீகிழ் இதழுறப் பம்மப் பிறக்கும்' என்றும்,
'அண்ணம் நுனிநா வருட ரழவரும்' என்றும்

கூறுகின்றது. ஒரே முயற்சியில் இரண்டிரண்டு எழுத்துக்கள் பிறக்கும் என்றுசொல்வது எவ்வளவு பொருத்தக் கேடு. த, ந; ப, ம; ர, ழ என்பவற்றின் பிறப்பு வேறுபாடு மிக நுட்பமானது. இதற்குரிய இலக்கணம் நவீன முறையினுல் விரிவுபடவேண்டும். நாதம் தோன்றுமிடம் அஃது எழுப்பப்படும் விதம், சென்று முட்டு மிடங்கள், நாக்கு பல் அண்ணம் இதழ் என்பவற்றின் முயற்சி வேறு

பாடுகள் முதலியவற்றைப் படங்களில் அமைத்துத் தெளிவுபடுத்தலாம்.

"இனி, ஆசிரியர்களும் இலக்கணங் கற்பிக்குங்கால் சிறந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும். விதிகளை மட்டும் சொல்லிக் கொடுத்து நெட்டுருப் பண்ணச் செய்யாதபடி எடுத்துக்காட்டுகள் பலவும் கூறி மாணவர்களைக் கொண்டே விதிகளை அமைக்குமாறு செய்ய வேண்டும். அங்ஙனம் கற்பிக்கப்பட்டவைதாம் மாணவர் மனதில் நிலைத்து நிற்க முடியும். ஆசிரியர்கள் தாம் கைக்கொள்ளும் முறையில் பிள்ளைகளுக்கு இலக்கணத்தின் மீது ஒரு வெறுப்பை யுண்டுபண்ணி விடாமல் விருப்பெழுமாறு செய்யவேண்டும்."

இக் கூற்றுக்கள் இலக்கணம் வேண்டாமென்று கருதிக் கூறப்பட்டவையா? திருத்தம் வேண்டும் என்பது பற்றிக் கூறப்பட்டவையா என்பதை இதனைப் படிப்போரே சிந்தித்துக் கொள்ளக் கடவர்.

கவிமணியவர்கள் திருக்குறளையும் உரை நுட்பங்களையும் பற்றிக் கூறத் தொடங்கிவிட்டால் நாள்முழுக்கக் கூறுவார்கள். அவற்றைக் கருத்தூன்றிக் கேட்பவர்க்கு ஒரு புத்தகமே எழுதிவிடமுடியும். அவர்கள் பல் வேறு துறைகளிலும் படித்துத் திரட்டி அறிவின் பிண்டமாக விளங்குகிறார்கள் என்றே சொல்லவேண்டும். அவ்வறிவைப் பிறர்க்குக் கொடுப்பதிலும் கரத்தல் என்பது சிறிதும் இல்லை. இவற்றையெல்லாம் தமக்குரிமைப் படுத்திக் கொள்ள வேண்டு மென்னும் விருப்பமின்மை தான் அதற்குக் காரணம்.

கவிமணியின் உள்ளம் களங்கமற்றது. அவர்களின் பொறிகள் எந்தவிதமான மாசு மறுக்களையும் உட்புகவிடுவதில்லை; புலன்கள் ஏற்பஃதுமில்லை. ஒருவர் இல்லாத

போது அவரைப் பற்றிய குற்றச் சாட்டான பேச்சுக்கள் வருமேயானால் அவற்றில் கவனக் குறைவு காட்டி மெல்ல ஓயவிட்டுவிடுவார்கள். புறஞ்சொல்லைக் கேட்க அவர்கள் செவி என்றும் திறப்பதில்லை. அதுபோலவே தான் நாவும். அது என்றும் 'கண் நின்று கண்ணறச் சொல்லினும் முன் இன்று பின்னோக்காச் சொல்' சொல்லியறியாது. இவையும் அவர்கள்பால் அமைந்துள்ள தனிப்பெருங் குணங்களாகும்.

மிகுந்த அடக்கம் வாய்ந்தவர் தே-வி அவர்கள். திருவனந்தபுரத்தில் வசிக்கும் போது அடுத்த வீட்டில் வசித்துவந்த அவரது நண்பர், தம் வீடு இடம் பற்றாதென்று கருதி தே-வியின் வீட்டில் ஒரு சமயம் 'மறுவீடு அடியந்திரம்' நடத்தினார். யாவரும் விருந்துணவுக்குத் திரண்டு நிற்கும் வேளை. ஒருவன் வந்து ஒரு தந்தி வந்திருப்பதாகத் தே-வியிடம் மெல்லக் கூறினான். தந்தி யென்றால் திடுக்கிடத்தக்க பொல்லா நிகழ்ச்சி என்பதுதான் பொருள் அந்த நாளையில். அசாதாரண நிகழ்ச்சிகளுக்குத்தான் தந்தி கொடுப்பது வழக்கம். தே-வி மெல்லச் சேவகனை அழைத்துக்கொண்டு வெளியே போய்த் தந்தியை வாங்கினார். 'அது யாதோ ஓர் துக்கச் செய்தியாகத் தானிருக்க வேண்டு மென்று ஊகித்துக் கொண்டார். அதை உடைத்துப் பார்த்தால் மனத்துயரம் கொள்ள வேண்டிவருவதோடு அச்செய்தி சிலர் பலர்க் காய் வெளிப்படவுங் கூடும். அது விருந்துக்குப் பங்கமும் அமங்கலமும் ஆகமுடியும்' என்று எண்ணினார். ஆகவே, மகனிறந்ததை வெளிக்காட்டாமல் மறைத்துப் போட்டு விட்டு நாவுக்கரசருக்கு விருந்தூட்டுவதில் விருப்புற்று நின்றாரே அப்பூதியடிகள் அவரைப்போல தந்தியைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுவந்து அடியந்திரத்தைச் சிறப்பிக்கலானார். தே-வி மாலையில் விருந்தினரெல்லாம்

செல்வது வரையும் பொறுத்திருந்தார். இந்த மூன்று நான்கு மணி நேரமும் அவர்களுடைய மனம் எவ்வளவு சஞ்சல முற்றிருக்க வேண்டு மென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. இதனை வெளிக்காட்டாமல் அடக்கி நின்ற அவர்களின் மன அடக்கமே அடக்கம். பின், தந்தியை உடைத்துப் பார்த்ததும் அவர்கள் நினைத்தது போல திடுக்கிடும் செய்திதான் அது. தமது மருமகளின் திடீர் மரணச் செய்தி. உடன் தானே புறப்பட்டு வரவேண்டு மென்றும் குறிப்பிட்டிருந்தது. தம் வருகைக்காகக் காத்திருப்பரே யென்றெண்ணி தம் மனைவியிடம் கூட நேரில் சொல்லிக் கொள்ளாமல் உடன் புறப்பட்டு நாகர்கோவிலுக்குச் சென்றார்.

இந் நிகழ்ச்சி மட்டுமல்ல, இளமையில் தம்முடைய தேங்கவிகள் படித்தின்புறப்படுவதைப் பார்த்தும், பத்திரிகையில் தம்பெயர் பொறிக்கப் படவேண்டுமென இயல்பாய் எழுத்தகுந்த தம் ஆசையை எழவொட்டாமல் ஒறுத்து நிறுத்தியதும் அவர்களுடைய அடக்கத்தின் பெருமையை அறிவித்து நிற்பதாகும். அன்பு, அடக்கம் என்னும் இரண்டையும் அவர்கள் வாழ்க்கைப் பண்புகளாகவே கொண்டுள்ளார்கள். அதனால் அவர்கள் வாழ்வில் எளிமை பொலிந்து விளங்குவதைக் காணலாம்.


தே-வி விருந்தோம்பல் என்னும் அறவாழ்க்கையையுடையவர். தம்மை நாடிவந்தார்க் கெல்லாம் அறிவு விருந்தளித்து அவர்களோடு அளவளாவி மகிழ்வது அவர்கள் இயல்பு. அதோடு வேளாண் மரபுக்குரிய அறமாய உண்டியளித் துபசரித்தல் என்னும் விருந்தோம்பலையும் செய்து முடித்த பின்னரே எவரையும் விடுவார்கள். நாள் தோறும் எத்தனையோ பேர் வந்தவண்ணமாகவே யிருப்பார்கள். ஆகவே, அவர்கள் வீடு ஒரு விருந்தினர் இல்லமாகவே விளங்குகிறது என்று சொல்ல

லாம். அங்ஙனம் வரும் பலரும் அளவளாவியிருந்து கவி மணியவர்களின் ஆசியைப்பெற்று, பூரித்த மனத்துடன் 'தே-வி பல்லாண்டு வாழவேண்டும்' என்று வாயார மனமார வாழ்த்திச் செல்லுகின்றார்கள். அவ்வாழ்த்துக்கள் எல்லாம் தகுந்தபயனைத் தருமல்லவா?

*வாழிபல வூழி மலர்மாலை யாம் தொகை நூல்
வாழிமரு மக்கள்வழி மான்மிய நூல் — வாழியரோ
†தேசிகவி நாயகன்தன் சேயாம் சிவனருளால்
தேசிகவி நாயகவேந் தே.

* திரு. வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது.

† தேசிக விநாயகன் தன்சேயாம் சிவன் - மேலான விநாயகப் பெருமானைத் தன் மகனாகவுடைய சிவபிரான்.



கவிமணியும், கலைவாணரும்

# *கவிமணியும் கலைவாணரும்

கண்ணாரக் காண நம்மிடையே வாழும் ஒரு கவிஞன் கவிமணி தேசிக விநாயகன். கண்ணாரக் காண நம்மிடையே வாழும் ஒரு கலைவாணன் என். எஸ். கிருஷ்ணன். இவ்விரு பெரியார்களும் பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தவர்கள்.

கவிமணியைக் கருணைக் கவியென்றே சொல்ல வேண்டும். அவரது அழகிய கவிதைகளில் கருணை ரச பாவம் எல்லாவற்றிற்கும் மேலாக, சிறப்பாகப் பரந்து கிடப்பதைப் பார்க்கலாம். கருணைக்கடல் என்னும் கவிமணியின் கவிதைத் தொகுதிகளைப் படித்தால் கண்களில் நீர் மல்குமென்பது அநுபவ உண்மை. கருணையுள்ளம் படைத்த கவிஞனிடம்தான் இம்மாதிரிக் கவிதைகள் பிறக்க முடியும்.

"எது கவிதை ?" என்ற தலைப்பில் கவிமணி சில கவிதைகளை வெகு அழகாகத் தீட்டியிருக்கிறார். இந்தக் கேள்விக்கு, "உள்ளத்துள்ளது கவிதை" என்று அவரே விடையளிக்கிறார். ஆகவே கவிமணி இயற்கையாகவே கனிந்த உள்ளம் படைத்தவராயிருத்தல் வேண்டுமென்று திட்டமாகத் தெரிகிறது. ஒருமுறை கவிமணியை நேரில் சந்தித்தவர்கள் இந்த அபிப்பிராயத்தை உடனே கைக்கொண்டு விடுவார்களென்பதை நிச்சயமாகக் கூறலாம். அன்பு ததும்பும் அவர் பேச்சில்தான் என்ன இனிமை! வந்தவர்களை முகமலர்ச்சியுடன் முகமன் கூறி உபசரிக்கும் பான்மைதான் என்னே! பேதா பேதம் மருந்துக்குக்கூட அவரிடம் காணமுடியாது. சாந்தம் கவிமணியின் இருப்பிடத்தைச் சுற்றி வட்டமிட்டுக்கொண் டிருக்கும். எந்த சூழ்நிலையிலும் கடுமையான வார்த்தைகள் அவர் வாயி

---

* இப் பகுதி திரு. எஸ். கே. சுவாமி அவர்களால் எழுதப் பெற்றது.

லிருந்து வெளி வந்ததே கிடையாது. இது கற்பனையல்ல; கடைந்தெடுத்த உண்மை.

கலைவாணர் என். எஸ். கே அவர்களும் கருணை மனமும் பரோபகார நோக்கமும் படைத்தவர். பிறந்தது பிறர்க்கு உதவி புரிவதற்கென்பதே என். எஸ். கேயின் கொள்கை. பசித்தவரைப் பார்க்க அவர் மனம் பொறுக்காது. பசித்தவர் புசிப்பதைப் பார்த்து பரமானந்தம் கொள்வது அவர் சுபாவம். இந்தக் கருணையுள்ளம் பிறவியிலேயே அவருக்கு அமைந்திருந்தது. கிருஷ்ணனின் பிள்ளைப் பிராயத்தில் நடந்த ஒரு சம்பவத்தை ஈண்டு தருகிறோம்.

பிழைப்புக்கு வழிதேடி கிருஷ்ணன் இளம்பருவத்திலேயே நாடகக் கம்பெனியில் சேர்ந்து நடித்து வந்த காலம். இந்த நாடகக் கம்பெனி, திருநெல்வேலியில் முகாம் செய்து நாடகங்களை நடத்திவந்தது. கிருஷ்ணனுக்கு அந்தக் காலத்திலேயே நகைச்சுவை நடிப்பில் நல்ல பெயர். ஆனால் வறுமை அவரைப் பிய்த்துப் பிடுங்கித் தின்றது. வறுமையில் செம்மை என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப அந்தக் காலத்திலும் தன்னாலியன்ற உதவிகளை சகோதர நடிகர்களுக்குச் செய்துவந்தார். நாடகச் சிறுவர்கள் அநுமதியின்றி வெளியே எங்கும் போகக்கூடாது. அவ்வளவு கண்டிப்பு. அவசர காரியமாக வெளியே போக வேண்டுமென்றால் நடிகர்கள் மானேஜரின் அநுமதியோடு போகவேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் வந்துவிட வேண்டும்.

ஒரு நாள் தாம்பிரவர்ணி நதியில் சென்று முங்கிக் குளிப்பதற்கு மானேஜரின் உத்தரவுபெற்று கிருஷ்ணனும் இன்னொரு நடிகனும் புறப்பட்டார்கள். போகும் வழியில் ரயில்வே லயனுக்குச் சமீபத்தில் ரயிலில் அடிபட்ட கழுதையின் பிராணவேதனைக் காட்சியைக் கண்டார்கள்.

வந்த காரியத்தை மறந்தார்கள். அந்தக் கழுதையின் முதுகிலுள்ள காயத்திலிருந்து ரத்தம் பாய்ந்துகொண்டிருந்தது. அந்த பாகத்தை காக்காய்க் கூட்டங்கள் குத்திக் குடைந்துகொண்டிருந்தன. கழுதைக்குத் தாங்க முடியாத வேதனை. இந்த சோகக் காட்சியைக் கண்ட கிருஷ்ணன் அந்த வாயில்லாப் பிராணியின் சமீபத்தில் ஓடினுன். உற்றுப் பார்த்தான். அவன் மனம் உருகியது. காகங்களை விரட்டியடித்தான்-என்ன செய்வதென்று தோன்ருமல் திகைத்தான். காகங்களை விரட்டிய வண்ணமாகக் காத்திருந்தான் நீண்ட நேரமாக.

கழுதையை விட்டுச் சற்று அப்புறம் இப்புறம் நகர்ந்தால் காக்காய்க்கூட்டம் வந்து மொய்த்துவிடும். ஆகவே கிருஷ்ணன் கழுதைக்குக் காவல் புரிந்தான். அன்று நாடகமானபடியால் விரைவில் கம்பெனி வீடு போகவேண்டு மென்பதை நண்பன் உணர்த்தினுன். வாயில்லாப் பிராணியின் துன்பத்தைத் துடைக்க என்ன செய்யலாமென்று நண்பனிடம் கிருஷ்ணன் யோசனை கேட்டான். யோசனை உதயமாயிற்று. 'விரு விரு' வென ஓடிச் சென்று அங்கங்கே காணப்பட்ட மாட்டுச் சாணக் குவியல்களைத் திரட்டிக் கொண்டு வந்தான் கிருஷ்ணன். கழுதையின் புண்ணின்மீது இருவரும் சேர்ந்து மாட்டுச் சாணியைக் குழைத்து நன்ருகப் பூசினுர்கள். சற்றுநேரம் ஒதுங்கி நின்று கவனித்தார்கள். காக்காய்களால் கழுதைக்குத் தொல்லை செய்ய முடியவில்லை யென்பதைக் கண்கூடாகக் கண்ட பிறகு தான் கிருஷ்ணன் சமாதானமடைந்தான். இதிலிருந்து பிள்ளைப் பருவத்திலேயே கிருஷ்ணனின் பிஞ்சு உள்ளத்தில் ஊறிக் கிடந்திருந்த கருணையின் ஆழம் நன்ருகத் தெரியவருகிறதல்லவா! இந்த நேர்மை யுள்ளம் வரவர விரிந்து பரந்து பெருகலாயிற்று. எல்லா உயிரும் இன்

புற்று வாழவேண்டுமென்ற உயர்ந்த கொள்கையை எட்டிப் பிடித்து அதன்படி நடந்து வருகிருர் நகைச் சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன்.

கவிமணி அவர்கள் ஊமைப் பிராணிகளான ஆடு மாடு, மான், குதிரை முதலியவைகள் மீது அளவிலா அன்பு கொண்டவர். ஒரு பாவமும் செய்தறியாத இந்தப் பிராணிகளை மனிதர்கள் தங்களின்பத்திற்காகத் துன் புறுத்தும் காட்சி கவிமணியின் நெஞ்சைக் கலக்கி வருகிறது. "குதிரையின் புலம்பல்" என்ற பாடல்கள் இந்தக் கருணையுள்ளத்தில் கனிந்தவைகள். யாகசாலைக்கு பலிபோட விரட்டிக்கொண்டு போகும் மந்தை ஆடுகளைப் பற்றி கவிமணி வர்ணித்துக்கூறும் கவிதைகள் கல் மனதையும் உருகச் செய்து விடுகின்றன.

யாகசாலையை நோக்கி அவசரமாக ஆட்டுமந்தையை ஓட்டிச் செல்கிருர்கள். கருணைமூர்த்தியான புத்தர் பார்க்கிருர். இரக்கம் பீறிட்டுப் பாய்கிறது. இந்தக் காட்சியைக் கவிமணி எப்படி எடுத்துக் காட்டுகிருர் பாருங்கள்:

"மந்தை பெரிய மந்தை—உணவின்றி
வாடிமெ லியும் மந்தை
சிந்தைத ளரும்மந்தை—நடக்கவும்
சீவன்இ லாதமந்தை."

இந்தக் கவிதையின் கடைசி அடியைப் படிக்கும் போது நமது சிந்தையும் தளர்ந்து விடுகிறது. சீவனற்றுப் போன உணர்ச்சியும் ஏற்பட்டு விடுகிறது. அவசரமாகப் போக வேண்டிய வேகத்தில் ஆடுகள் பச்சைப்புல்லை கடிக்கவும் இடையர்கள் இடங் கொடுக்கவில்லை.

**"கண்ணிலே கண்ட புல்லை—நின்றுருவாய்**
**கௌவிட ஒட்டார் ஐயோ!**
**தண்ணீர்கு டிப்பதற்கும்—விலகிடச்**
**சம்மதி யாரே ஐயோ!"**

கருணையுள்ளம் கொண்ட இவ்விரு கலைஞர்களின் சொந்தவூர்—இல்லை—பிறப்பிடம் ஒன்றுதான் என்பதை உங்களில் பலர் தெரிந்திருக்கிறீர்களோ என்னமோ எனக்குத் தெரியாது. கவிமணி பிறந்தவூருக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் தான் கலைவாணரும் தோன்றினர். இற்றைக்கு முப்பத்து எட்டு ஆண்டுகளுக்கு முன்னே, பரந்த இவ்வுலகில் இரண்டு மைல் தூர வித்தியாசம் எம்மாத்திரம்! பிறந்த பொன்னாட்டுக்குப் பெயரும் பெருமையும் தேடிக் கொடுத்த பிறவிக் கலைஞர்களாகிய இவ்விருவரும் நீண்டகாலம் ஒருவரையொருவர் நேரில் சந்தித்துப்பேசியது கிடையாது. சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்புதான் ஒரு பொதுக் கூட்டத்தில் இவ்விரு பெரியார்களும் சந்தித்தார்கள். அளவளாவினார்கள். ஆனந்தமடைந்தார்கள். ஆலிங்கனம் செய்தார்கள். ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள்.

நாஞ்சி நாட்டிலுள்ள ஆரல்வாய் மொழியென்னும் கிராமத்தில் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் கவிமணியைக் கலைவாணர் சந்தித்தார். அன்றைய கூட்டத்திற்குத் தலைவர் கவிமணி. கலைவாணர் சொற்பொழிவாளர். முதன் முதலாகக் கவிமணியைக் கண்டதும் என். எஸ்.கிருஷ்ணன் மாலை மாலையாகக் கண்ணீர் விட்டார். தேம்பித் தேம்பி அழுதார். பொதுஜனங்கள் இக்காட்சியைக் கண்டு திகைத்தனர். இடையிடையே கவிமணியைக் கூர்ந்து நோக்குவதும் கண்ணீர் விடுவதும் கலைவாணரின் நீண்ட

நேர வேலையாயிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் கலைவாணரின் சொற்பொழிவு நடைபெறவில்லை. ஏன்— ஒரு வார்த்தைகூட அவர் வாயிலிருந்து வெளிவரவில்லை. கவிமணி கலங்கினார். கிருஷ்ணனை அணுகி அன்புடன் அணைத்துக்கொண்டு, "என்னப்பா இது? ஏன் இப்படி அழுகிறாய்?" என்று கேட்டார்.

"ஒண்ணுமில்லீங்கோ — உங்களைப் பார்த்ததும் துக்கம் தாங்கமுடியல்லே. அதனாலே அழறேன்" என்று கூறி மீண்டும் அழுதார். இந்த அழுகையில் தான் கலைவாணரின் கனிந்த கருணையுள்ளத்தின் தனிமாண்பும் பண்பும் எடுத்துக் காட்டப்படுகிறது. கவிமணியைப் பற்றி என். எஸ். கே நிறையக் கேள்விப்பட்டிருக்கிறார். அவரது கவிதைகளைப் படித்து இன்புற்றிருக்கிறார். பல தடவைகளில் என்னிடம் கவிமணியின் கவிதைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டின்புற்றிருக்கிறார். அவரைப் பற்றி எப்படி எப்படியோ எண்ணிக்கொண் டிருந்தார். கவிமணியின் புகைப்படங்களைப் பார்த்து மகிழ்ந் திருக்கிறார். விரிந்த மார்பு, சாந்தம் ததும்பும் முகத் தோற்றம், ஒளிவீசும் கண்கள், களிப்பூட்டும புன்னகை, அகன்ற நெற்றி, அடைப்புச் சட்டை, தூய்மையான அங்கவஸ்திரம் சுற்றிய ஓய்யாரம், வெள்ளைத் தலைப் பாகை......இவைகளெல்லாம் அமைந்த அன்புத் தோற்றத்தைத்தான் புகைப்படத்தில் கண்டிருக்கிறார் கலைவாணர். ஆகவே கவிமணியின் திருவுருவம் இப்படித் தானிருக்குமென்பது கலைவாணரின் திடமான நம்பிக்கை.

அன்று கவிமணியின் மெலிந்தமேனி, ஒட்டி உலர்ந்த கன்னங்கள், சுருக்கு விழுந்த நெற்றித்தடம், நரைத்தும் வெளிவிழுந்தும் காணப்பட்ட தலைமயிர், நோயால் வருந்தும் இளைத்துப்போன உடம்பு...இவைகளின் உருவ மாகக் காட்சியளித்த அப்புண்ணிய புருஷனைக் கண்டதும்

கலைவாணருக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது. கலங்கினார். கதறினார். கருணையுள்ளங்களின் எதிரொலி யானது கண்ணீர்க் கடலாக மாறியதில் அற்புத மில்லை யல்லவா! ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொண்டு நீண்ட நேரத்திற்குப்பின் கலைவாணர் கூட்டத்தில் இவ்வாறு பேசினார்.

"..........................................................................

கவிமணி அவர்களை நான் இதுவரையிலும் நேரில் பார்த்ததில்லை. இன்றுதான் அந்தப் பாக்கியம் கிட்டியது. கவிமணியின் கவிதைகளை நிறையப் படித்திருக்கிறேன். பரவச மடைந்திருக்கிறேன். படத்தில் அவர் பாடல்களின் கருத்துகளைக் கை யாண்டிருக்கிறேன். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவர் அமுதக் கவிதைகள் என் போன்ற சாதாரணமானவர்களுக்குப் புரிந்து கொள்ளும் முறையில் அமைந்திருப்பது எங்கள் அதிர்ஷ்டம் தான். தமிழ் நாட்டில் பல தடவைகள் சுற்றுப் பிரயாணம் செய்பவன் நான். பல பெரிய மனிதர்களைச் சந்தித்திருக்கிறேன். அவர்கள் என்னிடம் பல தடவைகளில், 'உங்கள் ஊரில் வாழும் கவிமணி சுகமாயிருக்கிறார்களா? அவரைப் பார்த்தால் நாங்கள் பெரிதும் கேட்டதாகச் சொல்லுங்கோ. அவசியம் சொல்லணும்,மறந்து விடாதீங்க' என்று அன்புடன் சொல்வார்கள். நான் என்ன பதில் சொல்லியிருக் கிறேன் தெரியுமா? முழுப் பொய்யைத்தான் கூறி யிருக்கிறேன். 'கவிமணி சௌக்கியமாயிருக்கி றாங்கோ. சில தினங்களுக்கு முன் ஊருக்குப் போயிருந்தேன். அவுங்களைப் பார்த்தேன்' என்று தைரியமாகச் சொல்லியிருக்கிறேன். ஏன் இப்படிச் சொன்னேன் என்பதை நீங்களே யூகித்திருப்பீர்க

ளென்று நினைக்கிறேன். நான் அப்போ சொன்ன பொய்யை இப்போ பொய்யென்று ஒப்புக்கொள் கிறேன். ஆகவே இப்போ நிஜத்தைச் சொல்லி விட்டேன். குற்றம் சொல்லாதீங்க. இன்று கவிமணியை நேரில் கண்டு கொண்டேன். இனிமே தாராளமாக—தங்குதடையில்லாம சொல்லலாமே..."

இந்தச் சந்திப்புத்தான் இரு கலைஞர்களின் முதல் சந்திப்பு. அது முதல் கலைவாணர் என்.எஸ்.கே, நாகர் கோவிலுக்குப் போகும் காலங்களில் கவிமணியைப் பார்க்காமலிருந்ததேயில்லை. மனம் விட்டு அவ்விருவர்கள் உரையாடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பதே ஓர் மனோ ஹரக் காட்சி. இதை நான் பல தடவைகளில் அநுபவித் திருக்கிறேன். பல்லாயிர மக்களுக்குச் சிரிப்பையூட்டும் என்-எஸ்-கேயை கவிமணியின் குழந்தையுள்ள நகைச் சுவைப் பேச்சு குலுங்க குலுங்கச் சிரிக்கவைப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். பெரிய கேள்விகளை கவிமணி யிடம் கேட்டால், எளிய முறையில் பச்சைக் குழந்தை களும் புரிந்துகொள்ளும் பான்மையில் பதில் சொல்லி விடுவார். "விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்ட அணு குண்டுவீச்சினால் அழிவுவேலைகள் நடைபெறுகிறதே இதற்கெல்லாம் விஞ்ஞானம்தானே காரணம்?" என்று ஒரு முறை கவிமணியிடம் கேட்டதற்கு அவர் சொன்ன ஆணித்தரமான—அழகான பதில் நான் மேலே குறிப் பிட்டதை உறுதிப்படுத்துகிறதென்பதை நீங்கள் கண்டு கொள்ளலாம். "இருட்டில் வழியறிந்து நடப்பதற்கு ஒருவன் பந்தம் கொடுத்துதவுகிறான். ஆனால் அந்தத் தீப் பந்தத்தை வாங்கிக்கொண்டவன் வீட்டுக் கூரையைக் கொளுத்திவிட்டான் என்றால் அது யாருடைய குற்றம்? அந்த மனிதனின் மனோநிலையின் கோணலல்லவா?" என்று கவிமணி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு கூட்டத்தில் சொல்லியிருப்பதையும் இக் கருத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். "தீபத்தின் உதவியால் திருக்குறள் படிக்கலாம்; திருட்டுக் கையெழுத்தும் போடலாம்: பந்தத்தின் உதவியால் பாதை தெரிந்து நடக்கலாம்; பக்கத்து வீட்டையும் கொளுத்தலாம்; தீபத்தைப் பயன்படுத்தும் முறைதான் கலைப்பணியைப் பயன்படுத்தும் முறையும்" என்ற என். எஸ். கே-யின் பொன்மொழிகளில் எவ்வளவு ஆழமான கருத்து பொதிந்திருக்கிறது.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தன் மானம் என்பதை அணியாகக் கொண்டவர். பட்டா டைக்கும் பணத்துக்கும் பாடிப் பிழைக்கும் பஞ்சைக் கவியல்ல. உள்ளத்தில் உணர்ச்சி மேலிட்டால் மட்டும் கவிதைகள் பொங்கி வரும். ஏழைப் பிள்ளைகள் மீது அபார அன்பு கொண்டவர். தமிழ்மொழி மீதும் தமிழர் மீதும் நீங்காப் பற்றுடையவர்.

கலைவாணர் வாழ்க்கையில் மதுரத்தை யூட்டிவரும் திருமதி T. A. மதுரத்திற்கு கவிமணி மீது அன்பும் பணிவும் அதிகமுண்டு. பெற்ற பிதவாகவே அவரைப் பாவித்து நடந்து வருகிறார். என். எஸ். கேயுடன் திருமதி மதுரமும் புத்தேரிக்குச் சென்று கவிமணியைத் தரிசித்து வருவது வழக்கம். "மதுரத்தைப் பார்த்ததும் என் நோயெல்லாம் எங்கேயோ ஓடிவிட்டது, தம்பி" என்று என்னிடம் கவிமணி சொல்லியிருக்கிறார். நல்ல நல்ல புத்தகங்களைப் பொறுக்கி யெடுத்து திருமதி மதுரத்திற்கு அனுப்பிக் கொடுப்பது கவிமணியின் வழக்கம்.

நிரபராதியான என். எஸ். கிருஷ்ணன் சிலகாலம் சிறையிலிருந்ததுதான் எல்லோருக்கும் தெரியுமே. அந்த இரண்டரை வருடகாலத்தில் திருமதி மதுரம் அநுபவித்த துன்பம் செப்புந்தரமன்று. அந்த வேளைகளில் கவிமணியை

சந்தித்து தன் மனத் துயரத்தைக் கொட்டுவாள். கவிமணி கலங்கிய கண்களுடன் பல மேற்கோட்களை எடுத்துச் சொல்லி மதுரத்தை சமாதானம் செய்வார். விசித்திர மான இவ்வுலக வாழ்க்கையின் மேடுபள்ளங்களைத் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டி, "மேலோர்கள் செக்கிழுப்பது முண்டு" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவார். அந்தக் காலத்தில் திருமதி மதுரத்தின் மனதைத் தேற்றியவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் கவி மணி என்று என்னிடம் திருமதி மதுரம் பலதடவை சொல்லியிருக்கிருள். கவிமணி நோயால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாகவே கிடந்தார். அவர் பிழைப்பது அரிது என்ற நிலை. என். எஸ். கே சிறையிலிருக்கும் காலம். கவிமணியின் சுகவீனத்தைக் கேட்டதும் திருமதி மதுரம் சென்னையிலிருந்து புத்தேரிக்கு ஓடோடியும் வந்தாள். அம்மையாரைக் கண்டதும் கவிமணி துள்ளு மறியைப் போலப் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்து இருந்தார். "ஐயா, ஐயா" என்று மதுரம் அலறினள். கவிமணி அன்புடன் மதுரத்தை அருகில் அழைத்து அமரச் செய்து, உச்சிமோந்து உள்ளன்புடன் கன்னத்தில் உருண்டோடும் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துவிட்டு, "அம்மா, அழாதே. நான் இறந்து போவேன் என்று நினைத்துத்தானே அழுகிருய். நான் இப்போது சாகப் போவதில்லை. என் மகன் கிருஷ்ணனைப் பார்த்த பிறகு தான் இந்த உயிர் என் உடலைவிட்டுப் பிரியும்" என்று உறுதி மொழி உரைத்தார். பக்கத்திலிருந்தவர்கள் வியப் படைந்தனரென்ருலும் தூய உள்ளம் படைத்த பிறவிக் கவிஞரின் அருள்வாக்குப் பொய்க்காது என்று திடமாக நம்பினர்கள். அப்படியே நடந்தும் விட்டதல்லவா! நோயுற்றிருந்த காலத்திலும் என். எஸ். கேயின் சிறை வாசத்தை நினைந்து நினைந்து கவிமணி நெஞ்சம் கலங்கி

வந்தார். "கலைமகள்" பத்திரிகையில் அக்காலம் பிரசுரமான கவிமணியின் பாடலொன்றில், "அமரர் சிறை தவிர்த்த ஐயனே" என்ற வரி என். எஸ். கேயை எண்ணி எழுதியதாகக் கவிமணி அவர்கள் சொல்லியிருக்கிறார். மேலும் அவர் கூறியதாவது:—

"கிருஷ்ணன் நல்லவன். சிறந்த கலைஞன். சதா சர்வகாலம் கலையைப்பற்றி அவன் சித்தம் வட்டமிட்டுக்கொண்டிருக்கும். கடுமையான எண்ணங்கள் அவன் இதயத்தில் ஒரு நாளும் தோன்றக் கூடச் செய்யாது."

அந்தக் காலத்தில் ஒரு நண்பர், என். எஸ். கேயிடம் மிக்க அன்புகொண்ட காரணத்தினால் கவிமணியை சமீபித்து அரசாங்கத்தில் 'பெரிய' பிடியுடைய ஒரு கனவானுக்குச் சிபார்சுக் கடிதம் அனுப்பத் தூண்டினார். அப்படிச் செய்வதானால் என். எஸ். கேயின் விடுதலை நிச்சயமென்றும் கூறினார். அந்த மனிதரிடம் நமது கவிமணி அடக்கமாக இவ்வாறு பதில் அளித்தார்.

"கிருஷ்ணன் குற்றமற்றவன். நகைச்சுவைத் தேனை அள்ளி வீசுபவன். தர்மவான். அவனுக்காக மனிதர்களிடம் நான் சிபார்சு செய்யப் போவதில்லை. ஆனால் ஆண்டவனிடம் எப்போதும் சிபார்சு செய்துகொண்டிருக்கிறேன். கண்டிப்பாக அவன் விடுதலை யடைவான், குற்றமற்றவனென்று." கவிமணி கடவுள் பக்தியுடையவர். கடவுள் பக்தி யென்று சொன்னதும் கோயிலுக்குச் சென்று தரகர்களுக்கு லஞ்சம் நல்கி விக்கிரகத்தை வலம் வந்து தண்டனிட்டு மண்டிபோட்டு வணங்கும் வழக்கமுடையவரென்று கருதிவிடாதீர்கள். சகல நற்குணங்களின் திருவுருவமே (Embodiment of all good qualities) கடவுள் என்ற உயரிய கொள்கையுடையவர். பலி கொடுக்கும் கொடுமையைக் கொளுத்த வேண்டு

மென்ற தீவிர எண்ணம் கொண்டவர். உள்ளத் தாமரையில் உலகெல்லாம் கண்டு உணரலாம் என்று உரைப்பவர். சுத்தமான மனதில் சுயம் சோதியைக் கண்டு களிக்கலாம் என்ற சித்தாந்தமுடையவர்.

கவிமணி, கலைவாணர் ஆகிய இரு பெரியார்களிடம் நெருங்கிப் பழகும் பாக்கியம் கிடைத்தவன் நான். எனக்குத் தெரிந்த அளவில் கலைவாணர் அன்பை ஆண்டவனாகக் கருதுபவர் என்று தைரியமாகச் சொல்கிறேன். நாட்டில் மக்கள் உடைப் பஞ்சத்தாலும் உணவு நெருக்கடியாலும் துன்புறும்போது கல்லுப் பிள்ளையாருக்குப் பாலாபிஷேகமும் பட்டாடை அணிவதும் மதியீனமென்பது கலைவாணரின் கட்சி.

கலைவாணரின் தந்தை இறந்த துக்கத்தை விசாரிப்பதற்காக கவிமணி சென்றிருந்தார். துக்கமெல்லாம் விசாரித்த பிறகு புறப்படும்போது என். எஸ். கேயிடம், "அப்பா போய்விட்டார். சந்தோஷம்" என்று கூறிச் சிரித்தார். இதென்ன விந்தை! இப்படியா 'துக்கம் விசாரிப்பது என்று அங்கு கூடியிருந்தவர்கள் மூக்கின் மீது விரலை வைத்தார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் ஒருவன். கலைவாணருக்குச் சற்று திகைப்புத்தான். இதைக் கண்ட கவிமணி, "என்னப்பா, கிருஷ்ணு! விழிக்கிருய்? நான் சொன்னது உண்மை. அப்பா இறந்தமைக்கு வருத்தம்தான். ஆனுல் இளவரசர் பட்டத்திற்கு வந்தது பற்றி (குடும்பப்பட்டம்) சந்தோஷம். ரொம்ப சந்தோஷம் என்றுதான் சொன்னேன். இப்போ சரிதானே" என்று விளக்கம் கொடுத்தார்.

கவிமணியின் பாடல்களை வெகு நன்ருகக் கலைவாணர் படித்துச் சுவைத்திருக்கிரு ரென்பதற்கு அவர்

அண்மையில் எழுதி பிரசுரமான கட்டுரையின் பகுதி யொன்றைக் கீழே தருகிறேன்.

## சிறையில் கற்றேன்!

"குற்றம் செய்தவர்களை அடைத்துப் பூட்டிவைக்கும் சிறையில் எதைக் கற்றுக்கொண்டேனென்று நினைக்கின் றீர்கள்? நிஜமாகச் சொல்கிறேன். அங்கே பல அபூர்வ விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்.

எங்கும் பேசப்படும் இன்பப்பொருள், வாழ்க் கைக்குப் பயன்படும்-ஏன் - வாழ்க்கையை உருப்படுத்தும் உயரிய பாடம். "அப்படி என்ன ஐயா! பிரமாதமான விஷயத்தைத் தெரிந்து கொண்டுவிட்டீர்" என்று எளி தாக எண்ணிடாதிர்கள்.

சுதந்திரம் என்றால் என்ன என்பதை கசடறக் கற்றுக் கொண்டு விட்டேன். கசடறக் கற்றபடியால் அதற்குத் தக நிற்பது சாத்தியந்தானே! வள்ளுவரும், "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று தானே சொல்லி வைத்திருக்கிறார். கசடறக் கற்றபின் அதற்குத் தகுந்த படி நடக்க வேண்டுமென்பது பொருள். வெளியே யிருக்கும்போது சுதந்திரத்தைப் பற்றிக் கசடறப் புரிந்து கொள்ளவில்லை. இதனால்தான் தேசத்தலைவர்கள், சீர் திருத்தவாதிகள் முதலானோர் சிறைக்குப் போகிறார்களோ என்னவோ!

அங்கே கட்டுப்பாடு மிக அதிகம். யந்திர வேலை மாதிரி எல்லாம் நடக்கவேண்டும். கட்டுப்பாடும் கண்டிப்பும் ஏற்பட்டமையால் சுதந்திரத்தின் மதிப்பு நன்றாகத் தெரியவந்தது. "சிறையில் உமக்கு என்ன கஷ்டம்?" என்று கேளுங்கள். ஒரு பேச்சுக்காவது என் னிடம் கேளுங்கள். உண்மையில் கஷ்டமேயில்லை. ஆனால் ஒரு கஷ்டமிருந்தது. அது பெரிய கஷ்டமுங்கூட; அதுதான் ஜெயிலில் இருக்கிறோமே என்பது. இப்போ சுதந்திர வாழ்வின் சிறப்பு தெளிவாகத் தெரியவருகிறது.

சிறையிலுள்ள கைதி அவன் நினைத்தபடி ஒன்றுமே செய்யமுடியாது. தூக்கம் வராவிட்டாலும் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கியாக வேண்டும். கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். இப்படி எல்லா விஷயங்களிலும். போதாதா கஷ்டத்திற்கு.

"கிருஷ்ணன் ஜெயிலிலே 'ஜாலி'யாகத்தானிருக்கான்" என்று வெளியே பலர் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். உண்மையில் என்மனம் அடைந்த வேதனையின் அளவு சொல்லித் தெரிவிக்க முடியாது. சிறைக் கம்பிகளைத் தாண்டி பொது ஜனங்களை எப்போ காண்பேனே என்று துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தது உள்ளம்.

சிறை செல்வோர் மூன்று ரகம். மக்களுக்கு நல்லது சொல்லும், நன்மையைச் செய்துகாட்டும் அரசியல் புரட்சிவீரர்கள், கிரிமினல் குற்றவாளிகள், அதாவது உண்மையில் குற்றம் செய்து தண்டிக்கப்பட்டவர்கள், நிரபராதிகளாகயிருந்து குற்றவாளிகளென்று நியாய மன்றத்தாரால் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள். இவர்களில் முதலிரண்டு கூட்டத்தாருக்கும் ஒருவித நிம்மதியுண்டு. நாட்டுக்காகச் சிறை சென்றோம் என்ற நிம்மதி தேசத் தலைவர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் உண்டு. சிறையை வலுவிலேயே கைப்பற்றியவர்கள் இக்கூட்டத்தார். தெரிந்து போவதினால் மனச்சாந்தி ஏற்படுவது சகஜந்தானே.

இரண்டாவதாக உண்மையிலே குற்றம் செய்து சிறை சென்றவர்களுக்கும் மனநிம்மதி ஏற்பட இடமுண்டு. வெளியே காட்டிக்கொள்ளாவிடினும் மனதுக்குள்ளே, "நாம் குற்றம் செய்தோம்; அநுபவிக்கிறோம்" என்ற எண்ணம். மூன்றாவதாகவுள்ள நிரபராதிகள் சிறையில் தள்ளப்படுவதைச் சற்று யோசித்துப்

பாருங்கள்! இந்தக் கூட்டத்தைச் சார்ந்தவன் நான். மனத்திலுல்கூட தீய எண்ணம் மருந்துக்கும் நினையாதவன். எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்பதே என் லட்சியம். ஏழையென்றும் அடிமையென்றும் எவரும் இந்நாட்டில் இருக்கக்கூடாது என்ற எண்ணம் கொண்டவன் நான். அதற்காக அறிவு வந்த நாள் முதல் இயன்ற அளவு தொண்டு புரிபவன் நான். இப்பேர்ப் பட்ட ஒருவர் இரண்டரை வருடகாலம் இருட்சிறையில் தள்ளப்பட்டால் அவர் மனோ நிலை எப்படியிருந்திருக்கும்? சற்றே எண்ணிப் பாருங்கள். காருண்யம் வாய்ந்த கவர்ன்மெண்டார் ஒரு நிரபராதியை இரண்டரை வருட காலம் சிறையில் அடைத்துவைத்திருந்தார்கள். அதன் பிறகு உண்மையைத் தெரிந்து நிரபராதி என்று கூறி என்னை வெளியே கொண்டு வந்து விட்டார்கள். நான் உங்கள் முன் நிற்கிறேன். ஒருவரின் நிரபராதத் தன்மையை உணருவதற்கு நமது கருணை நிறைந்த கவர்ன் மெண்டுக்கு முப்பது மாதகாலம் பிடித்தது. "எந்த வித மான குற்றமும் செய்யவில்லையே, அது மட்டுமா இயன்ற மட்டும் குணமும் செய்திருக்கிறோம். அப்படி யிருந்தும் நமக்கு ஏன் இந்தத் தண்டனை" என்ற எண்ணம் என்னை அலைக்கழித்து வந்தது. சிறையிலிருப்பதைவிட இந்த எண்ணம் என்னை மிகவும் வாட்டியதென்றே சொல்ல வேண்டும். பழைய ஞாபகங்களெல்லாம் கண் முன் வந்து நின்றன. குற்றம் செய்ததாக வொன்றுமே காணப் படவில்லை. கவலை மூளையைக் கருக்கவைத்தது.

இப்படி நினைந்து நினைந்து நெஞ்சைப் புண்ணுக்கிக் கொண்டிருந்த வேளையில் "ஆரியமாலாவில் நீங்க ஆக்ட் பண்ணினது ரொம்ப பேஷ்" என்று சிறையில் என்னுட னிருந்த டாக்டர் நண்பர் ஒருவர் சொன்னுர். ஆரிய மாலாவைக் குறிப்பிட்டதும் அந்தக் கதை ஞாபகம்

வந்தது. அதில் அண்ணன் கிளியானது ஞாபகம் வந்தது. உடனே கிளி, நான் சிறைக்குச் சென்ற காரணத்தைக் கற்றுத் தந்தது. எப்படி?

காட்டில் இரைதேடி, ஆற்றுத் தண்ணீரை அருந்தி விட்டு ஆனந்தமாக ஆகாயத்தில் பறந்து திரியும் கிளியை மனிதர் பிடித்து கூண்டில் அடைத்து வைக்கிறார்கள். அது ஏன்? ஆகவே குற்றம் செய்யாதவர்களும் சிறையில் தள்ளப்படுவதுண்டு என்பதைக் கூண்டுக் கிளி எனக்குக் கற்றுத்தந்தது.

இதுபற்றி மீண்டும் சிந்தித்தேன். சிறையில் இரவு ஏது தூக்கம்? ஓயாச் சிந்தனைதானே! நான் படித்த ஒரு பாட்டு ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் பாட்டிலிருந்து ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டேன். நிரபராதிகள் நிச்சயமாக விடுதலை பெறுவார்களென்று. எப்படித் தெரியுமா? பொது ஜனங்கள் இது பற்றி சும்மாவிருக்க மாட்டார்கள். இருக்கவும் முடியாது. பொது மக்கள் நினைத்தால் சாதிக்காதது பூமியில் உண்டா? அன்பர்கள் மனம் ஆறுகி துயரடைந்தது. கூட்டம் போட்டார்கள். தீர்மானம் நிறைவேற்றினார்கள். தமிழ் நாட்டிலுள்ள குக்கிராமங்களிலுங்கூட கூட்டம் போட்டு தீர்மானங்கள் நிறைவேற்றி அரசாங்கத்தாருக்கு அனுப்பிய வண்ணமாக விருந்தார்கள். நகர சபைகள் பல இம்மாதிரி தீர்மானங்கள் நிறைவேற்றின. இதுதான் என் விடுதலைக்கு முக்கிய காரணம்.

நல்லவர்கள் மனம் நொந்தால் நாடு அதை சகித்துக் கொண்டு நீண்ட காலமிருக்காது என்று பேரறிஞன் ரூஸோ சும்மாதானா சொல்லிவைத்தான். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இந்தக் கருத்தை உள்ளடக்கிப் பாடிய

பாட்டு இப்போதே என் மூளையில் வந்து குந்திக் கொண்டது.

" கூவிப் பறக்குமொரு-கிளியினைக்
கூண்டிலடைத்து வைத்தால்—தேவர்
உலகமெல்லாமது—சினத்
தீயை எழுப்பிடாதோ......"
மன்னிய சோலையிலே—ஒரு குயில்
வாடி வதங்குமெனின்
கின்னரர் கிம்புருடர்—தளர்ந்து தம்
கீத மிழப்பாரையோ "

தேவர்கள் என்றால் நல்லவர்கள் என்பது பொருள். இங்கே பொதுமக்கள், அன்பர்கள் துள்ளியெழுந்தார்கள். கிளர்ச்சி செய்தார்கள். கிளியும் வெளிவந்துவிட்டது. உல்லாஸமாக பறந்து திரியுது; காற்றிலே அதன் கீதம் மிதந்து வருகிறது. அன்பர்கள் கண்டும் கேட்டும் பூரிப் படைகிறார்கள் ; பூமாலை சூட்டுகிறார்கள். இந்த விஷயத்தை எனக்குக் கற்றுத் தந்தது சிறைதானே !

யமன் கடைவாயிலிருந்து கணவன் உயிரை சாவித்திரி மீட்டுக்கொண்டு வந்ததாகக் கதையில் படிக்கிறோம். அப்பப்பா ! என்று மூக்கின்மேல் விரலை வைத்து ஆச்சரி யப்படுகிறோம். நல்லதுதான். ஆனால் எனது வாழ்க்கைத் துணைவியார் திருமதி மதுரம், கதையிலுள்ள சாவித்ரி யையும் கொஞ்சம் மிஞ்சிவிட்டாரென்று நான் தைரிய மாகச் சொல்லுகிறேன். ஜென்மதண்டனை யடைந்த சத்யவானான என்னை கடல் கடந்து கப்பலேறி சட்டத்தை நியாய வழிக்குத் திருப்பி, முன்பு தண்டிக்கப்பட்ட நியாய மன்றத்திலே நிரபராதி என்று தீர்ப்புக்கூறச்செய்து

வெளியே கொண்டு வந்தார். மதுரமும் ஒரு சாவித்திரி தானே! கதையில் அல்ல; அநுபவ வாழ்க்கையில்.

(உதயவாணி)

நிரந்தரமாகக் கவிமணியின் பெயரும் உருவமும் இந்நாட்டில் நிலைபெற்று நிற்குமென்றாலும், அதற்கு தன்னாலியன்ற தொண்டு புரியவேண்டுமென்ற நன்றி யுள்ளத்தை—கலைஞனைக் கலைஞன் காமுறும் மாசற்ற மனப்பான்மையை சிறையிலிருந்து வெளிவந்ததும் எடுத்த முதல் திரைப்படமாகப் "பைத்தியக்காரனி"ல் நீங்கள் பார்த்திருக்கிறீர்களென்று சொல்லத் தேவையில்லை. நாஞ்சி நாட்டிலுள்ள திருவெண்பதிசாரம் என்ற ஊரில் விளங்கிவரும் விவேகாபிவிருத்தி புத்தக நிலையத்தில் 6–1–1944-ல் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், கவிமணி தேசிகவிநாயகன் மீது பாடிக்கொடுத்த சிந்தையும் படித்துப் பாருங்கள். இந்த அற்புதச் சிந்தை ஆக்கியவர் உடுமலை நாராயணக் கவிராயர்.

1. தேனொடு கலந்த அடுபாகு—செந் (தே)
எங்கள்
தேசிக விநாயகன் பாடல் நிகராகும்
சீனி என செவி நாநுனிக்கும் கற்கண்டு (சீ)
மாந்தர்
சித்தமது நித்தமுநினைத்திட இனிக்கும் (தே)

2. பெருமக்கள் வாழ்வுறுதி பெறவும் அன்பினொடு (பெ)
பிறர்
தருமக்கள் உறவைத்தரணியுற்றுணரவும் (பெ)
மருமக்கள் வழியின் மான்மியமே நாஞ்சில் (மரு)

பேசும்

மாசறு சிகாமணி கலாநிதி யுதயமே (மரு)

3. பாமணம் வீசும் மலர்மாலை ஏடவிழ் (பா)

ஏடவிழ்

பதுமமுறு கலைமயிலும் நடனமிடு சோலை

கோமகன் குடிக ளெல்லோரும் வாழும் (கோ)

ஒன்று

கூடிவளர் எழில் நாஞ்சி நாடுதவப்பேறு (பா)

4. கற்பனை நயத் தோடொசிந்து சொல்லுங் (கற்)

கன்னிக்

கவிமணித்திரள் கொழித்திடு தமிழ்ச்சிந்து

நற்புல வருக்குள் முதலாளி கற்ற (நற்)

நீடூழி

நமதுகுரு தேசிக விநாயகன் வாழி (நற்)